தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக
நிருபர்கள் தேவை (Freelancer)
நமது ஆனந்த பாஸ்கர், பேப்பர்பாய் மற்றும் தமிழ்நாடுஇபேப்பர் நாளிதழ்களுக்கு பணியாற்ற தொண்டுள்ளம் கொண்ட தன்னார்வளர்கள் (freelancer) அடிப்படையில் நிருபர்களாக பணியாற்ற, மக்கள் தொடர்பு அதிகம் உள்ள பத்திரிக்கை துறையில் ஆர்வம் உள்ளவர்கள், தமிழகம் முழுவதும் பின்கோடு வாரியாக நிருபர்கள் தேவை.
NEWS
www.vaniks.com
No Monthly Commitments
9337501889, 7789941009



# தமிழ்நாடு இபேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

CHENNAI | Volume- 3 | Issue:234 | 10-03-2026 | செவ்வாய்க்கிழமை | Free E- Paper | ● சென்னை ● மதுரை ● கோவை ● திருச்சி



MLM SOFTWARE Company
- Binary MLM Plan
- Single Leg MLM Plan
- Autopool MLM Plan
- Unilevel MLM Plan
- Matrix MLM Plan
- Stairstep MLM Plan
- Party MLM Plan
- Board MLM Plan
- Generation MLM Plan

PRICE STARTING Rs.9999/-
+91 98537 19337


## இன்றைய பஞ்சாங்கம்

10.03.2026 மாசி 26
செவ்வாய் கிழமை

சூரிய உதயம் 6.26

திதி:
இன்று முழுவதும் சப்தமி.

நட்சத்திரம்:
இன்று இரவு 7.16 வரை
அனுஷம் பின்பு கேட்டை.

யோகம் :
இன்று காலை 8.37 வரை
ஹர்ஷனம் பின்பு வஜ்ரம்.

கரணம்
இன்று பிற்பகல் 1.00 வரை
பத்திரை பின்பு பவம்.

அமிர்தாதி யோகம் :
இன்று முழுவதும் சித்த யோகம்.

சந்திராஷ்டமம் :
இன்று இரவு 7.16 வரை
அசுவினி பின்பு பரணி.

நல்ல நேரம்
காலை 7.30 – 8.30.
மாலை 4.30 – 5.30.

இராகு காலம்
பிற்பகல் 3.00 – 4.30.

எமகண்டம்
காலை 9.00 – 10.30.

குளிகை
பிற்பகல் 12.00 – 1.30.

ஜோதிட நிபுணர்:
இராஜபாளையம்
இராமமூர்த்தி
செல்: 8189908040

# "இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க பராமரிப்பு சார்ந்த பொருளாதாரம்"

**பிரதமர் மோடி**

**புதுடெல்லி, மார்ச் 10:**

குழந்தைகளை பராமரித்தல், முதியோர்களை பராமரித்தல், சுகாதாரத்தை பராமரித்தல் உள்ளிட்ட பராமரிப்பு சார்ந்த பொருளாதாரம், இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்பை அளிப்பதாக இருக்கும் என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

பட்ஜெட்டுக்குப் பிந்தைய கருத்தரங்கில் உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி, "கல்வி, திறன் மேம்பாடு, சுகாதாரம், சுற்றுலா, விளையாட்டு, கலாச்சாரம் போன்ற துறைகள் மக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவதற்கான முக்கிய வழிகளாகச் செயல்படுகின்றன. பொதுமக்களின் விருப்பங்களை நிறைவேற்றுவது என்பது ஒரு திட்டமட்டுமல்ல. இந்த பட்ஜெட்டின் நோக்கமும் இந்த அரசாங்கத்தின் தீர்மானமும் இதுதான்.

நோய்கள் வராமல் தடுப்பதையும், முழுமையான சுகாதாரத்தையும் தொலைநோக்குப்பார்வையாகக் கொண்டு இந்தியா செயல்பட்டு வருகிறது. சமீப ஆண்டுகளில் நாட்டின் சுகாதார உள்கட்டமைப்பு கணிசமாக விரிவடைந்துள்ளது.

நூற்றுக்கணக்கான மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் திறக்கப்பட்டுள்ளன. ஆயுஷ்மான் பாரத் திட்டம், ஆரோக்கிய மையங்கள் ஆகியவற்றின் மூலம் ஒவ்வொரு கிராமத்துக்கும் சுகாதார சேவைகளின் அணுகல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. நமது பாரம்பரிய முறைகளான யோகாவும், ஆயுர்வேதமும் உலகம் முழுவதும் பிரபலமடைந்து வருகின்றன.

குழந்தைகளை பராமரித்தல், முதியோர்களை பராமரித்தல், சுகாதாரத்தை பராமரித்தல் உள்ளிட்ட பராமரிப்பு சார்ந்த பொருளாதாரம், இளைஞர்களுக்கு பெரிய அளவிலான வேலைவாய்ப்புகளை உருவாக்கும். சுகாதாரத்துறையில் திறன் சுற்றுச்சூழல் அமைப்பை வலுப்படுத்த புதிய பயிற்சி மாதிரிகளை பரிந்துரைக்குமாறு சுகாதாரத்துறை நிபுணர்களை நான் கேட்டுக்கொள்கிறேன்.

சுகாதாரத்துறையில் டிஜிட்டல் மாற்றங்கள் அதிகரித்து வருகின்றன. தொலைதூரப் பகுதிகளில் மருத்துவ சேவைகளுக்கான அணுகலை மேம்படுத்துவதில் தொலை மருத்துவத்தின் பங்கு அதிகரித்து வருகிறது. இதன் நன்மைகளை விரிவுபடுத்த அதிக விழிப்புணர்வும் எளிதான அணுகலும் தேவை.

நிஜ உலக பொருளாதாரத்துடன் நமது கல்வி முறையை இணைக்கும் செயல்முறையை நாம் மேலும் துரிதப்படுத்த வேண்டும். செயற்கை நுண்ணறிவு மற்றும் ஆட்டோமேஷன், டிஜிட்டல் பொருளாதாரம், வடிவமைப்பு சார்ந்த உற்பத்தி போன்ற பாடங்களில் நமது கவனத்தை அதிகரிக்க வேண்டும்.

புதுமை சார்ந்த பொருளாதாரத்தை நோக்கி இந்தியா சீராக நகர்ந்து வருகிறது. கல்வி நிறுவனங்கள் தங்கள் வளாகங்களை தொழில்துறை ஒத்துழைப்பு மற்றும் ஆராய்ச்சி சார்ந்த கற்றல் மையங்களாக மாற்ற வேண்டும். ஆராய்ச்சி மற்றும் புதுமைகளுக்கு அதிக ஆதரவு அளிக்கப்பட வேண்டும். புதிய யோசனைளைப் பரிசோதிக்கவும், அவற்றில் பணியாற்றவும் இளம் ஆராய்ச்சியாளர்களுக்கு முழு வாய்ப்பு கிடைக்கும் ஒரு ஆராய்ச்சி சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

வளர்ந்து வரும் துறைகளில் பெண்களுக்கு சம வாய்ப்புகளை உறுதிப்படுத்துவது முக்கியம். எதிர்கால தொழில்நுட்பங்களுக்கு நாம் தயாராகி வரும் நிலையில், வாய்ப்புகள் இல்லாததால் எந்த மகளும் பின்தங்கிவிடக்கூடாது.

கடந்த சில ஆண்டுகளில் விளையாட்டு, தேசிய வளர்ச்சியின் ஒரு முக்கிய நீரோட்டமாகக் கருதப்படுகிறது. கேலோ இந்தியா போன்ற முயற்சிகள் விளையாட்டு சுற்றுச்சூழல் அமைப்புக்கு புதிய சக்தியை அளித்துள்ளன. தற்போது நாடு முழுவதும் விளையாட்டு உள்கட்டமைப்பு வலுப்படுத்தப்பட்டு வருகிறது.

வேலைவாய்ப்பை அதிக அளவில் அளிப்பதில் சுற்றுலா மற்றும் கலாச்சாரத்துக்கு உள்ளது. புதிய சுற்றுலாத் தலங்களை உருவாக்குவது, நகர பிராண்டிங்கை மேம்படுத்துவது ஆகியவை உள்ளூர் பொருளாதார வளர்ச்சியை ஆதரிக்க உதவும்.

பயிற்சி பெற்ற வழிகாட்டிகள், விருந்தோம்பல் திறன்கள், டிஜிட்டல் இணைப்பு, சமூக பங்கேற்பு ஆகியவை நமது சுற்றுலாத்துறையின் தூண்களாக மாறி வருகின்றன. தேசிய வளர்ச்சியை விரைவுபடுத்த அரசு நிறுவனங்கள், தொழில் மற்றும் கல்வித்துறைக்கு இடையே வலுவான ஒருங்கிணைப்பு அவசியம். இத்தகைய முயற்சிகளால் வளர்ந்த இந்தியாவுக்கான அடித்தளம் மேலும் வலுப்படுத்தப்படும்" என தெரிவித்தார்.



# மாநிலங்களவைத் தேர்தல்: தம்பிதுரை, திருச்சி சிவா உள்பட 6 பேரும் போட்டியின்றித் தேர்வு!



**புதுடெல்லி, மார்ச் 10:**

தமிழ்நாட்டில் இருந்து மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட்ட தம்பிதுரை, அன்புமணி, திருச்சி சிவா உள்ளிட்ட 6பேரும் போட்டியின்றித் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலிருந்து மாநிலங்களவை எம்.பி.யான திமுகவின் திருச்சி சிவா, என். ஆர். இளங்கோ, அந்தியூர் செல்வராஜ், கனிமொழி சோமு, அதிமுகவின் தம்பிதுரை மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் ஆகியோரது பதவிக்காலம் வரும் ஏப்ரல் 2 ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

இதையடுத்து தமிழ்நாடு உள்பட நாட்டில் 10 மாநிலங்களில் காலியாக உள்ள 37 மாநிலங்களவை இடங்களுக்கு மார்ச் 16 ஆம் தேதி தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் காலியாகவுள்ள 6 இடங்களில் அதிமுக சார்பில் தம்பிதுரையும் அதிமுக கூட்டணியில் பாமகவின் அன்புமணியும் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர்.

அதேபோல திமுக சார்பில் திருச்சி சிவா, பேராசிரியர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், கூட்டணியில் காங்கிரஸ் சார்பில் கிறிஸ்டோபர் திலக், தேமுதிக சார்பில் எல்.கே. சுதீஷ் ஆகிய 4 பேர் வேட்புமனு தாக்கல் செய்திருந்தனர். கடந்த மார்ச் 6 ஆம் தேதி வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை நடைபெற்ற நிலையில் 6 பேரின் வேட்புமனுக்களும் ஏற்கப்பட்டன.

வேட்புமனுவை வாபஸ் பெற இன்று இறுதிநாள் ஆகும். வேறு யாரும் போட்டியிட்டால் தேர்தல் நடைபெறும் என்ற சூழ்நிலையில் இதுவரை வேறு யாரும் வேட்புமனு தாக்கல் செய்யாததால் மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிட்ட 6 பேரும் போட்டியின்றித் தேர்வு செய்யப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அதிமுக சார்பில் போட்டியிட்ட தம்பிதுரை, அன்புமணி ஆகியோருக்கு வெற்றிச் சான்றிதழ் முதலில் வழங்கப்பட்டது. தொடர்ந்து திமுக மற்றும் கூட்டணியைச் சேர்ந்த திருச்சி சிவா, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், காங்கிரஸின் கிறிஸ்டோபர் திலக், எல். கே. சுதீஷ் ஆகியோருக்கும் வழங்கப்பட்டது. இவர்கள் 6 பேரும் மாநிலங்களவைக்கு எம்.பி.யாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

கட்சி எம்எல்ஏக்களின் ஆதரவு இல்லாததாலும் வேட்புமனுவை முழுமையாக நிரப்பாததாலும் பாமகவின் ராமதாஸ் ஆதரவு வேட்பாளர் சுவாமிநாதனின் மனு மட்டும் நிராகரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தமிழக கவர்னராக ஆர்.வி.ஆர்லேகர் 12-ம் தேதி பதவி ஏற்பு



**சென்னை, மார்ச் 10:**

தமிழக கவர்னர் ஆர்.என். ரவி மேற்கு வங்காள கவர்னராக நியமிக்கப்பட்டார். இதை தொடர்ந்து கேரள கவர்னர் ஆர். வி.ஆர்லேகர் தமிழக கவர்னர் பொறுப்பையும் கூடுதலாக கவனிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார்.

இதைதொடர்ந்து ஆர். வி.ஆர்லேகர் நாளை மறுநாள் சென்னைக்கு வருகிறார். அதே நாளில் ஆர்.என்.ரவி, தமிழக கவர்னர் பொறுப்பில் இருந்து செல்கிறார். அவரை கவர்னர் மாளிகை அதிகாரிகளும், ஊழியர்களும் வழியனுப்பி வைக்கிக்கின்றனர்.

இதையடுத்து தமிழக கவர்னராக கூடுதல் பொறுப்பேற்கும் ஆர். வி.ஆர்லேகர் 12-ம் தேதி மதியம் 12 மணியளவில் பதவி ஏற்கிறார். ஐகோர்ட்டு தலைமை நீதிபதி எஸ்.ஏ.தர்மாதிகாரி அவருக்கு பதவி பிரமாணம் செய்து வைக்கிறார். இந்த பதவி ஏற்பு நிகழ்வு எளிமையாக நடைபெற உள்ளது.

# மேற்காசிய போர்: இந்தியா நிலைப்பாடு என்ன?

## மாநிலங்களவையில் ஜெய்சங்கர் விளக்கம்!

**புதுடெல்லி, மார்ச் 10:**

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் கட்ட அமாவு இன்று தொடங்கியிருக்கும் நிலையில், மேற்காசிய போர் குறித்து மாநிலங்களவையில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் விளக்கம் அளித்தார்.

நாடாளுமன்ற பட்ஜெட் கூட்டத் தொடா் கடந்த ஜன. 28-ஆம் தேதி குடியரசுத் தலைவா் உரையுடன் தொடங்கியது. கடந்த பிப்.13-ஆம் தேதியுடன் முதல்கட்ட அமா்வு நிறைவடைந்தது.

இந்த நிலையில், இரண்டாம் கட்ட அமர்வு இன்று காலை தொடங்கிய நிலையில், அமெரிக்கா, இஸ்ரேல் - ஈரான் இடையே நடைபெறும் போர் குறித்து மாநிலங்களவையில் வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் விளக்கம் அளித்தார்.



மேற்காசிய போர் விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் கோரிக்கை மறுக்கப்பட்டதால், எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சி எம்பிக்களின் தொடர் அமளிக்கு மத்தியில் ஜெய்சங்கர் உரையாற்றினார்.

ஜெய்சங்கர் பேசியதாவது:

"மேற்காசிய நாடுகள் மோதல் குறித்து மத்திய அரசு கவலை தெரிவித்து பிப். 20 ஆம் தேதி அறிக்கை வெளியிட்டது. அமைதியைக் கடைப்பிடிக்க இரு தரப்பினரிடமும் கோரிக்கை வைக்கப்பட்டது. பதட்டங்களைத் தணிக்க பேச்சுவார்த்தை மற்றும் தூதரக ரீதியில் நடவடிக்கை தொடர வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்துகிறோம்.

மேற்காசிய சூழலை பிரதமர் நரேந்திர மோடி தொடர்ந்து கண்காணித்து வருகிறார். தொடர்ச்சியான மோதல் இந்தியாவுக்கு கவலை அளிக்கிறது. வளைகுடா நாடுகளில் ஒரு கோடி இந்தியர்கள் தங்கி, பணிபுரிந்து வருகிறார்கள். ஈரானிலும், ஆயிரக்கணக்கான இந்தியர்கள் இருக்கிறார்கள். வளைகுடா நாடுகள் நமது எரிசக்தி பாதுகாப்புக்கு முக்கியமான ஒன்று. நமக்கு எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகிக்கும் முக்கிய நிறுவனங்கள் இருக்கின்றன. விநியோகச் சங்கிலி சீர்குலைவு மற்றும் நிலையற்ற தன்மை ஆகியவை கடும் பிரச்னைகளாக இருக்கின்றன. மோதல் தொடர்ந்து தீவிரமடைந்து வருகின்றன. பாதுகாப்பு நிலைமை கணிசமாக மோசமடைந்துள்ளது. மற்ற நாடுகளிலும் போர் பரவி வருகின்றது. இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவைச் சேர்ந்த இரண்டு மாலுமிகள் கொல்லப்பட்டுள்ளனர். மேலும், ஒருவரைக் காணவில்லை.

தெஹ்ரானில் உள்ள பல இந்திய மாணவர்கள் இந்திய தூதரகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். வணிக நிமித்தமாக ஈரான் சென்ற இந்தியர்கள், ஆர்மீனியா வழியாக நாடு திரும்ப ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தெஹ்ரானில் உள்ள நமது தூதரகம் மிகுந்த எச்சரிக்கையுடன் முழுமையாக செயல்பட்டு வருகிறது. இந்தியர்களை பாதுகாப்பதில் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம்" எனத் தெரிவித்தார்.

## எம்பிக்கள் போராட்டம்! கார்கே, ராகுல் பங்கேற்பு!




மேற்காசிய போர் விவகாரம் குறித்து விவாதிக்க வேண்டும் என்று மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவின் கோரிக்கை மறுக்கப்பட்டதால், எதிர்க்கட்சியினர் அமளியில் ஈடுபட்டனர்.இருப்பினும், அமளிக்கு மத்தியில் மத்திய அமைச்சர் ஜெய்சங்கர் தனது உரையை நிகழ்த்தினார்.

இந்த நிலையில், நாடாளுமன்ற வளாகத்தில் மேற்காசிய போர் விவகாரத்தில் இந்திய தலைமை அமைதி காப்பதாகவும், உறுதியான பிரதமர் தேவை என்றும் குற்றம்சாட்டி எதிர்க்கட்சிகளின் எம்பிக்கள் போராட்டம் நடத்தினர்.

இந்த போராட்டத்தில் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.


ADVERTISING
FOR ALL TYPES OF NOTICE ADS
- Public Notice
- Legal Notice
- Tender Notice
- Society Notice
- Loss of Share
- Merger
- Acquisition
- AFR, UFR, etc.

for just Rs. 249/- only in Daily Print Paper
ஆனந்த பாஸ்கர்
9337501889, 7789441009
Email: anandabhaskarnews@gmail.com

Follow our WhatsApp Channel
PADMA DIGITAL BROADCAST
Tamilnadu Epaper WhatsApp channel
Scan this QR code using the CAMERA to view or follow our Channel

# திருக்குறள் குறள்-554

**கூழுங் குடியும் ஒருங்கிழக்கும் கோல்கோடிச்**
**சூழாது செய்யும் அரசு**



(ஆட்சிமுறை கெட்டுக்) கொடுங்கோலனாகி ஆராயாமல் எதையும் செய்யும் அரசன், பொருளையும் குடிகளையும் ஒரு சேர இழந்து விடுவான்.

## சிந்திக்க ஒரு நொடி



உன்னிடத்தில் உழைப்பும் உண்மையும் இருக்கும் வரை பிறர் உன்னை சொற்களால் தாழ்த்தி பேசலாமே தவிர....

செயல்களால் உன்னை ஒருவரும் வீழ்த்த முடியாது

**உஷா முத்துராமன்**

## மாசி மகத்தை முன்னிட்டு அன்னதானம்





கடலூர் மாவட்டம் புவனகிரி ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் மாசி மகத்தை முன்னிட்டு 300 நபர்களுக்கு மேல் அன்னதானம் வழங்கப்பட்டது. உபயதாரர் ஆர்ய வைஸ்ய சமாஜம் புவனகிரி. **தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## அகத்தாய்வு மூன்றாம் நிலை பயிற்சி வகுப்பு



ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், துய்யம் பூந்துறைக் கிராமம் செங்கரைப்பாளையம் மனவளக்கலை மன்ற அறிவுத்திருக்கோவிலில் மூன்று நாட்களாக அகத்தாய்வு மூன்றாம் நிலை பயிற்சி வகுப்புகளை பேராசிரியர் R.பாலமுருகன் அவர்கள் நடத்தினார். அகத்தாய்வு 3-ஆம் நிலை பயின்ற அன்பர்களுக்கு சான்றிதழ்களை அறக்கட்டளை செயலாளர் S.கிருஷ்ணன் அவர்கள் வழங்கினார். சான்றிதழ்கள் பெற்றவர்கள்:- A.ராஜலட்சுமி, R.சுமதி, G.கோகிலா, A.வசந்தாமணி, R.பிரியதர்ஷினி, G.கல்பனா, R.பிரேமலதா, S.கிருஷ்ணன், M.பாலசுப்பிரமணியன், S.சுந்தரமூர்த்தி. உடன் பேரா.R.பாலமுருகன், பேரா.K.பூமலர். வாழ்க வளமுடன் , நன்றி! வணக்கம்!

## காமராஜர் சிலைக்கு மாலை



வடசென்னை மாவட்டம் ஆர்கே நகர் தொகுதி 41வது வட்டம் காமராஜர் சிலைக்கு மாலை அணிவித்து வடசென்னை மாவட்ட துணைத் தலைவர் சண்முகம் தலித் முருகேசன்

# திருச்சி ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் மஹா கும்பாபிஷேக விழா



**திருச்சி, மார்ச்10:** ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்பாள் ஸ்வர்ண பந்தன மகா கும்பாபிஷேகம் விழா. எட்டாம் கால யாக சாலை பூஜை.. 8. 3. 2026 காலை 8:00 மணிக்கு மங்கள இசை தேசம் எங்கும் எட்டு திக்கிலும் கோவில் குடி கொண்டு இருக்கும் ஆர்ய வைஸ்ய குலம் காக்கும் அன்னை ஸ்ரீ வாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மனுக்கு எட்டாம் கால யாக சாலை பூஜை.

காலை 9:30 நாடி சந்தனம் ஸ்பர்சாஹூதி, ஹோம திரவ்ய சமர்ப்பணம். காலை 10:30 மணிக்கு பூர்ணாஹூதி, தீபாராதனை, கடங்கள் யாக சாலையிலிருந்து புறப்பாடு. காலை 11:15 விமான மஹா கும்பாபிஷேகம் காலை 11:30 மணிக்கு ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் மற்றும் பரிவார மூர்த்திகளுக்கு மஹா கும்பாபிஷேகம், மஹா தீபாராதனையும் நடைபெற்றது.

ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் கோவில் மண்டபம்... மாலை நிகழ்ச்சிகள். மாலை 5:30 மணிக்கு நிகிதா ஸ்ரீபக்தி பாடல்கள். மாலை 5:50 மணிக்கு மலைக்கோட்டை வாசவி லலிதா மண்டலி பக்தி பாடல்கள். மாலை 6:30 மணிக்கு அமிர்தவர்ஷினி, ஹர்ஷிகா, நித்திஷா பக்தி பாடல்கள். ஸ்ரீஸ்ரீஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீஸ்ரீஸ்ரீ விஜயேந்திர சரஸ்வதி சுவாமிகளின் ஆசிகளுடன்..ஜீர்ணோத்தாரண, ஸ்வர்ணபந்தன மஹா கும்பாபிஷேக விழாவிற்கு வருகை தந்த" வைஸ்ய குல குரு " ஸ்ரீஸ்ரீ பிரிக்யானந்தா சரஸ்வதி (பாலசுவாமி) சுவாமிஜி அவர்களால் வெகு சிறப்பாக மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஏராளமான ஆர்ய வைஸ்ய ஆண்கள், பெண்கள் மகா கும்பாபிஷேக விழாவில் கலந்து கொண்டு ஸ்ரீ வாசவி அம்மனை ஜெய் வாசவி ஜெய் வாசவி என்று முழக்கமிட்டு வேண்டி அருள் பெற்றனர்.வெகு சிறப்பாக நடைபெற்றது. ஸ்ர்வ ஸதகம் திரு M.G.R.குருக்கள் என்கிற 'சிவகாம சிரோண்மணி' சிவ ஸ்ரீஸ்ரீ வெங்கடேச சிவாச்சாரியார் இம்மஹா கும்பாபிஷேகத்தை வெகு சிறப்பாக நடத்தி வைத்தார்கள். மூலவர், உற்சவர்க்கும் சிறப்பு அபிஷேகங்கள் வண்ண மலர் மாலைகளால் அலங்கரித்து, ஏலக்காய் மாலையுடன், ரூபாய் நோட்டுகளால் ஆன மாலையும், தங்க ஆபரணங்களுடன் அலங்கரித்து மகா தீபாரதனையும் நடைபெற்றது.

காலை, மதியம், இரவு உணவு வழங்கப்பட்டது. கும்பாபிஷேக விழாவில் பக்தர்களுக்கு அனைவருக்கும் புனித கலச நீர் தெளிக்கப்பட்டது. திருச்சி ஸ்ரீ கன்னிகா பரமேஸ்வரி அம்மன் கோவில் நிர்வாகம். திருச்சி ஆர்ய வைஸ்ய நூட்ட இப்ப பன்றம் நகர்வாரும் கமிட்டி திருச்சி.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# அம்பலூர் ஊராட்சியில் அனைத்து மகளிர் கூட்டமைப்பு சார்பில் மகளிர் தின விழா



**திருப்பத்தூர், மார்ச் 10:** உலக மகளிர் தினத்தை முன்னிட்டு திருப்பத்தூர் மாவட்டம் அம்பலூர் ஊராட்சியில் அனைத்து மகளிர் கூட்டமைப்பு சார்பில் மகளிர் தின விழா சிறப்பாக நடைப்பெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளராக ஊராட்சி மன்ற தலைவர் A.P.முருகேசன் கலந்து கொண்டு கேக் வெட்டி இனிப்புகள் மற்றும் பரிசுகள் வழங்கினார்கள். இதில் துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஹேமசந்திரன்,பணி மேற்பார்வையாளர் போர்டின்,துணைதலைவர் N.நர்மதா,மகளிர் கூட்டமைப்பு நிர்வாகிகள் M.இந்துமதி,R.சபிதா,R.திலகவதி,P.கவியரசி,V.புன்னகை மற்றும் வார்டு உறுப்பினர்கள்,மகளிர் சுய உதவி குழுவினர் கலந்து கொண்டனர்

# பாரதி வித்யா மந்திர் ஆங்கில நர்சரி பிரைமரி பள்ளியில் 29 வது ஆண்டு விளையாட்டு விழா பரிசளிப்பு



**வாடிப்பட்டி, மார்ச்.10:** மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே தாதம்பட்டி மேட்டுப் பெருமாள் நகர் விஷ்வ பாரதி வித்யா மந்திர் ஆங்கில நர்சரி பிரைமரி பள்ளியில் 29 வது ஆண்டு விளையாட்டு விழா பரிசளிப்பு நடந்தது.

இந்த விழாவிற்கு போலீஸ் இன்ஸ்பெக்டர் கணேசன் தலைமை தாங்கி அணி வகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டு விளையாட்டு போட்டிகளை தொடக்கி வைத்து சான்றிதழ் மற்றும் மெடல் பரிசுகள் வழங்கினார். பள்ளி முதல்வர் எஸ் எஸ் குபேந்திரன், துணைத் தாளாளர் சுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆசிரியர் சாமிலி வரவேற்றார்.

இந்த விளையாட்டுப் போட்டியில் மாணவ மாணவிகள் நாற்காலி, குடை வடிவ உடற்பயிற்சிகள், பிரமிடுகள், பாட்டிலில் நீர் நிரப்புதல்,சிறுவர் ஒட்டம், உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடந்தது. இதில் ஏராளமான பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். முடிவில் ஆசிரியர் அனிதா நன்றி கூறினார்.

# தவெக வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம் என பத்திரத்தில் அச்சிட்டு அதன் நகலை பொதுமக்களிடம் வழங்கி ஆதரவு கோரிய தவெக தொண்டரணியினர்



**சீர்காழி , மார்ச் , 10:** மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியை அடுத்த மங்கைமடத்தில் நிச்சயம் வெல்வோம் 2026 மாவட்டங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் அறிவித்த வாக்குறுதிகளான விவசாயிகள் மற்றும் கிராமப்புறம் மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் எல்லை பிரச்சினைகள், வேலைவாய்ப்பு மற்றும் திறன் மேம்பாடு,கல்வி மற்றும் சுகாதாரம், அன்னபூரணி சூப்பர் 6 என உள்ளடக்கிய 40க்கு மேல் வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றுவோம் என ரூ100 பத்திரத்தில் அச்சிட்டு அதன் நகல் பிரதிகளை தவெக தொண்டரணியின் மாவட்ட பொறுப்பாளர் தளபதி தினேஷ் தலைமையில் மங்கைமடம் கடைவிதியில் உள்ள வர்த்தக நிறுவனங்கள் ஆட்டோ ஓட்டுநர்கள் மற்றும் பொது மக்களிடையே வாக்குறுதிகளை கூறி விசில் சின்னத்திற்கு வாக்களிக்க ஆதரவு திரட்டினார்.

இதில் மாவட்ட தொண்டரணியை சேர்ந்த டார்வின், வழக்கறிஞர் சிவா, திலீப், மதுபாலன், புவனேஷ், ஐயப்பன் மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு நகல் பிரதிகளை பொது மக்களிடையே வழங்கினார்கள்.

# காட்பாடி கல்புதூரில் மழலையர் பள்ளி ஆண்டு விழா: காட்பாடி ரெட்கிராஸ் அவைத்தலைவர் ஜனார்த்தனன் பரிசுகள் வழங்கல்!

**வேலூர், மார்ச் 10:** காட்பாடி மெட்டுக்குளம் இஹன்ட் மழலையர் பள்ளியின் ஆண்டு விழா கல்புதூரில் உள்ள தனியார் மண்டபத்தில் நடைபெற்றது. ஆண்டு விழாவிற்கு பள்ளியின் நிர்வாக இயக்குநர் பிரித்தி தலைமை தாங்கினார். தலைமையாசிரியை ஹீரா வரவேற்று பேசினார். காட்பாடி ரெட்கிராஸ் சங்கத்தின் அவைத்தலைவர் முனைவர். செ.நா.ஜனார்த்தனன், பாத் பைன்டர்ஸ் அறக்கட்டளையின் இயக்குநர் ஆர்.சுதாகர், ஓய்வுபெற்ற மாவட்ட கல்வி அலுவலர் கோ.பழனி ஆகியோர் முதன்மை விருந்தினர்களாக பங்கேற்று மாணவர்களுக்கு பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கி பாராட்டி பேசினர். கடந்த ஒரு ஆண்டில் குழந்தைகள் கற்றல், திறமை, ஒழுக்கம் மற்றும் படைப்பாற்றல் ஆகியவற்றில் பெற்ற வளர்ச்சியை கொண்டாடும் நாள் இந்த நிகழ்ச்சியில் பள்ளி மாணவர்களின் பல்வேறு நடனம், பாடல், நாடகம் மற்றும் சிறப்பு நிகழ்ச்சிகள் மூலம் தங்களின் திறமைகளை வெளிப்படுத்தினர். மேலும், குழந்தைகளின் முயற்சி மற்றும் சாதனைகளை பாராட்டும் விதமாக விருதுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இவ்விழாவில் பெற்றோர்கள், நண்பர்கள் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



# ஸ்ரீமுஷ்ணம் ஸ்ரீபூவராகசுவாமி மாசி மக பெருந்திருவிழா 15ஆம் நாள் உற்சவம்

**கடலூர், மார்ச் 10:** கடலூர் மாவட்டம் புவனகிரி கடைவீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ பாண்டுரங்கர் பஜனை மடத்திற்கு ஸ்ரீமுஷ்ணம் அருள்மிகு ஸ்ரீபூவராகசுவாமி திருக்கோயிலில் மாசி மக பெருந்திருவிழாவை முன்னிட்டு 15 -ஆம் நாள் உற்சவத்தை முன்னிட்டு புவனகிரி கடைவீதியில் அமைந்திருக்கும் ஸ்ரீ பாண்டுரங்கர் பஜனை மடத்தில் மண்டகப்படி பூஜை நடைபெற்றது. ஏராளமான பக்தர்கள் சாமி தரிசனம் செய்தார்கள். உற்சவ உபயம்:வர்த்தகர் சங்கம் கடைவீதி புவனகிரி.



**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

# அங்கன்வாடி பணியாளருக்கு ஓய்வூதியம் உயர்வு



தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஜனவரி 24ஆம் தேதியன்று, ஓய்வு பெற்ற சத்துணவு, அங்கன்வாடி ஊழியர்களின் ஓய்வூதியம் 2000 ரூபாய் என்பதை ஓய்வு பெற்ற அமைப்பாளர், பணியாளர்களுக்கு 3400 ரூபாயாகவும், குறு அங்கன்வாடி பணியாளருக்கு ஓய்வூதியம் 2000 ரூபாய் என்பதை 3000 ரூபாயாகவும் உயர்த்தி அறிவித்தார்.

# 2026 தேர்தல் கொண்டாட்டம்



## இவர்கள் கூறுவதென்ன?

### தொகுதிப் பங்கீட்டில் 'இறங்கி வரும்' கம்யூனிஸ்ட்கள்?

புதிதாக கூட்டணிக்கு வந்த தேமுதிக-வுக்கு கூடுதல் இடங்களை ஒதுக்கிவிட்டு தங்களுக்கு ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட தொகுதிகளை திமுக குறைத்து வழங்குவதை ஏற்க மறுத்து வந்த கம்யூனிஸ்ட் கட்சிகள் தற்போது தங்கள் நிலையிலிருந்து சற்றே இறங்கி வந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.

கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு தலா 6 இடங்களை ஒதுக்கியது திமுக. அதில் தலா 2 இடங்களில் மட்டுமே அவை வெற்றி பெற்றன. இருப்பினும், 2024 மக்களவை தேர்தலில் ஒதுக்கப்பட்ட தலா இரண்டு இடங்களிலும் வெற்றிபெற்ற கணக்கை வைத்து இம்முறை தங்களுக்கு இரட்டை இலக்கத்தில் தொகுதிகளை ஒதுக்க வேண்டும் என கம்யூனிஸ்ட் கட்சிகள் கோரி வந்தன. இதற்காக, தலா 15 தொகுதிகள் அடங்கிய விருப்பப் பட்டியலையும் அவை திமுக-விடம் சமர்ப்பித்திருந்தன. இந்நிலையில், தேமுதிக உள்ளிட்ட புதிதாக கூட்டணிக்கு வந்திருக்கும் கட்சிகளுக்கும் இடங்களை ஒதுக்க வேண்டி இருப்பதால் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கு திமுக தலா 4 அல்லது 5 இடங்களை மட்டுமே ஒதுக்க முன்வந்தது. இதனால் கம்யூனிஸ்ட் தலைவர்களுக்கும், திமுக தொகுதிப் பங்கீட்டுக் குழுவுக்கும் இடையே மூன்று கட்டமாக பேச்சுவார்த்தை நடந்தும் இதுவரை இறுதி முடிவு எட்டப்படவில்லை.

இருப்பினும் திமுக கூட்டணியில் இருந்து விலக விரும்பாத கம்யூனிஸ்ட் கட்சிகள், தற்போது தங்களது நிலைப்பாட்டில் இருந்து ஒருபடி கீழே இறங்கி வந்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. இரட்டை இலக்கத்தில் தொகுதிகள் என்பதற்குப் பதிலாக கடந்த முறை ஒதுக்கியது போல் 6 இடங்களையாவது தங்களுக்கு ஒதுக்க வேண்டும், அதுவும் தங்களின் விருப்பப்பட்டியலில் உள்ள தொகுதிகளாக இருக்கவேண்டும் என கம்யூனிஸ்ட் கட்சிகள் வலியுறுத்தியுள்ளன. ஆனால், தலா 5 இடங்களுக்கு மேல் வழங்க திமுக தலைமை முன்வருமா என்று தெரியவில்லை. இன்னும் ஓரிரு நாட்களில் நடைபெறவுள்ள அடுத்தகட்ட பேச்சுவார்த்தையில் கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கான தொகுதிகள் எண்ணிக்கை இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

### "மக்களை ஏமாற்றிய திமுக மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது" - பழனிசாமி ஆவேசம்



மக்களை ஏமாற்றிய திமுக மீண்டும் ஆட்சிக்கு வரக்கூடாது, என பெருந்துறையில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில் அதிமுக பொதுச் செயலாளரும், முன்னாள் முதல்வருமான பழனிசாமி பேசினார்.

சட்டப்பேரவை தொகுதிவாரியாக, அதிமுக சார்பில் 'மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம்' என்ற பிரச்சாரக் கூட்டம் நடைபெற்று வருகிறது. அதன்படி நேற்று ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் நடைபெற்ற பிரச்சாரக் கூட்டத்தில், அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி பங்கேற்றுப் பேசியதாவது: இன்னும் 8 நாட்களில் தேர்தல் அறிவிப்பு வந்துவிடும். அடுத்த மாதம் தேர்தலே வந்துவிடும். பெருந்துறை தொகுதியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும்.

சமீபத்தில் நடைபெற்ற திமுக பொதுக்கூட்டத்தில் முதல்வர் ஸ்டாலின், "அதிமுக-வை பாஜக விழுங்கிவிடும், அதிமுக அழிந்துவிடும்" எனப் பேசியுள்ளார். அதிமுக-வை எந்தக் கொம்பன் நினைத்தாலும் அழிக்க முடியாது. அதே கூட்டத்தில் ஓ.பன்னீர்செல்வம் பேசும்போது, "அதிமுக-வில் மரியாதை இல்லை" என குற்றம்சாட்டியுள்ளார். பொதுமக்களை ஏமாற்றிய திமுக ஆட்சி மீண்டும் வரக்கூடாது என்பதே மக்களின் எண்ணம். எனவே, இங்கு தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் போட்டியிடும் வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

### 'திமுகவில் எங்களுக்கு மரியாதை இல்லை' - அதிமுகவில் இணைந்த ஓமலூர் முன்னாள் எம்எல்ஏ

சேலம் மாவட்டம் ஓமலூர் தொகுதியில் 2006-ம் ஆண்டு பாமக எம்எல்ஏ-வாக இருந்த தமிழரசு அக்கட்சியிலிருந்து இருந்து விலகி திமுக-வில் இணைந்தார். இந்நிலையில், அவர் நேற்று தனது ஆதரவாளர்களுடன் சேலத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி முன்னிலையில் அதிமுக-வில் இணைந்தார். பின்னர் செய்தியாளர்களிடம் தமிழரசு கூறியதாவது: பாமக மற்றும் வன்னியர் சங்கத்தில் 40 ஆண்டு காலம் பயணித்தேன்.

2014-ல் பாமக-வில் இருந்து வெளியேறினேன். 2019-ல் அழைப்பின் பேரில் ஆதரவாளர்களுடன் திமுக-வில் இணைந்தேன். அப்போது, எங்களை ஆதரிப்பதாகவும் பாதுகாப்பதாகவும் சொன்னார் ஸ்டாலின். ஆனால், கடந்த 7 ஆண்டுகளில் எங்களுக்கு திமுக-வில் குறைந்தபட்ச மரியாதை கூட இல்லை. மாவட்டச் செயலாளர் ராஜேந்திரன் பிரிவினையை ஏற்படுத்துகிறார். எனவே, மனமுவந்து, அதிமுக-வில் இணைந்திருக்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்

## 'எங்கள் கூட்டணிக்கு வந்தால் தகுதியான இடங்களை வழங்குவோம்' - விடாமல் விஜய்க்கு வலைவீசும் பாஜக

"தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றிக்கு விஜய் தடைக் கல்லாக இருக்கக் கூடாது. அவர் எங்களுடன் இணைந்தால் தகுதியான இடங்களை வழங்குவோம்" என விஜய்க்கு பாஜக வலைவீசி இருக்கிறது.






இதுதொடர்பாக, பாஜக செய்தி தொடர்பாளர் ஏ.என்.எஸ்.பிரசாத் நேற்று வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது: தமிழக சட்டப் பேரவைத் தேர்தல் நெருங்கி வரும் சூழலில், முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு தோல்வி பயம் வந்துவிட்டது. அந்த பீதியால் தான், கொள்கை இல்லாத 'லெட்டர் பேட்' கட்சிகளை எல்லாம் திரட்டி அண்ணா அறிவாலயத்தில் திமுக ஒரு சந்தர்ப்பவாத கூட்டணியை அமைத்துள்ளது.

நேற்று வந்த தேமுதிக-வுக்கு ராஜ்ய சபா எம்பி பதவி வழங்கியதால், கடந்த ஏழு ஆண்டுகளாக கூட்டணியில் விசுவாசமாக இருக்கும் விசிக மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் கடும் கொதிப்பில் உள்ளனர். "எங்கள் விசுவாசத்துக்கு இதுதான் மரியாதையா?" என சிறுத்தைகளும், தோழர்களும் உள்ளுக்குள் குமுறி வருகின்றனர். காலங்காலமாக திமுக-வுக்காக உழைத்த தொண்டர்களும், புதிய கட்சிகளின் வரவால் ஓரங்கட்டப்பட்டு கண்ணீரில் உள்ளனர்.

திமுக-வின் ஊழல் மற்றும் குடும்ப ஆட்சி ஒட்டுமொத்த தமிழக மக்களுக்கும் எதிரானது.

அரசை எதிர்த்து ஒரு வார்த்தை பேசினால் கூட, நள்ளிரவில் பயங்கரவாதிகளைப் பிடிப்பது போல பெரும் போலீஸ் படையுடன் வந்து கைது செய்யும் கொடுமை அரங்கேறுகிறது. ஹிட்லர் ஆட்சியில் கூட இத்தகைய அடக்குமுறைகள் இருந்திருக்குமா என்பது சந்தேகமே. தமிழகத்தின் சினிமாத் துறை இன்று முழுமையாக ஸ்டாலின் குடும்பத்தின் பிடியில் சிக்கியுள்ளது.

மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால், கருத்துச் சுதந்திரம் முழுமையாகப் பறிக்கப்படும். அடுத்த சில மாதங்களிலேயே உதயநிதி ஸ்டாலினின் மகன் இன்பநிதி, திமுக இளைஞரணி செயலாளராக முடிசூட்டப்படுவார். திமுக-வை வீழ்த்துவதே தனது லட்சியம் என தவெக தலைவர் விஜய் கூறி வருவது உண்மையானால், அவர் உடனடியாக தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இணைய வேண்டும்.

தீய சக்திகளின் தவறான ஆலோசனைகளை ஏற்று, திமுக எதிர்ப்பு வாக்குகளைப் பிரித்து, பாஜக - அதிமுக கூட்டணியின் வெற்றிக்கு அவர் தடைக்கல்லாக இருக்கக்கூடாது.

தமிழக அரசியலில் விஜய் ஒரு மாபெரும் சரித்திர நாயகனாக மாறவும், மக்கள் நல அரசியலை முன்னெடுக்கவும் இதுவே சரியான தருணம். விஜய்க்கான தகுதியான இடத்தையும் மரியாதையையும் தேசிய ஜனநாயகக் கூட்டணி நிச்சயம் வழங்கும். விஜய் இப்போதே முடிவெடுக்காவிட்டால், தேர்தல் முடிவுக்குப் பின் திமுக-வின் பாசிச கரங்கள் அவர் மீது பாயும். அவர் கட்சி நடத்தவே முடியாத நிலை உருவாகும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## திமுகவுக்கு சவாலான தொகுதிகளை காங்கிரஸுக்கு ஒதுக்கலாம்: திருநாவுக்கரசருக்கு திடீர் சந்தேகம்

சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்வது குறித்து சத்தியமூர்த்தி பவனில் நேற்று நடைபெற்ற காங்கிரஸ் ஆலோசனைக் கூட்டத்தில், "திமுக தாங்கள் வெற்றிபெற முடியாத தொகுதிகளை காங்கிரஸுக்கு ஒதுக்கக்கூடும்" என முன்னாள் மாநிலத் தலைவர் திருநாவுக்கரசர் கருத்து தெரிவித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

நேற்று நடந்த ஆலோசனைக் கூட்டத்தில் அகில இந்திய காங்கிரஸ் மூத்த பார்வையாளர் முகுல் வாஸ்னிக், தமிழக காங்கிரஸ் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர், மாநில தலைவர் செல்வப்பெருந்தகை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நடந்த பேச்சுவார்த்தை குறித்து காங்கிரஸ் தரப்பில் நம்மிடம் பேசியவர்கள் தெரிவித்ததாவது: திருநாவுக்கரசர் பேசும்போது, "திமுக தாங்கள் வெற்றிபெற முடியாத தொகுதிகளை காங்கிரஸுக்கு ஒதுக்க வாய்ப்புள்ளது. குறிப்பாக, கொங்கு மண்டலத்தில் அவர்களுக்குச் சிக்கலான தொகுதிகளை நம்மிடம் தள்ளப் பார்ப்பார்கள். அதையெல்லாம் கண்ணை மூடிக்கொண்டு வாங்கினால் தோல்வியே மிஞ்சும்" என்றார்.

இதை மறுத்துப் பேசிய பீட்டர் அல்போன்ஸ், "திமுக எடுத்துள்ள கள ஆய்வில், காங்கிரஸுக்கு சாதகமில்லாத தொகுதிகளையும் அடையாளம் கண்டுள்ளனர். அதில் நமது சில சிட்டிங் தொகுதிகளும் அடங்கும். எனவே, அவர்கள் சொல்வதைக் கேட்டால் தான் நாம் வெற்றிபெற முடியும்" என்றார். இதைக் கேட்டு திருநாவுக்கரசர் சற்றே அதிர்ந்துவிட்டார்.

மகிளா காங்கிரஸ் தலைவர் ஹசீனா சையத், "காங்கிரஸுக்கு ஒதுக்கப்பட்ட 28 இடங்களில் 9 இடங்களை பெண்களுக்கு வழங்க வேண்டும்" என்றார். தொடர்ந்து பேசிய மற்ற நிர்வாகிகள், "கூடுதல் இடங்கள் மற்றும் தேர்தல் செலவுக்குப் பணம் தருவதாகச் சொல்லித்தான் தவெக நம்மை கூட்டணிக்கு அழைத்தது. ஆனால், நாம் அதையெல்லாம் விட்டுவிட்டு திமுக கூட்டணியிலேயே நீடிக்கிறோம். இப்போது தேர்தல் செலவுக்கான தொகையை திமுக குறைப்பதாகச் சொல்வதை ஏற்க முடியாது" என்றனர்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## "பிரேமலதாவை அவதூறாகப் பேசினால் நாக்கு துண்டிக்கப்படும்" - தேமுதிக மகளிரணி செயலாளர் அதிரடி

"விஜயகாந்த், பிரேமலதா, தேமுதிக குறித்து எவரேனும் அவதூறாகப் பேசினால், அவர்களின் நாக்கு கண்டிப்பாகத் துண்டிக்கப்படும்" என அக்கட்சியின் மகளிர் அணி செயலாளர் பேசி இருப்பது அரசியல் வட்டாரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சமீபத்தில் சேலத்தில் நடைபெற்ற அதிமுக பொதுக்கூட்டத்தில் பேசிய அக்கட்சியின் கொள்கை பரப்பு செயலாளர் நடிகை விந்தியா, "தேர்தல் வந்துவிட்டால் ஒவ்வொரு கட்சியாகச் சென்று பேரம்பேசும் 'துண்டு போட்டு அரசியல்' நடத்தும் ஒரே தலைவி பிரேமலதாதான். கடந்த முறை தேமுதிக-வுக்கு ராஜ்ய சபா சீட் கொடுத்திருந்தால்கூட இப்போது திமுக-வில் சேர்ந்திருப்பார்.

அரை சதவீத வாக்குவங்கி கூட இல்லாத தேமுதிக-வை திமுக அதிக விலை கொடுத்து வாங்கியுள்ளது. அக்கட்சிக்குக் கொள்கை என்று ஏதுமில்லை; பிரேமலதாவுக்குப் பணம், சுதீஷுக்கு சீட்" என கடுமையாக பேசியிருந்தார். இது தேமுதிக-வினரிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது.



இந்த விமர்சனங்களுக்கு, நேற்று சென்னையில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற மகளிர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் பதிலடி

கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த கூட்டத்தில் பேசிய தேமுதிக மகளிர் அணிச் செயலாளர் மாலதி வினோத், "தேமுதிக என்பது எந்தக் கட்சியையும் உடைத்து உருவானது அல்ல; அது விஜயகாந்தால் உருவாக்கப்பட்ட ஒரு சுயம்பு.

கட்சியைத் தொடங்கும் முன்பே மகளிர் அணியைத் தொடங்கிப் பெருமை சேர்த்தவர் அவர். தேமுதிக என்பது எங்கள் உயிர் மூச்சு. பிரேமலதா பற்றி கேலியாகப் பேசுவோரை இனி பொறுத்துக்கொள்ளக் கூடாது. சமூக வலைதளங்களில் யார் பேசினாலும் உடனடியாகப் பதிலடி கொடுங்கள்.

யார் மீது வழக்கு வந்தாலும் கவலைப்படாதீர்கள். நமக்கு வழக்கறிஞர் அணியும், பிரேமலதாவும் துணையாக இருக்கிறார்கள். பிரேமலதா பார்க்காத பணமா, சொத்தா? விஜயகாந்த் சம்பாதித்த பணத்தை மக்களுக்காகச் செலவிட அனுமதித்த பெருந்தன்மை கொண்டவர் அவர். இனி யாராவது அவர் பணம் வாங்கியதாகப் பேசினால், சம்பந்தப்பட்டவர்களின் வீடுகளை உடைப்போம், முற்றுகையிடுவோம். குறிப்பாக, விஜயகாந்த், பிரேமலதா, தேமுதிக குறித்து இனி தவறாகப் பேசினால், சம்பந்தப்பட்டவர்களின் நாக்கு துண்டிக்கப்படும்" என்றார்.

## "முதல்வர் ஸ்டாலின் மிகப்பெரிய தோல்வி பயத்தில் இருக்கிறார்" - எல்.முருகன் கணிப்பு

தமிழக முதல்வர் ஸ்டாலின் மிகப்பெரிய தோல்வி பயத்தில் இருப்பதாக மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.

திருச்சி பஞ்சப்பூர் அருகே மார்ச் 11-ல் மத்திய அரசு சார்பில் நலத் திட்ட உதவிகள் வழங்கும் விழாவும், அதனைத் தொடர்ந்து தேசிய ஜனநாயகக் கூட்டணியின் பொதுக்கூட்டமும் நடைபெற உள்ளன. இந்நிகழ்வுகளில் பிரதமர் மோடி கலந்துகொண்டு பேச இருக்கிறார்.

இந்த நிலையில் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தை நேற்று பார்வையிட்டு ஆய்வு செய்த மத்திய இணை அமைச்சர் எல்.முருகன், பின்னர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: திருச்சியில் மார்ச் 11-ல் நடைபெறும் பொதுக்கூட்டம் தமிழக அரசியலில் பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தும் கூட்டமாக இருக்கும்.

இதில், தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தொண்டர்கள் 7 லட்சம் பேர் பங்கேற்க உள்ளனர். தமிழக முதல்வர் ஸ்டாலின் மிகப்பெரிய தோல்வி பயத்தில் உள்ளார். எப்போது தேர்தல் வந்தாலும் அவருக்கு தோல்வி என்பது நிர்ணயிக்கப் பட்டுள்ளது. மேற்கு வங்கத்துக்குச் சென்ற குடியரசுத் தலைவரை இண்டியா கூட்டணியில் அங்கம் வகிக்கும் திரிணமூல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த அம்மாநில முதல்வரோ அல்லது அமைச்சர்களோ, அரசு தலைமைச் செயலாளர் போன்றவர்களோ வரவேற்கவில்லை. இது மரபு மீறல். பழங்குடியினத்தைச் சேர்ந்தவராக இருந்து, உயர்ந்த பதவிக்கு வந்துள்ள குடியரசுத் தலைவரை இழிவுபடுத்தும் விதமாக மம்தா பானர்ஜி நடந்துகொண்டது கண்டனத்துக்குரியது. மேற்கு வங்கத்தில் எப்படி குடியரசுத் தலைவருக்கு களங்கம் ஏற்படுத்தி இருக்கிறார்களோ, அதேபோல, தமிழகத்திலும் ஆளுநரை தொடர்ந்து திமுக அவமதிப்பு செய்து வந்தது. தமிழக ஆளுநர் மாற்றம் என்பது பொதுவான ஒன்று. தவெக தலைவர் விஜய்க்கு இது முதல் தேர்தல். அவர் தேர்தலில் எந்த அளவு தாக்கத்தை ஏற்படுத்துவார், வாக்குகள் வாங்குவார் என்பது தெரியாது. நடிகரை பார்க்க வருகிற கூட்டம் வேறு, அரசியல் நோக்கத்தோடு வருகிற கூட்டம் வேறு. எங்களுடைய தேசிய ஜனநாயகக் கூட்டணி மிகவும் வலிமையாக உள்ளது. 30-க்கும் மேற்பட்ட கட்சிகள் கூட்டணியில் உள்ளன. எங்கள் கூட்டணி திமுக-வை விட வேகமாக முன்னோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## அதிமுக கூட்டணியின் வியூகத்தை முறியடிக்குமா திமுக?

இத்தனை நாளும் ஸ்டாலினையே பிரதானமாக எதிர்த்து அரசியல் பேசி வந்த அதிமுக - பாஜக கூட்டணி தற்போது தங்களது விமர்சன அம்புகளை உதயநிதியை டார்கெட்டாக வைத்து வீச ஆரம்பித்திருக்கிறது.

இதன் பின்னணி குறித்து பேசும் அரசியல் பார்வையாளர்கள், "பாஜக பிரத்யேகமாக எடுத்த சர்வே முடிவுகளில் மக்களுக்கு திமுக அரசின் மீது சில குறைகள் இருந்தாலும் முதல்வர் ஸ்டாலினுக்கு எதிராக தனிப்பட்ட முறையில் பெரியளவில் அதிருப்திகள் இல்லை எனத் தெரியவந்திருக்கிறது. இதையடுத்தே என்டிஏ கூட்டணியின் பார்வை உதயநிதி பக்கம் திரும்பி இருக்கிறது. அதனால் தான் தற்போது ஸ்டாலினை பெரிதாக தாக்காமல் உதயநிதியை டார்கெட் செய்து வருகின்றனர்.



உதயநிதியை அரியணை ஏற்றுவதற்காகவே ஸ்டாலின் இத்தனை மெனக்கிடுகிறார் என அதிமுக-வும் பாஜக-வும் விடாமல் பிரச்சாரம் செய்கிறது. மோடியும் அமித் ஷாவும் தமிழகம் வரும்போதெல்லாம் உதயநிதியை சாடுவதன் பின்னணியும் இதுவே. 'வருங்கால முதல்வர் உதயநிதி' என்று பிரச்சாரம் செய்து ஸ்டாலினுக்கு ஆதரவான மக்களின் மனநிலையை தகர்ப்பதே அதிமுக அணியின் திட்டம். கடந்த தேர்தலில் நீட் தேர்வு ரத்து உள்ளிட்ட நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை உதயநிதி அளித்ததையும் இந்த சமயத்தில் நியாபகப்படுத்துகிறது அதிமுக கூட்டணி.

இதையெல்லாம் உள்வாங்கி இருக்கும் திமுக-வும் இப்போது மாற்றி யோசிக்க ஆரம்பித்திருக்கிறது. ஸ்டாலினா இபிஎஸ்ஸா என்ற ரேஸில் மக்கள் மத்தியில் ஸ்டாலினே தற்சமயம் முந்தி நிற்கிறார். அதுவே, இபிஎஸ்ஸா உதயநிதியா என்று பார்த்தால் இபிஎஸ் தான் மக்களின் முதல் விருப்பமாக இருக்கிறார். திமுக தரப்பில் நடத்தப்பட்ட ஆய்விலும் இது தெரியவந்திருக்கிறது. அதனால், தேர்தல் களத்தை இபிஎஸ் - உதயநிதி களமாக மாற்ற தந்திரமாக காய்நகர்த்துகிறது அதிமுக கூட்டணி. இவர்களின் தந்திரத்தை தெரிந்து கொண்ட திமுக, அரசு விழாக்கள் தவிர்த்து கட்சி நிகழ்ச்சிகள் அனைத்திலும் மு.க.ஸ்டாலின் முகத்தை மட்டுமே பிரதானப்படுத்த ஆரம்பித்திருக்கிறது. இளைஞரணி கூட்டங்கள் கூட ஸ்டாலின் தலைமையிலேயே நடப்பதன் உள் ரகசியமும் இதுதான். இதன் மூலம் 'எல்லாமே ஸ்டாலின்' என்ற பிம்பத்தை திமுக மீண்டும் கட்டமைத்து வருகிறது. ஆக, இந்தத் தேர்தலில் அதிமுக கூட்டணியின் இலக்கு உதயநிதியாக இருந்தாலும், அதை சமாளிக்கும் கேடயமாக மீண்டும் ஸ்டாலினே மாறியிருக்கிறார்" என்றனர்.

## திருப்பதியில் ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3.94 கோடி

**திருமலை, மார்ச் 10:**

திருப்பதிஏழுமலையான்கோவிலுக்கு தினமும் ஆயிரக்கணக்கான பக்தர்கள் வருகை தந்து சாமி தரிசனம் செய்து வருகின்றனர். இலவச தரிசனத்தில் பல மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் சாமி தரிசனம் செய்கின்றனர்.

திருப்பதி ஏழுமலையான் கோவிலில் நேற்று முன்தினம் 82 ஆயிரத்து 838 பக்தர்கள் சாமி தரிசனம் செய்தனர். 31 ஆயிரம் பக்தர்கள் தலைமுடி காணிக்கை செலுத்தினர். அன்று தேவஸ்தானம் அறிவித்த ஒருநாள் உண்டியல் காணிக்கை ரூ.3 கோடியே 94 லட்சம் ஆகும்.

## வந்தவாசி கோதண்டராமர் கோவில் கும்பாபிஷேகம்

வந்தவாசியில் கோட்டை பகுதியில் அமைந்துள்ள கோதண்டராமர் மற்றும் பக்த ஆஞ்சநேயர் கோவில் மகா கும்பாபிஷேக விழா நடைபெற்றது. இதையொட்டி கோவில் வளாகத்தில் யாகசாலை அமைத்து சங்கல்பம், அங்குரார்ப்பணம், வேதபிரபந்தம், கும்ப ஆராதனம், ஹோமங்கள், சயனாதிவாஸம், பூர்ணாஹூதி உள்ளிட்டவை நடைபெற்றன.

நேற்று காலை கோபூஜை, புண்யாஹம், பூர்ணாஹூதி நடைபெற்றது. அதைத்தொடர்ந்து புனிதநீர் கலசங்களை பட்டாச்சாரியார்கள் கோபுர உச்சிக்கு கொண்டு சென்று கோபுர கலசங்கள் மீது புனிதநீர் ஊற்றப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

பின்னர் மூலவருக்கு சிறப்பு அபிஷேகம், பூஜை நடைபெற்றது. விழாவில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு தரிசனம் செய்தனர்.

## நாகை: கயத்தூர் விஸ்வநாதர் கோவில் மகா கும்பாபிஷேகம்




**நாகப்பட்டினம், மார்ச் 10:**

நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம், ஏனங்குடி ஊராட்சி கயத்தூர் கிராமத்தில் விசாலாட்சி சமேத விஸ்வநாதர் கோவில் உள்ளது. இங்கு சித்தி விநாயகர், அய்யனார், காளியம்மன் தனித்தனி சன்னதிகளில் அருள்பாலிக்கின்றனர். இக்கோவிலில் திருப்பணிகள் செய்து மகா கும்பாபிஷேகம் (மகா குடமுழுக்கு) நடத்த அக்கிராமத்தினர், மருளாளிகள் உள்ளிட்டோர் முடிவு செய்து திருப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

திருப்பணிகள் முடிந்து மகா கும்பாபிஷேகம் நடந்தது. இதையொட்டி நேற்று முன்தினம் அனுக்ஞை, விநாயகர் பூஜை, பூர்வாங்க பூஜை, யாகசாலை பூஜைகள் நடந்தன. நேற்று கோபூஜை, யாகசாலை பூஜை, தீபாராதனை நடந்தது.

## ஆந்திராவில் மார்ச் 24 முதல் 28 வரை பெருமாளை சூரியன் வழிபடும் விழா!



**திருப்பதி, மார்ச் 10:**

திருமலை திருப்பதி தேவஸ்தான பராமரிப்பில் திருப்பதி - சென்னை வழிதடத்தில் நாராயணவனம் எனும் ஊரில் வேதவல்லி தாயார் சமேத வேத நாராயணர் கோயில் உள்ளது.

கிருத யுகத்தில் மகா விஷ்ணு, முதல் அவதாரமான மச்ச அவதாரம் எடுத்து, சோமுகன் எனும் ராட்சதனுடன் போராடி வேதங்கள், சப்த ரிஷிகளையும் காத்தார் என்பது புராண வரலாறு. அதன்படி இந்த தலத்தில் அவர் மச்ச அவதாரம் எடுத்து தண்ணீருக்குளேயே போர் புரிந்ததால், ஈரமாக இருந்த மகா விஷ்ணுவின் உடல் மீது சூரிய கதிர்கள் மூலம் சூரிய பகவான் வழிபட்டார் என்பது தல வரலாறு.

ஆதலால் ஆண்டுதோறும் மார்ச் மாதம் இக்கோயிலில் சூரிய விழா நடைபெறும். இதன்படி வரும் 24 முதல் 28ம் தேதி வரை சூரிய பூஜை நடைபெற உள்ளது.

முதல் 3 நாட்கள் மாலையில் சூரிய பூஜை 5.30 - 6.30 மணி வரை நடைபெறும்.

முதல் நாள் இக்கோயிலின் முகப்பு கோபுரம் அமைந்துள்ள கோபுர அடுக்குகள் வழியாக சூரிய கதிர்கள் உள்ளே சென்று 630 அடி தூரத்தில் உள்ள கோயில் கர்ப்ப கிரகத்தில் சுவாமியின் பாதத்தில் விழும்.

இதையடுத்து 2ம் நாள் சுவாமியின் நாபியின் மீதும் 3-ம் நாள் சிரசு மீதும் சூரிய கதிர்கள் படும்.

24ம் தேதி முதல் 28ம் தேதி வரை தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணி வரை தெப்போற்சவமும் நடைபெறும்.

இதற்கான ஏற்பாடுகளை திருமலை திருப்பதி தேவஸ்தானம் செய்து வருகிறது.

## சமயபுரம் மாரியம்மன் கோயில் பூச்சொரிதல் விழா: பச்சைப் பட்டினி விரதம் தொடங்கிய அம்மன்



**திருச்சி, மார்ச் 10:**

சமயபுரம் மாரியம்மன் 28 நாட்கள் பச்சைப் பட்டினி விரதத்தை தொடங்கும் வைபவம் நேற்று தொடங்கியது. இதைத்தொடர்ந்து, அம்மனுக்கு பூச்சொரிதல் விழாவும் கோலாகலமாக நடைபெற்றது.

தமிழகத்தில் உள்ள சக்தி தலங்களில் முக்கிய தலமான திருச்சி சமயபுரம் மாரியம்மன் கோயிலில் பிரசித்தி பெற்ற பூச்சொரிதல் விழா ஆண்டுதோறும் மாசி மாதம் கடைசிஞாயிறு தொடங்கி, பங்குனி கடைசி ஞாயிறு வரை 28 நாட்கள்நடைபெறும்.

இந்நாட்களில், மாயசூரனை வதம் செய்த பாவம் நீங்கவும், உலக நன்மைக்காகவும், தன்னை தரிசிக்க வரும் பக்தர்களுக்கு நோய், தீவினை அணுகாது சகல நன்மைகளும் கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் மரபுமாறி, அம்மனே பக்தர்களுக்காக 28 நாட்கள் பச்சைப் பட்டினி விரதம் இருப்பார்.

இதன்படி, நேற்று அதிகாலை பச்சைப் பட்டினி விரதத்தை அம்மன் தொடங்கினார். தொடர்ந்து, விக்னேஸ்வர பூஜை, புண்ணியாக வாசனம், வாஸ்து சாந்தி முடிந்து, காலை 6.30 மணிக்கு மேல் காலை 8 மணிக்குள் சமயபுரம் மாரியம்மனுக்கு காப்புக் கட்டுதல் நடைபெற்றது.

பின்னர் தொடங்கிய பூச்சொரிதல் விழாவில், கோயில் நிர்வாகம் சார்பில் கோயில் இணை ஆணையர் சூரிய நாராயணன் தலைமையில்,கோயில் பணியாளர்கள், பக்தர்கள், கிராம மக்கள் உள்ளிட்டோர் கூடை கூடையாக பூக்களை யானை மீது வைத்தும், தலையில் சுமந்தும், கையில் ஏந்தியும் வந்து அம்மனுக்கு சாற்றி, வழிபட்டனர்.

மேலும், திருச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் ஏராளமான பக்தர்கள் நேற்று இரவு முதல் இன்று (மார்ச் 9) அதிகாலை வரைவிடிய விடிய மின் விளக்குகளால் அலங்காரம் செய்யப்பட்ட வாகனங்களில் பூக்களை வைத்து ஊர்வலமாக எடுத்து வந்து மாரியம்மனுக்கு சாற்றினர்.

பூச்சொரிதல் விழாவை முன்னிட்டு சமயபுரம் மாரியம்மன் கோயிலில் ஏராளமான போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர்.

## வார விடுமுறையையொட்டி பழனி முருகன் கோவிலில் குவிந்த பக்தர்கள்

**பழனி, மார்ச் 10:**

அறுபடை வீடுகளில் 3-ம் படைவீடான பழனி முருகன் கோவில் உலக பிரசித்தி பெற்றது. இங்குள்ள மலைமீது அருள்பாலிக்கும் முருகப்பெருமானை தரிசனம் செய்து நேர்த்திக்கடன் நிறைவேற்ற தினமும் ஏராளமான பக்தர்கள் வருகை தருகின்றனர்.

அதிலும் வார விடுமுறை, விசேஷ நாட்கள் என்றால் கேரளா, கர்நாடகா உள்ளிட்ட வெளிமாநிலங்களில் இருந்து பக்தர்கள் வருகை அதிகமாக இருக்கும்.

அதன்படி நேற்று வாரவிடுமுறையையொட்டி பழனி முருகன் கோவிலில் தரிசனம் செய்ய பக்தர்கள் கூட்டம் அலை மோதியது.

அதிகாலை முதலே பழனி அடிவாரம், பாதவிநாயகர் கோவில், திருஆவினன்குடி, மலைக்கோவில் ஆகிய இடங்களில் பக்தர்கள் கூட்டம் அதிகம் காணப்பட்டது.

இதன் காரணமாக கோவிலில் உள்ள பொது மற்றும் கட்டண தரிசன வழிகளில் நீண்ட வரிசை இருந்தது.

இதனால் சுமார் 1 மணி நேரம் காத்திருந்து பக்தர்கள் தரிசனம் செய்தனர்.

தரிசன பாதை மட்டுமின்றி மலைக்கோவிலுக்கு செல்லும் ரோப்கார், மின் இழுவை ரெயில்நிலையம் ஆகிய இடங்களில் பக்தர்கள் வரிசையில் காத்திருந்தனர்.

பக்தர்கள் வருகை அதிகரிப்பால் பழனி சுற்றுலா பேருந்து நிலையத்தில் ஏராளமான வாகனங்கள் நின்றன.

நகர் பகுதியில் சில இடங்களில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது.



வறுமை, நோய், அறியாமை மூன்றும் முற்றிலும் நீங்கும்
போர் என்னும் பொல்லா அரக்கனை பூமியில் இல்லாமல் ஆக்கினால்...!
தொடர்புக்கு: 9791667528



## நலம் தரும் மருத்துவம்

### உடல் பருமனால் அவதியா? கருப்புக்கு பதில் வெள்ளைக்கு மாறலாமே?!



கருப்பு மிளகைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். ஆனால், அதன் சகோதரனான வெள்ளை மிளகு (WHITE PEPPER) பற்றி பலருக்கும் தெரிவதில்லை. சமையலறையில் ஒரு சுவைப்பொருளாகத் தொடங்கி புற்றுநோய் தடுப்பு வரை இதன் நன்மைகள் நீண்டு கொண்டே செல்கிறது.

வெள்ளை மிளகின் ஆரோக்கிய நன்மைகள்:

வெள்ளை மிளகு செரிமானத்தை எளிதாக்கும். இதிலுள்ள பைப்பரின், செரிமான நொதிகளின் செயல்பாட்டை அதிகரிக்கிறது. இது ஊட்டச்சத்து உறிஞ்சுதல் மற்றும் குடல் ஆரோக்கியத்தை மேம்படுத்த உதவுகிறது. மூட்டு வலிக்கான சிகிச்சையில் வெள்ளை மிளகு அதிகம் பயன்படுத்தப்படுகிறது. வெள்ளை மிளகை மையாக அரைத்து மூட்டு வலி உள்ள இடங்களில் பற்று போட்டால் மூட்டு வலி குணமாகும்.

இது தோல் சுருக்கங்களைத் தடுக்கவும், கண்களுக்குக் கீழே உள்ள கருவளையங்களை நீக்கவும், சருமம் தொங்குவதைத் தடுக்கவும், சரும வறட்சியை நீக்கவும், சருமத்தின் உயிர்ச்சக்தியை மீட்டெடுக்கவும் உதவுகிறது.

வெள்ளை மிளகு அறிவாற்றல், மூளை செயல்பாடுகளை மேம்படுத்தவும், மூளை செல்கள் சிதைவதைத் தடுக்கவும் உதவுகிறது. இதில் அதிகமாக காணப்படுகின்ற பைபரின் வலி நிவாரணியாகவும் உள்ளது. இது உடலில் வீக்கத்தைக் குறைத்து, வலியைக் குறைக்கிறது.

வயிற்றுப்புண் வராமல் தடுக்க வெள்ளை மிளகு பயன்படுகிறது. மேலும் வயிற்றில் பாக்டீரியா உருவாவதை தடுக்கிறது.

வெள்ளை மிளகு, உயர் இரத்த அழுத்தத்தை குறைக்க உதவுகிறது மற்றும் இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது. இது உடலில் நல்ல கொலஸ்ட்ராலை பராமரிக்கவும் உதவுகிறது. வெள்ளை மிளகினை தயிருடன் கலந்து உச்சந்தலையில் தடவி, முப்பது நிமிடங்கள் வைத்திருந்த பின்னர் கூந்தலை கழுவ வேண்டும், இவ்வாறு செய்தால் பொடுகு வராமல் தடுக்கலாம். வெள்ளை மிளகு இரத்த ஓட்டத்தை மேம்படுத்துவதால் முடி வளர்ச்சியும் மேம்படுகிறது.

வெள்ளை மிளகினை உணவில் சேர்த்துக் கொள்வது உடல் எடையை குறைக்க உதவும் என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன. உடலில் உள்ள தேவையற்ற கொழுப்புகளை கரைக்கும் சக்தி வெள்ளை மிளகுக்கு உண்டு. வெள்ளை மிளகில் உள்ள கேப்சைசின், இன்று உலகளவில் பல ஆண்களை பாதிக்கக்கூடிய புரோஸ்டேட் புற்றுநோய் வராமல் தடுக்க உதவுகிறது.

## ஆச்சரியப்படுத்தும் புதிய தொழில்நுட்பம்: உடைந்தால் தானாகவே ஒட்டிக்கொள்ளும் உயிருள்ள கட்டடங்கள்!

கட்டடம் கட்டவேண்டும் என்றால் சிமெண்ட், செங்கல், மணல் இல்லாமல் அது சாத்தியமில்லை என நீங்கள் நினைக்கலாம். ஆனால் இதையெல்லாம் ஓரங்கட்டிவிட்டு, உடைந்தால் தானாகவே தன்னை சரிசெய்துகொள்ளும் ஒரு உயிருள்ள கட்டடப்பொருளை விஞ்ஞானிகள் வெற்றிகரமாக உருவாக்கியுள்ளார்கள். வெனிஸ் நகரில் நடந்து வரும் ஒரு பிரம்மாண்டமான கண்காட்சியில் கனடா நாட்டைச் சேர்ந்த ஒரு அமைப்பு இதை சாத்தியமாக்கி காட்டியுள்ளது.

இந்த புதிய தொழில்நுட்பம், கலை, அறிவியல் மற்றும் இயற்கையை ஒன்றாக இணைக்கும் ஒரு சூப்பரான முயற்சியாகப் பார்க்கப்படுகிறது. சிமெண்டிற்குப் பதிலாக, உயிருள்ள பாக்டீரியாக்களை வைத்து எப்படி கட்டடம் கட்டுகிறார்கள் என்பதை இந்தப் பதிவில் பார்க்கலாம்.

உயிருள்ள கட்டடம்!

இந்த புதிய முறையில், நவீன த்ரீடி பிரிண்டிங் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கட்டடப் பொருட்களை உருவாக்குகிறார்கள். இதில் மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், அந்தப் பொருட்களுக்குள் சயனோபாக்டீரியா எனப்படும் உயிருள்ள நுண்ணுயிரிகளை மிகவும் பாதுகாப்பாக அடைத்து வைக்கிறார்கள். இந்த பாக்டீரியாக்கள் உயிர்வாழவும் நன்கு வளரவும் சரியான அளவு வெளிச்சம், ஈரப்பதம் மற்றும் தட்பவெப்ப நிலை ஆகியவை கட்டாயம் தேவை. இதை ஒரு பெரிய கட்டடமாக உருவாக்கும்போது, அது வெறும் உயிரற்ற சுவராக இல்லாமல், நம்மோடு சேர்ந்து சுவாசிக்கும் ஒரு




உயிருள்ள அமைப்பாகவே மாறிவிடுகிறது. இந்த பாக்டீரியாக்கள் இயற்கையோடு இணைந்து எப்படி ஆச்சரியப்படும் வகையில் வேலை செய்கின்றன என்பதுதான் இதன் ஹைலைட். இந்தக் கண்காட்சியில் இதைப் பராமரிக்கவே தனியாக ஆட்களை நியமித்துள்ளார்கள்.

இந்த நுண்ணுயிரிகள் வளிமண்டலத்தில் இருக்கும் கார்பன் டை ஆக்சைடை இரண்டு வழிகளில் தங்களுக்குள் இழுத்துக்கொள்கின்றன. ஒன்று, சாதாரண மரங்களைப் போல ஒளிச்சேர்க்கை மூலமாக கார்பனை உறிஞ்சுவது. மற்றொன்று, சுற்றியுள்ள வேதிப்பொருட்களைப் பயன்படுத்தி மிகவும் திடமான கார்பனேட்டுகளை உருவாக்குவது.

ஆரம்பகட்ட ஆய்வுகளில், இந்த பாக்டீரியாக்கள் கலந்த ஹைட்ரோஜெல் முதல் முப்பது நாட்களில் ஒரு கிராமுக்கு சுமார் இரண்டு மில்லிகிராம் கார்பனை உறிஞ்சியிருப்பது உறுதியாகியுள்ளது. அப்படியே நானூறு நாட்கள் கழித்துப் பார்க்கும்போது, இது இருபத்தி ஆறு மில்லிகிராமாக அதிகரித்துள்ளது. இந்த பாக்டீரியாக்கள் இல்லாத சாதாரண கட்டுப்பாட்டுப் பொருளில் இந்த அளவுக்கு எந்த ஒரு மாற்றமும் நடக்கவில்லை.



தற்போதைய நிலையில், உலகிலேயே உயிருள்ள பொருட்களை வைத்து உருவாக்கப்பட்ட மிகப்பெரிய கட்டட அமைப்பு இதுதான் எனலாம். ஆனால், இதை வைத்து உலக வெப்பமயமாதலை ஒரேயடியாகக் குறைத்துவிட முடியும் என இப்போதே உறுதியாகச் சொல்ல முடியாது. ஏனென்றால், இருபத்தி ஐந்து நாட்களுக்குப் பிறகு இந்த பாக்டீரியாக்களின் வளர்ச்சி சற்று மந்தமாகிவிடுகிறது. ஆனாலும், நாளாக நாளாக இந்த கட்டடப் பொருள் மேலும் அதிக உறுதியைப் பெறுகிறது என்பது ஒரு மிகச் சிறந்த செய்தி.

மற்ற ரசாயன முறைகளைப் போல இதில் எந்தவிதமான நச்சுப் பொருட்களும் வெளியேறுவதில்லை. இது நமது சுற்றுச்சூழலுக்கு மிகவும் பாதுகாப்பானது. இதன் நீண்ட கால உழைப்பை உறுதி செய்ய இன்னும் பல வருட ஆராய்ச்சிகள் கட்டாயம் தேவைப்படுகின்றன.

# “கடுவன் பூனை”



கே.பி.எஸ்.கல்லூரியின் கணிதப் பேராசிரியர் சிவசுப்பிரமணியம், ஆனால், மாணவர்கள் அவரை அந்த பெயரில் அழைக்கவில்லை. அவர்களுக்கு அவர் “கடுவன் பூனை.”
வகுப்பில் சிரிப்பு இல்லை. "சிடு…சிடு" மூஞ்சி. சிறிய தவறும் நடந்தாலும் கடும் கண்டிப்பு. சந்தேகம் கேட்கக் கூட நடுங்கும் நிலை.
“அந்த சார் கிட்ட டவுட் கேட்கப் போகாதே… கடுவன் பூனை மாதிரி சீறிவிடுவார் !” சீனியர்கள் எச்சரித்தார்கள்.

புதிய மாணவனான கார்த்திக்கிற்கு கணிதப் பாடத்தில் சந்தேகம் வந்தது.
நண்பர்கள் மீண்டும் எச்சரித்தார்கள்.

“வேற யாரிடமாவது கேள்… அவர் கிட்டே மட்டும் போயிடாதே !.”

நீண்ட தயக்கத்திற்குப் பின், "ஆவது ஆகட்டும்" என்கிற மன நிலையில் கார்த்திக் நேராக பேராசிரியர் சிவசுப்ரமணியம் ரூமுக்குப் போனான்.
“சார்… ஒரு டவுட்…”
புரொஃபசர் கண்ணாடியைத் தூக்கிப் பார்த்தார். கார்த்திக் பயந்து கொண்டே புத்தகத்தை நீட்டினான். சில விநாடிகள் அமைதி.

பிறகு புரொஃபசர் நாற்காலியை அருகே இழுத்தார். "உட்காரு… இது நல்ல கேள்வி.” என்று ஆரம்பித்து, எளிதாய்ப் புரியும்படி விளக்க ஆரம்பித்தார்.

கேள்விகள் தொடர்ந்தன. ஒரு கேள்வி… இரண்டு கேள்வி… மூன்று கேள்வி… முடிவில் கார்த்திக்கே ஆச்சரியப்பட்டான். "சார்… இதெல்லாம் எவ்வளவு சுலபமா இருக்கு !”

புரொஃபசர் சிரித்தார்.
" கார்த்திக்… நான் கோபப்படுவது டவுட் கேட்பவர்கள்மீது இல்ல… கேட்காமல் இருப்பவர்கள்மீது.”

அந்த நாளிலிருந்து கார்த்திக் அடிக்கடி அவரிடம் சந்தேகம் கேட்க ஆரம்பித்தான். பிறகு மற்ற மாணவர்களையும் அழைத்துச் சென்றான்.

ஒரு நாள் நண்பர்கள் கேட்டார்கள். ""கடுவன் பூனை எப்படி?”

கார்த்திக் சிரித்தான்.
"தூரத்திலிருந்து பார்த்தா கடுவன் பூனை மாதிரி தான்…
அருகே போனால் தெரியும்… அது அறிவை காக்கும் பூனைன்னு.”
அப்போது தான் அனைவருக்கும் புரிந்தது.
"ஒருவரைப் பற்றி மற்றவர்கள் சொல்லக் கேட்டு முடிவெடுக்கக் கூடாது!… அவருடன் பழகிப் பார்த்து புரிந்து கொள்வதே உண்மையான அறிவு" என்று.



-முகில் தினகரன்
கோயமுத்தூர்.

# அன்புள்ள அம்மா…!

எப்போதும்போல் இல்லாமல் இன்று வழக்கத்துக்கு மாறாய் அமைதியாக இருந்தது என்னுடைய வகுப்பறை. கடைசி வரிசையில் இருந்த மாணவர்கள் வெவ்வேறு இடங்களில் உட்கார வைக்கப்பட்டிருந்தனர். அமைதியாக எங்கு இருக்கிறார்கள் என்று கண்களைச் சுழலவிட்டேண். “ஏன்?”என்று வகுப்பு தலைவனிடம் செய்கையில் கேட்டேன்.
“நேத்து ஒரு கலவரமே நடந்தது சார். ஏழாம் வகுப்பு டீச்சர் ஆக்டிங்காக வந்தாங்க. அந்த டீச்சர உண்டு இல்லாம பண்ணிட்டாங்க . அடங்கல சார். அதனால அவங்க சயின்ஸ் டீச்சர்கிட்ட சொல்லிட்டாங்க. சைன்ஸ் டீச்சர் இவனுங்க எல்லாரையும் இடம் மாத்தி உக்கார வச்சுட்டாங்க சார்” என்று வகுப்புத் தலைவன் நடந்த அனைத்தையும் விவரமாகச் சொன்னான்.
ஒரு விதத்தில் மகிழ்ச்சிதான். நல்லதை யார் செய்தாலும் நிச்சயம் வரவேற்க வேண்டும் என்ற எண்ணத்தில்,
“ நீங்க அப்படியே உட்காருங்க” என்றேன். மற்றவர்களுக்கெல்லாம் விதிவிலக்கு கொடுத்துவிட்டு, ஒருவனை மட்டும் வெளியே நிறுத்தி வைத்திருந்தார் சயின்ஸ் டீச்சர். “ஏன் என்று கேட்டேன்?”
“இவங்க எல்லார்கிட்டயும் விசாரிச்சாச்சு சார். அவங்க அம்மா அப்பா வந்து பதில் சொல்லிட்டாங்க. ஆனா, இவனோட அம்மா மட்டும் வரல. அதனால, இவன் எப்பவுமே கிளாசுக்குள்ள வரக்கூடாதுன்னு சொல்லிட்டாங்க சார்” என்றான்,
நானும் அதை ”சரி இன்னிலிருந்து நீ வெளியே நின்னுடு” என்று உறுதிப்படுத்தி வெளியே நிறக்கச் சொன்னேன்.
முன்பைவிட ஓரளவுக்கு வகுப்பின் சூழல் மாறியிருந்தது. இந்த பிரச்சனைக்கு நிரந்தரமான முடிவெடுக்க ஆழ்ந்து சிந்திதேன். தனித்தனியாக உட்கார வைக்கப்பட்டிருந்த அனைவரையும் ஒன்றாக அழைத்தேன். அவர்கள் எல்லோரிடமும் ஒரு கடிதம் எழுத சொன்னேன்.
“அன்புள்ள அப்பா” இதுதான் கடிதத்தினுடைய தலைப்பு. ஒரு பக்க அளவில் நீ உங்க அப்பாவுக்கு என்ன சொல்லப் போற, எழுதிக்கொடு“ என்றதும், அதற்குள் மணி அடித்து விட்டதால், “இந்த கடிதம் இன்னைக்கு நாலு மணிக்குள்ள என் கைக்கு வந்தாகணும்” என்று சொல்லிவிட்டு அடுத்த வகுப்பிற்குச் சென்றுவிட்டேன்.
“எழுதுன கடிதத்த வகுப்பு தலைவன்கிட்ட கொடு. என்று சொன்னதும், ஒருவன் மட்டும் “சார் நான் எங்க அப்பாவுக்கு எழுதமாட்டேன். எங்க அம்மாவுக்கு எழுதுறேன்”ன்னு சொன்னான்.
“ஏன்..”
“இல்லை சார், வேண்டாம் சார், என்ன எங்க அப்பா விட்டுட்டு போயிட்டாரு.. எங்க அம்மா..” என் முகம் பார்க்காமல் அமைதியானான். மனசு அப்படியே தடுமாறியது. அவன் தோளில் கைபோட்டு அணைத்துக் கொண்டேன். ஒரு நிமிடம் அமைதியாக நின்றோம். வகுப்புத் தலைவன் நான் அவனோடு நிற்பது அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.
“சரி நீ அன்புள்ள அம்மாவுக்கு” ன்னு கடிதம் எழுது என்று சொல்லிவிட்டு வந்தேன். கடிதம் எழுதச் சொன்ன அனைவரும் எழுதி முடித்தார்கள். அன்புள்ள அம்மாவுக்கு என்று எழுதிய கடிதம் மட்டுமே உணர்ச்சியின் பெருக்களாக அமைந்திருந்தது. அந்த கடிதத்தை நான் உங்களோடு பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.
“அன்புள்ள அம்மா எனது பிறப்பு முதல் இறப்பு வரை நான் உனக்கு கடமைப்பட்டுள்ளேன். என்னை பத்து மாதம் சுமந்து பெற்றெடுத்த என் அன்னையே, உன் மூச்சு காத்தைக் கூட ஒரு ஒரு நிமிடம் விடாமல் இருப்பாய். ஆனால், நீ என்னை விட்டுவிட்டு இருக்க மாட்டாய். உன்னை நினைத்து நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். காலை 4 மணிக்கு எழுந்து எட்டு மணிக்குள், நீ எனக்கு உணவு தயாரித்து தந்து விடுகிறாய். உனக்காக ஒரு திருக்குறளை திருவள்ளுவர் எழுதியுள்ளார்.“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்” என்ற திருக்குறள் உனக்கானது. அது எனக்கும் பொருந்தும்.” என்று எழுதி, திருக்குறளின் பொருளை கூறுகிறேன். தன் மகனை பெற்றெடுத்த பொழுது அடைந்த மகிழ்ச்சியை விட, அவன் ஒரு வெற்றியை அடையும்பொழுது பெறுகின்ற மகிழ்ச்சியால் அந்த தாய் ஆனந்தக் கண்ணீர்விடுவாள்.” என்று கூறினார் வள்ளுவர். ஆனால், நான் நீ என்னைப் பெற்ற பொழுதுதான் பெரு மகிழ்ச்சி அடைந்தாய் என்று கூறுகிறேன். அந்த மகிழ்ச்சியை ஒவ்வொரு நாளும் நான் தந்து கொண்டே இருப்பேன். இது சத்தியம். இப்படிக்கு அன்புள்ள அம்மா”. என்று அந்த கடிதம் முடிகிறது.
அவனுக்குள் அம்மாவைப் பற்றிய புரிதல், வாழ்க்கைப் பற்றிய சூழல் அத்தனையும் நன்றாகவே தெரிகிறது. அவன் ஏன் கடைசி வரிசையில் உட்கார்ந்து பதற்றத்திற்குரிய மாணவனாக மாறினான்? என்பதை புரிந்து கொண்டேன்.
அடுத்த நாளிலிருந்து அவன் அமைதியானான். அவனைப் பற்றிய எனது பார்வை மாறியிருந்தது.





- கயப்பக்கம் இரா.இரமேஷ்

# அகத்தியனின் பயணம் 13



- கயப்பக்கம் இரா.இரமேஷ்

## தெரிந்தாலென்ன தவறில்லை

அவசரப்பட்டு இதனைத் தவறாகக் கையாளக் கூடாது எனப் புரிந்துகொண்ட அகத்தியன்“ எனக்குக் கொஞ்ச நாள் டைம் கொடுங்க. நான் யோசிச்சு பதில் சொல்லணும். நீங்க உங்க கருத்தைச் சொல்லிட்டீங்க. நான் என்னுடைய கருத்தைச் சொல்லணும் இல்லையா,” என்று சொன்னவுடன்,

எழிலழகி சிரிப்போடு“ சரிங்க சார்” என்று பேச்சை முடித்தாள்.

இசையழகி மென்மையாகச் சிரித்தாள். வந்து சேர்ந்த ஒரு வாரத்தில் முதல் சிக்கலைச் சாதுரியமாகத் தீர்ப்பதற்கான கால அவகாசத்தை கேட்டு, அதனைத் தள்ளிப் போட்டான் அகத்தியன்.

இருந்தும் இந்த மறக்க முடியாத நிகழ்வு ஏற்பட்டதற்கு உண்டான காரணத்தை நினைத்துச் சிந்தித்துக் கொண்டிருந்தான். அதே நேரத்தில் தெவியின் நினைவுகள் அவன் மன அலைக்குள் வந்துவந்துப் போய்க்கொண்டிருந்தது. அவசரப்பட்டு விட்டோமோ என்று எழிலழகி தன் மனதிற்குள் நினைத்துக் கொண்டாள். இன்னும் கொஞ்சம் காலம் தள்ளிப்போட்டு இருக்கலாம், அவரையும் நிம்மதியாக அலுவலகத்தில் வேலை செய்ய வைத்திருக்கலாம், நாமும் நிம்மதியாக அலுவலகத்தில் மகிழ்ச்சியாக நம்முடைய வேலையைச் செய்திருக்கலாம் என்று தன் எண்ணத்தோடு பேசிக்கொண்டாள்.

அந்த இரவு முழுவதும் அவளுக்குத் தூக்கம் இல்லை. நாளை இந்தப் பிரச்சனையை எப்படி கையாளுவது, இசையழகிற்கு என்ன மாதிரியான சமாதானத்தை சொல்வது, அவளுடைய காதலை எப்படி முன்னெடுத்து செல்வது, அகத்தியன் சார் என்ன சொல்லப் போகிறார் என்பதைப் பற்றிய சிந்தனை அவள் மனதிற்குள் ஓடிக்கொண்டே இருந்தது.

தூக்கம் இல்லாமல் இரவு 10க்கு மொட்டை மாடியில் நிலவு வெளிச்சத்தின் அழகினை ரசித்த எழிலழகி. நட்சத்திரங்கள் மேகக் கூட்டத்திற்கு இடையே மறைவதும் போவதுமாக இருந்தது. கருப்பு மேகங்கள் மிதந்து சென்றாலும், வெள்ளை மேகங்களின் காட்சி அழகாக இருந்தது. வளர்பிறையின் நிலவு ஒளியினை ரசித்து ருசிக்க முடியாத சூழலில் எழிலழகி அந்த அழகை பார்த்துக்கொண்டிருந்தாள்.

“ இன்னும் என்னடி மொட்ட மாடியில, தூக்கம் வரலையா? 10 ஆயிடுச்சு. நாளைக்கு வேலைக்குப் போகவேண்டாமா” என்று எழிலழகியின் அம்மா குரல் கொடுத்தாள். அவசர அவசரமாக ”இதோ வந்துடுறம்மா என்று மாடிப்படியிலிருந்து கீழே இறங்கினாள்

நேற்றைய மாதிரி இன்றைய சூழல் எழிலழகிக்கு இல்லை.

நிச்சயமாக நாளையும் இதே சூழல்தான் இருக்கும் என்பது அவளுக்கு நன்றாகவே தெரிந்தது.



இசையழகி வேறொரு கோணத்தில் இருந்தாள். “நாமலே இதைச் சொல்லி இருக்கலாமே நேரடியா. இதுக்கு எழிலழகியின் உதவியை நாடினோம். அந்த அளவுக்குக் கோழையா நான்? நேரடியா சொல்லியிருந்த உண்மையிலேயே அகத்தியன் சார் கண்டிப்பா ஏத்துக்கிட்டு இருப்பார். இன்னொருத்தர்கிட்ட சொல்லி காதல சொல்லச் சொன்னதன் மூலமா, நம்ம பத்தி அவர் தப்பா நினைச்சிருப்பார்” என்று சிந்தித்தாள்.

காலம் காலமாக இலக்கியத்திலிருந்து இன்றைய நாட்கள்வரை தோழியே தூது செல்பவர்களாகவே இருந்திருக்கிறார்கள் என்பதை நினைத்து மனதிற்குள் சிரித்துக்கொண்டு, நிச்சயமாக வெற்றியில்தான் முடியும் என்ற நம்பிக்கையோடு கண்ணை மூடினாள்.

தூக்கம் வரவில்லை. கண்கள் மூடி இருந்தாலும் அவள் பார்வைக்குள் அகத்தியனே வந்து போவது போல் நினைத்தாள்.

“ நாங்க சந்தித்தது எப்படி வெளியே தெரிந்தது ? நானும் எழிலழகி மட்டும்தான் இருந்தோம். நாங்க வேலை செய்ற இடத்துல இன்னும் ஒரு 25 பேர் இருக்காங்க. அவங்களுக்கு தெரிஞ்சா என்ன? அசிங்கதான். பரவால்ல தெரிஞ்சுட்டு போகட்டோமே, அதனால என்ன, காதல் என்பது யாரும் செய்யாத தப்பா?” என்று மனதிற்குள் பேசிக்கொண்டாள்

“எப்படியோ தெரிஞ்சுபோச்சு. கண்டிப்பா அங்க இருக்குறவங்களுக்கு நாங்க தேநீர் கடையில என்ன பேசணும்ங்கிறது நிச்சயம் தெரியும். ரகசியமா நம்ம முகத்துக்கு நேரா எதையும் சொல்லாம, பின்னாடி பேசிக்குவாங்க. பாப்போம்” என்று இசையழகி துணிச்சலோடு தூங்கினாள்

அதிகாலை தூக்கம் கலைந்து வெளியே வந்து பார்த்தாள் எழிலழகி. அம்மா தனக்குண்டான சோற்றை சமைத்துக் கொண்டிருந்தாள். அவளுக்கு எந்த விதத்தில் உதவி செய்ய முடியுமோ அந்த விதத்தில் ஒரு சில வேலைகளைச் செய்து முடித்து, வேலைக்குச் செல்வதற்காகக் குளித்து, தலை சீவி, ஆடை உடுத்தி தயாராகி வெளியே வந்தபோது சரியாக மணி எட்டு.

அவசர அவசரமாக நடந்துவந்தாள். பேருந்துக்காகக் காத்துக்கொண்டிருந்தாள். அனைவரையும் ஏற்றிச் செல்வதற்காக அரசாங்கப் பேருந்து வந்து நின்றது. கூட்டம் அதிகம் என்றாலும் சமாளித்துக்கொண்டு ஏறிவிட்டாள்.

அதே பேருந்தில்தான் இசையழகியிம் எழிலழகியுடன் பயணிப்பாள். எழிலழகியும் எப்படியோ கூட்டத்தைச் சமாளித்துக் கொண்டு ஏறி உள்ளே வந்துவிட்டாள்.

வழக்கமாகச் சிரிக்கும் இசையழகி இன்று சிரிக்கவே இல்லை. அவள் பயத்தில் இருக்கிறாள் என்பது நன்றாகப் புரிந்துவிட்டது. ஆனால் எழிலழகி அருகில் நெருங்கி நின்றாள். சத்தம் இல்லாமல் மௌனமாக “டிக்கெட் எடுத்திட்டியா” என்று கேட்டாள். ” எடுத்துட்டேன்” என்றாள் எழிலழகி.

“ பயமா இருக்குடி. அவர் என்ன சொல்லுவார்ன்னு. ஏத்துக்கிட்ட பரவாயில்லை.” என்றாள் இசையழகி.

(தொடரும்)

# திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாபசுவாமி கோயில் பற்றிய 12 சுவாரஸ்யமான உண்மைகள்"





"சிலை அமைப்பு"

பள்ளிகொண்ட கோலம் :
மூலவர் பத்மநாபஸ்வாமி., 18 அடி நீளத்தில் ஆதிசேஷன் மீது "அனந்தசயன" கோலத்தில் (யோக நித்திரை) காட்சிய அளிக்கிறார். இது கடாஷரகரத்தால் (மூலிகைகள்., பிசின் மற்றும் மணல் ஆகியவற்றின் கலவை) ஆன மும்மூர்த்திகளை (பிரம்மா., விஷ்ணு மற்றும் சிவன்) காட்டுகிறது.
"பிரதான சிலை" நேபாளத்தில் உள்ள கண்டகி நதியிலிருந்து கொண்டு வரப்பட்ட 12,500 சாலிகிராம கற்களால் ஆனது. சாலிகிராமங்கள் விஷ்ணுவின் நேரடி வெளிப்பாடாக வணங்கப்படும் மங்களகரமான கற்கள் ஆகும்.
இந்த கோவில் முதலில் மரத்தால் ஆனது., பின்னர் இன்று கிரானைட்டால் கட்டப்பட்டது. இது வருஷத்தின் நாட்களை., ஒவ்வொரு நாளுக்கும் ஒன்றென., குறிக்கும் வகையில் 365¼ தூண்களைக் கொண்டுள்ளது. 365 தூண்கள் மற்றும் கால் பகுதி தூணும் தாங்கி நிற்கின்றன. ஒவ்வொரு தூணும் ஒரு ஒற்றைக்கல் ஆகும். அவை ஆண்டின் நாட்களையும் தூணின்., கால் பகுதியும் ¼ நாளையும் குறிக்கின்றன. (வருஷத்திற்கு 365¼ நாட்கள்)

"தரிசனத்திற்கு மூன்று கதவுகள்"
பத்மநாப ஸ்வாமி கோயிலின் மிகவும் தனித்துவமான அம்சம் என்னவென்றால்., அதில் அனந்தசயனம் (படுத்த)., அமர்ந்த மற்றும் நின்ற நிலையில் சிலைகள் உள்ளன.
கருவறைக்குள் இருக்கும் பிரதான சிலை அனந்தசயன நிலையில் உள்ளது., 18 அடி நீளம் கொண்டது., மூன்று கதவுகள் வழியாகக் காணலாம்
முதல் கதவு வழியாக இறைவனின் முகத்தையும் அவரது கையின் கீழ் உள்ள சிவலிங்கத்தையும் தரிசிக்கலாம்.
இரண்டாவது கதவு வழியாக இறைவனின் தொப்புளில் இருந்து வெளிப்படும் தாமரையின் மீது அமர்ந்திருக்கும் பிரம்மாவையும்., "உத்சவ மூர்த்தம்" மற்றும் மத்திய கதவு வழியாக நிற்கும் தோரணையில் சிலையையும் தரிசிக்கலாம். மகாவிஷ்ணு., லட்சுமி தேவி (செல்வத்தின் தெய்வம்) மற்றும் பூமி தேவி (பூமியின் தெய்வம்)
மற்றும்., மூன்றாவது கதவு இறைவனின் பாதங்கள்., மற்றும் உத்சவ மூர்த்தி.," திருவிழா ஊர்வலங்களுக்கு எடுத்துச் செல்லப்படும் சிலை அமர்ந்த நிலையில் உள்ளது.

"ஒத்தக்கல் மண்டபம்"
திருவிதாங்கூர் மன்னர் மட்டுமே இந்த "ஒத்தக்கல் மண்டபத்தில்" நமஸ்காரம் செய்வார். அல்லது வணங்குவார். இறைவனின் சிலை இந்த "ஒத்தக்கல் மண்டபத்தில்" இருப்பதால்., வணங்குபவர் அல்லது இங்கு வைக்கப்பட்டுள்ள எந்தவொரு பொருளும் இனி இறைவனுக்குச் சொந்தமானது என்று அர்த்தமாகிறது.
பாரம்பரியத்தின் படி., மன்னர் ஒரு "பத்மநாப தாசர்" (விஷ்ணுவின் ஊழியர்) ஆவார். திருவாங்கூர் ராஜ்ஜியத்தை விஷ்ணு ஆண்டார் என்றும் நம்பப்படுகிறது.
*"ஒத்தக்கல் மண்டபம்" மேடை (ஒத்தக்கல் மேடை) விஷ்ணுவின் கருவறைக்கு முன்னால் உள்ளது. இது ஒற்றை கிரானைட் பலகையால் கட்டப்பட்டுள்ளது. அதன் கிரானைட் தூண்கள் தங்கத்தால் மூடப்பட்டிருக்கும்.

"கோயிலில் தங்கத்தின் பயன்பாடு"
ஸ்ரீ பத்மநாப ஸ்வாமியின் சிலை கிட்டத்தட்ட முழுவதுமாக தங்கத்தால் மூடப்பட்டிருக்கிறது. பிரதான ஸ்ரீகோவிலின் முன்புறத்தில் உள்ள ஒத்தக்கல் (அல்லது ஒற்றைக் கல்) மண்டபமும் தங்கத்தால் மூடப்பட்டிருக்கும். ஸ்ரீ பத்மநாப ஸ்வாமியின் கொடிக்கம்பமும் தங்கத்தால் மூடப்பட்டிருக்கும். மேலும்., பெருதிரு அமிர்த பூஜைக்கான 'நவரத்தின பாயசம்' என்று அழைக்கப்படும் நைவேத்யம் தங்கப் பாத்திரங்களில் இறைவனுக்குப் படைக்கப்படுகிறது.
சமீபத்தில் தெரியவந்த ஒரு தனித்துவமான விஷயம் என்னவென்றால்., சிலையைச் சுத்தம் செய்யும் பொழுது பத்மநாபஸ்வாமி சிலையின் முகம் மற்றும் மார்பைத் தவிர மற்ற அனைத்தும் தங்கத்தால் வார்க்கப்பட்டுள்ளது. கிரீடத்துடன்., காது வளையங்கள்., புனிதமான பூணூல்., மார்பை மூடும் ஆபரணங்கள்., இறைவனின் கால்கள் மற்றும் வலது கை ஒரு பெரிய கங்கணம் அணிந்திருக்கும்., இடது கை ஏந்தியிருக்கும் தாமரை மற்றும் தாமரை தண்டு அனைத்தும் தங்கத்தால் ஆனது. முஸ்லிம் படையெடுப்பாளர்களிடமிருந்து சிலையை மறைக்க கடாஷரகாரம் (அடர்கருப்பு நிற ஆயுர்வேத கலவையால் சிலையை மூடுவது) பயன்படுத்தப்பட்டது.

"மர்மமான அறைகள்"
இந்தக் கோவிலில் 'AF' என பெயரிடப்பட்ட கல்லாரங்கள் எனப்படும் 6 அறைகள் உள்ளன. மேலும் உச்ச நீதிமன்ற உத்தரவுகளின்படி ஜூலை 2ஆம் தேதி., 2011 அன்று 'A' அறை திறக்கப்பட்டது. இந்த அறையில் தங்க நகைகள்., பதக்கங்கள்., விலைமதிப்பற்ற கற்கள்., தங்க நாணயங்கள்., மாதிரி கழுத்தணிகள்., கல் பதித்த ஆபரணங்கள்., தங்கக் கவசங்கள்., தலைக்கவசங்கள்., முத்து நகைகளின் குவியல்கள்., வைரங்கள்., தங்கத் தாமரை., வெள்ளி பிஸ்கட்கள்., கருடவாகனத்திற்கான அலங்காரப் பொருட்கள்., பூஜைப் பொருட்கள் மற்றும் திருவிழா உபகரணங்கள் உள்ளன. ஆகையால் இப்பொழுது இந்த கோவில் உலகின் பணக்கார கோவில்களில் ஒன்றாக மாறக்கூடும். 'A' அறையில் மட்டும் அதிக அளவு புதையல் கண்டுபிடிக்கப்பட்டது. 'F' பெட்டகம் இதுவரை திறக்கப்படாத இறுதி பெட்டகம். அரச குடும்பம் அதனுடன் தொடர்புடைய ஒரு (மாய/மர்மான) சாபத்தைக் கொண்டுள்ளதாக நம்பப் படுகிறது.

"ஸ்ரீபலிபுரா"
ஸ்ரீபலிப்புரா என்பது கல்லால் கட்டப்பட்ட ஒரு செவ்வக நடைபாதையாகும். இது 10,000 தொழிலாளர்களையும் 100 க்கும் மேற்பட்ட யானைகளையும் கொண்டு ஆறு மாதங்களுக்குள் கட்டியதாக நம்பப்படுகிறது. ஸ்ரீபலிப்புராவை 365 தூண்கள் மற்றும் கால் பகுதி தூணும் தாங்கி நிற்கின்றன. ஒவ்வொரு தூணும் ஒரு ஒற்றைக்கல் ஆகும். அவை ஆண்டின் நாட்களையும் தூணின்., கால் பகுதியும் ¼ நாளையும் குறிக்கின்றன. (வருடத்திற்கு 365¼ நாட்கள்)

"தங்க கொடி மரம்"
கொடிமரம் 80 அடி உயரமானது. இது ஆரம்பத்தில் தேக்கு மரத்தால் ஆனது. பின்னர் இது தங்கக் கொடிமரமாக மாற்றப்பட்டது. விஷ்ணுவை சுமந்து செல்லும் புனித பறவையான கருட சுவாமி கம்பத்தின் உச்சியில் வைக்கப்பட்டுள்ளது.

"சிக்கலான கோபுரம்"
கிரானைட்டால் ஆன 35 மீட்டர் உயரமான ஏழு அடுக்கு கோபுரம்., ஒவ்வொரு பார்வையாளர் மனதிலும் கோவிலின் காட்சியின் நினைவைப் பதிக்கிறது. கோபுரத்தில் விஷ்ணுவின் 10 அவதாரங்களும்., மேலே ஏழு தங்கக் கலசங்களும் பொருத்தப்பட்டுள்ளன. தரை தளத்தில் உள்ள திறப்பு., கோயிலுக்குள் நுழைய ஒரு பெரிய வாயிலைக் கொண்டுள்ளது.

"கலைநயமிக்க அற்புதம்"
இந்தக் கோவிலின் கட்டிடக்கலை., கிரானைட்டால் ஆன 35 மீட்டர் உயரமான ஏழு அடுக்கு கோபுரமாகும். கோபுரத்தில் விஷ்ணுவின் 10 அவதாரங்களும்., மேலே ஏழு தங்கக் கலசங்களும் வைக்கப் பட்டுள்ளன. தரை தளத்தில் உள்ள திறப்பு., கோயிலுக்குள் நுழைய ஒரு பிரமாண்டமான வாயிலைக் கொண்டுள்ளது. இக் கோவில் திராவிட மற்றும் கேரள பாணி கட்டிடக்கலை கலவை ஆகும். இது அதன் கட்டிடக்கலை அற்புதத்திற்கும் பெயர் பெற்றது. கலை., கட்டிடக்கலை., அறிவியல் மற்றும் பொறியியல் துறைகளில் கடந்த கால படைப்பின் சாதனை. தற்போதைய தரங்களுடன் ஒப்பிட முடியாது.
இந்தக் கோவில் தமிழ்நாட்டின் திருவட்டாறில் உள்ள ஆதி கேசவப் பெருமாள் பிரதிமையால் ஈர்க்கப்பட்டதாகக் கூறப்படுகிறது. இரண்டு கோயில்களிலும் உள்ள தெய்வம் அனந்தசயன நிலையிலேயே உள்ளது.
மற்றொரு அற்புதமான கட்டிடக்கலை வேலைப்பாடு., 28 தூண்களின் துணையுடன் கூடிய சப்தஸ்வர மண்டபம் ஆகும். நான்கு மூலைகளிலும் உள்ள தூண்கள் தட்டப்பட்டால் இசைக் குறிப்புகளை உருவாக்கும் என்றும் கூறப்படுகிறது..

"புனிதமான பத்மதீர்த்தம்"
திருவனந்தபுரம் நகரின் மிகப் பழமையான நீர்நிலைகளில் ஒன்றான பத்மதீர்த்தம்., கோவிலின் கோவில் குளமாகும். இந்தக் குளம் பல இந்து மத நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஸ்ரீபலராமர் இந்தக் கோயிலுக்கு வருகை தந்து., பத்மதீர்த்தத்தில் நீராடி., பல பூஜைகளை செய்த்தாக ஸ்ரீமத் பாகவதம் கூறுகிறது.

"அழகான சுவரோவியங்கள்"
பிரதான கருவறையின் வெளிப்புறச் சுவர்கள் சுவரோவியங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. கருவறையின் பின்புறத்தில் உள்ள அனந்தசயனத்தின் 18 அடி நீள சுவரோவியம் கேரளாவின் கோயில் சுவரோவியங்களில் மிகப் பெரியதாகக் கருதப்படுகிறது. இது தமிழ் பிறாமண சுவரோவியக் கலைஞர்களால் வரையப்பட்டது.

"திருவம்பாடி ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி கோயில்"
திருவம்பாடி ஸ்ரீ கிருஷ்ணர் ஸ்வாமி கோவில் பிரதான கோயில் சுவர்களுக்குள் இருந்தாலும்., தனித்தனி கொடி கம்பம்., புனித கற்கள் மற்றும் அதன் சொந்த சடங்குகளுடன் கூடிய தனி கோயிலின் அந்தஸ்தை அது பெற்றிக்கிறது. இது மிகவும் அசாதாரணமானது. பார்த்தசாரதி வடிவத்தில் ஸ்ரீ கிருஷ்ணரின் இருப்பு இங்கே இயற்கையாகவே கவர்ச்சிகரமானது. கோவிலின் வெளிப்புறச் சுவர்கள் விளக்குகளால் முழுமையாக மூடப்பட்டிருக்கும். இது வில்லுக்கு மடம் என்றும் அழைக்கப்படுகிறது. மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம்., உச்சியில் கவர்ச்சிகரமான கஜ லட்சுமி கிரானைட்டில் செதுக்கப்பட்டுள்ளது.


"இந்த கோவிலின் கடைபிடிக்க வேண்டிய நடைமுறை விதிகள்"
1. ஆடை விதிகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் ஆண்கள் : கட்டாயமாக வேட்டி (வெள்ளை அல்லது காவி) அணிய வேண்டும். சட்டை., டிஷர்ட்., பனியன் (Shirt., TShirt) அணியக்கூடாது. மேல் சட்டை இல்லாமல் (BareBodied) அல்லது அங்கவஸ்திரம் அணிந்து செல்லலாம். பெண்கள் : பாரம்பரிய புடவை (Saree) அணிய வேண்டும். சுடிதார்., குர்தி, ஜீன்ஸ்., பேண்ட் மற்றும் பிற நவீன உடைகள் (Salwar kameez, Western Wear) கண்டிப்பாக தடை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகள்: சிறுவர்கள் வேஷ்டி அணிய வேண்டும். பெண்கள் பாரம்பரிய பாவாடை/சட்டை (Long skirt and blouse) அணியலாம். பி.கு. வாடகை/கொள்முதல்: பாரம்பரிய உடை (வேஷ்டி., செட் வேஷ்டி அங்கவஸ்திரம்) கோவில் நுழைவாயிலுக்கு அருகில் உள்ள கடைகளில் வாடகைக்கு அல்லது விலை கொடுத்தும் வாங்கலாம். இல்லையெனில் நுழைவது தடைசெய்யப்பட்டுள்ளது.
2. நீங்கள் வெறுங்காலுடன்தான் கோயிலுக்குள் நுழைய வேண்டும்.
3. இந்துக்கள் மட்டுமே கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கப்படுகிறார்கள்.
4. கேஜெட்டுகள் {மின்னணுவியல் சாதனம்., சிறுகருவி அல்லது உபகரணம்} கண்டிப்பாக தடைசெய்யப்பட்டுள்ளன.
5. புகைப்படம் எடுக்கக் கூடாது., சிறு கேமரா., மொபைல் கேமரா., ஸ்மார்ட் வாட்ச்., தோல்/துணி பெல்ட் பை (Pouch) ஆகியவற்றிக்கு அனுமதி கிடையாது.
6. கோயிலின் மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து சுவாரஸ்யமான பகுதிகளையும் ஆராய கோயிலுக்குள் ஒரு மணி நேரம் செலவிட முயற்சிக்கவும்.
7. கோயிலின் உள்ளே உள்ள தூண்களிலிருந்து (கடல்) அலைகளின் சத்தத்தைக் கேட்கலாம்.
8. பிரதான கருவறை மங்கலாக ஒளிரும்., சிலை அடர் கருப்பு நிறத்தில் இருப்பதால் சிலையின் விவரங்களைக் காண நீங்கள் நெருக்கமாகப் பார்க்க வேண்டும்.
9. அமைதியான தரிசனத்தைப் பெற அதிகாலையில் வருகை தாருங்கள்.

-எம்.அசோக்ராஜா
அரவக்குறிச்சிப்பட்டி
திருச்சி _620015

# தினம் ஒரு தலைவர்கள் குட்டிமாலு வரலாறு



குட்டிமாலு ஒரு சுதந்திரப் போராட்ட வீரர் மற்றும் சுதேசி பிரச்சாரகர், இந்திய தேசிய காங்கிரஸின் தீவிர உறுப்பினர், சுதந்திரத்திற்கு முன்பு இரண்டு முறை சென்னை சட்டமன்ற உறுப்பினராக இருந்தார், மற்றும் அயராத சமூக சேவகர். கூட்டநாட்டில் உள்ள அனக்கார வடக்கத் மாளிகையைச் சேர்ந்தவர், இது அம்மு சுவாமிநாதன், ஜனன்ஏவின் கேப்டன் லட்சுமி, நடனக் கலைஞர் மிருணாளினி சாராபாய் மற்றும் முன்னாள் மக்களவை உறுப்பினர் சுபாஷினி அலி உள்ளிட்ட பல பிரபலமான பெண் சுதந்திரப் போராளிகள் மற்றும் சமூகப் பணியாளர்களை உருவாக்கியுள்ளது. அவரது கணவர் கோழிபுரத்து மாதவ மேனன், கேரள பிரதேச காங்கிரஸ் குழுவின் தலைவராகவும், சென்னை மாநிலத்தில் அமைச்சராகவும் இருந்தார்.





1930 ஆம் ஆண்டில், வெளிநாட்டு இறக்குமதிகளுக்கு எதிராக காதி அல்லது கைத்தறி துணியை ஊக்குவிக்கும் இயக்கத்தில் பங்கேற்க குட்டிமாலு தன்னார்வத் தொண்டு செய்தார். அடுத்த ஆண்டு கோழிக்கோடு நகரில் வெளிநாட்டு துணிகளை விற்கும் கடைகளை அவர் மறியல் செய்தார். 1932 ஆம் ஆண்டில், ஒத்துழையாமை இயக்கத்தின் போது, தனது இரண்டு மாத மகளை கைகளில் ஏந்தி, பெண்கள் அணிவகுப்பில் அணிவகுத்துச் சென்றார். சட்டவிரோத பொதுக் கூட்டத்திற்காக அவர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். கோழிக்கோடு நீதிமன்றத்தில் பிரிட்டிஷ் மாஜிஸ்திரேட் முன் ஆஜரானார்,



அங்கு அவர் தனது குழந்தையை ஒப்படைக்க உத்தரவிடப்பட்டார், ஆனால் குட்டிமாலு தனது மகளை விட்டு வெளியேற அனுமதிக்க மறுத்து, தனது வாதங்களை ஆதரிக்க சட்டங்களை மேற்கோள் காட்டினார். இறுதியாக, 1934 வரை சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட போதிலும், நீதிமன்றம் குழந்தையை தன்னுடன் இருக்க அனுமதிக்க வேண்டியிருந்தது.

1936 ஆம் ஆண்டு அவர் சென்னை சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார், ஆனால் 1940 ஆம் ஆண்டு மீண்டும் ஒரு சத்தியாக்கிரகத்தின் போது கைது செய்யப்பட்டு ஒரு வருடம் சிறையில் அடைக்கப்பட்டார். விடுதலையான சில மாதங்களுக்குப் பிறகு, அவர் மீண்டும் 1942 ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டார், மேலும் தமிழ்நாட்டின் அமராவதி சிறையில் இரண்டு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டார். விடுதலையானதும், 1944 இல் அவர் கேரள பிரதேச காங்கிரஸ் குழுவின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் அகில இந்திய காங்கிரஸ் குழு மற்றும் காங்கிரஸ் செயற்குழுவில் பணியாற்றினார். அவர் கோழிக்கோடு நகராட்சியிலும் பணியாற்றினார். 1946 ஆம் ஆண்டு அவர் மீண்டும் சென்னை சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டார். கைவிடப்பட்ட மற்றும் ஆதரவற்ற குழந்தைகளை மறுவாழ்வு செய்வதற்காக மாதிரி அனாதை இல்லங்களை அமைப்பதற்கான அவரது முயற்சிகளுக்காக அவர் நினைவுகூரப்படுகிறார். அவரது பணிகளை எம். கே. காந்தி, ஜவஹர்லால் நேரு மற்றும் சி. ராஜகோபாலாச்சாரி ஆகியோர் மிகவும் பாராட்டினர்.

மார்ச் 2007 இல், கூட்டநாட்டில் அவரது நினைவாக ஒரு வருட கொண்டாட்ட நிகழ்ச்சி தொடங்கப்பட்டது, மேலும் 2008 ஆம் ஆண்டில் கேரள அரசு மெலிலா ராஜசேகர் இயக்கிய அவரது வாழ்க்கை குறித்த ஆவணப்படத்தை இயக்கியது.

# லெஜண்ட் சரவணனின் "லீடர்" ரிலீஸ் அப்டேட்



அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று தெரிகிறது.

லெஜண்ட் சரவணன் மற்றும் இயக்குநர் துரை செந்தில்குமார் கூட்டணியில் உருவாகி இருக்கும் புதிய படத்திற்கு ‘லீடர்’ என தலைப்பிடப்பட்டுள்ளது. அண்மையில் வெளியான இந்தப் படத்தின் டிரெய்லர் ரசிகர்களின் கவனத்தை ஈர்த்தது. இந்தப் படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார்.

தி லெஜெண்ட் நியூ சரவணா ஸ்டோர்ஸ் புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் உருவாகி இருக்கும் இந்தப் படத்திற்கு எஸ். வெங்கடேஷ் ஒளிப்பதிவு செய்ய பிரதீப் படத்தொகுப்பை கவனிக்கிறார். கலை இயக்க பணிகளை துரைராஜ் மேற்கொண்டுள்ளார். இந்தப் படத்தின் சண்டை காட்சிகளை மேத்யூ மகேஷ் அமைத்துள்ளார்.

ஆக்ஷன் கதையம்சம் கொண்ட இந்தப் படத்தின் டீசரை படக்குழு வெளியிட்டது. இந்தப் படம் வருகிற ஏப்ரல் மாதம் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டு தேதி பற்றி எந்த தகவலும் வழங்கப்படாமல் இருந்தது. இந்த நிலையில், "லீடர்" திரைப்படம் ஏப்ரல் 3-ஆம் தேதி வெளியகும் என்று தகவல் வெளியாகி உள்ளது.

"லீடர்" திரைப்படத்தின் வெளியீடு குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று தெரிகிறது. முன்னதாக இந்தப் படத்தின் இசை வெளியீட்டு விழா வருகிற மார்ச் 21-ஆம் தேதி சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது.

# #JanaNayagan படத்திற்கு நீடிக்கும் சிக்கல்



விஜய் நடித்துள்ள ‘ஜன நாயகன்’ கடந்த ஜனவரி மாதம் 9-ந்தேதி திரைக்கு வருவதாக இருந்தது. இந்நிலையில் படம் மறுதணிக்கையாவதில் தாமதம் ஏற்பட்டதை தொடர்ந்து படம் வெளியாவது தேதி குறிப்பிடாமல் ஒத்தி வைக்கப்பட்டு உள்ளது.

இது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் தயாரிப்பு நிறுவனம் சார்பில் வழக்கு தொடரப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிபதி ஆஷா மறுஆய்வுக் குழு பார்வையிட பரிந்துரை செய்த தணிக்கை வாரிய தலைவரின் உத்தரவை ரத்து செய்து உத்தரவிட்டார்.

தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து தணிக்கை வாரியம் மேல்முறையீடு செய்தது. இதை அடுத்து படக்குழு சுப்ரீம் கோர்ட்டை நாடியது. வழக்கை தலைமை நீதிபதி அமர்வே விசாரிக்கும் என சுப்ரீம் கோர்ட்டு தெரிவித்தது.

சுப்ரீம் கோர்ட்டு வழக்கை விசாரித்து தனி நீதிபதி பிறப்பித்த உத்தர வுக்கு தடை விதித்ததோடு தணிக்கை வாரியத்துக்கு உரிய கால அவகாசம் அளித்து வழக்கை மீண்டும் விசாரிக்க தனி நீதிபதி பி.டி. ஆஷாவுக்கு உத்தரவிட்டது.

இந்நிலையில் ‘ஜன நாயகன்’ பட மறுதணிக்கை தொடர்பான வழக்கு திரும்ப பெறப்பட்டது. இதை தொடர்ந்து மறு தணிக்கைக்கு படத்தை படக்குழு அனுப்பி இருக்கிறது.

இதை அடுத்து ஜனநாயகன் படத்தை மறுதணிக்கை குழுவினர் இன்று பிற்பகல் 2.30 மணி அளவில் பார்க்க இருந்தனர்.

ஆனால் கமிட்டி உறுப்பினர் ஒருவருக்கு உடல்நலக் குறைவு ஏற்பட்டதால் ஜனநாயகன் படத்தை மறுதணிக்கை குழுவினர் இன்று பார்க்கவில்லை. இதை அடுத்து படம் வெளியாவதில் தொடர்ந்து சிக்கல் ஏற்பட்டு உள்ளது.


தெலுங்கில் வெளிவந்த உப்பண்ணா படத்தில் கதாநாயகியாக அறிமுகமானார் நடிகை க்ரித்தி ஷெட்டி. சமீபத்தில் இவர் நடிப்பில் வா வாத்தியார் படம் தமிழில் வெளிவந்தது. தொடர்ந்து தென்னிந்திய மொழிகளில் படங்கள் நடித்து வரும் க்ரித்தி ஷெட்டி நடிப்பில் அடுத்ததாக LiK, ஜீனி ஆகிய படங்களும் வெளியாகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், ரசிகர்களின் மனம் கவர்ந்த இளம் நடிகை க்ரித்தி ஷெட்டியின் லேட்டஸ்ட் கிளாமர் போட்டோஷூட் புகைப்படங்கள் தற்போது ரசிகர்கள் மத்தியில் வைரலாகி வருகின்றன.

இதோ பாருங்க:



# பாலியல் குற்றச்சாட்டு: இயக்குனருக்கு முன் ஜாமின்




கேரளா மட்டுமின்றி தமிழகத்திலும் கடந்த 2022-ம் ஆண்டு பரபரப்பை ஏற்படுத்திய சினிமா ‘மஞ்சும்மல் பாய்ஸ்’. இந்த படத்தை இயக்கியவர் சிதம்பரம். படத்தின் வெற்றியின் மூலம் பிரபலமான இவர் மீது இளம்பெண் பாலியல் புகார் கொடுத்து பரபரப்பை ஏற்படுத்தி உள்ளார்.

கேரள மாநிலம் கொச்சி அருகே உள்ள எலம்குளம் பகுதியில் ஒரு அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் இளம்பெண் ஒருவர் எர்ணாகுளம் தெற்கு போலீசில் இது தொடர்பாக புகார் அளித்துள்ளார்.

டைரக்டர் சிதம்பரம், தனது பிளாட்டில் புகுந்து பாலியல் நோக்கத்துடன் தவறாக நடந்து கொண்டதாக புகாரில் அவர் குறிப்பிட்டுள்ளார். அதன் அடிப்படையில் டைரக்டர் சிதம்பரம் மீது பாலியல் வன்கொடுமை வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஐ.பி.சி. பிரிவு 74 மற்றும் 75-ன் கீழ் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து தீவிர விசாரணை நடைபெற்று வருவதாகவும், விரைவில் டைரக்டர் சிதம்பரத்திடம் விசாரணை நடத்தப்படும் என்றும் எர்ணாகுளம் தெற்கு போலீசார் தெரிவித்தனர்.

தேவைப்பட்டால் கைது உள்ளிட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போலீசார் தெரிவித்தனர்.

இந்நிலையில், மஞ்சும்மல் பாய்ஸ் படத்தின் இயக்குநர் சிதம்பரம் எஸ். பொதுவாலுக்கு எர்ணாகுளம் அமர்வு நீதிமன்றம் முன்ஜாமின் வழங்கியது.

சிதம்பரம் எஸ். பொதுவால் மீது அண்மையில் இளம் பெண் அளித்த பாலியல் புகாரை விசாரித்த எர்ணாகுளம் அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.



சூப்பர் சிங்கர் நிகழ்ச்சியின் மூலம் பிரபலமானவர்களின் ஒருவர் சிவாங்கி கிருஷ்ணகுமார். இதன்பின் குக் வித் கோமாளியில் களமிறங்கிய இவருக்கு மக்கள் மத்தியில் அமோக வரவேற்பு கிடைத்தது. இதன்மூலம் வெள்ளித்திரையில் நடிகையாகவும் கால்பதித்தார். ஆனால், அதையெல்லாம் விட இவருடைய குரலுக்குத்தான் ரசிகர்கள் அதிகம். லப்பர் பந்து, லவ் மேரேஜ், வெந்து தணிந்தது காடு போன்ற பல திரைப்படங்களில் பாடல்கள் பாடியுள்ளார். இன்ஸ்டாகிராமில் ஆக்டிவாக இருக்கும் சிவாங்கி, தற்போது தனது கலக்கலான புகைப்படங்களை பதிவிட்டுள்ளார். இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

# குழந்தைகளுக்காக உருவான "மரகதமலை"



தமிழ் சினிமாவில் சிறுவர்களுக்கான படங்கள் மற்றும் சாகச காட்சிகள் நிறைந்த படங்களின் வருகை அரிதாக இருக்கும் நிலையில், இந்த இரண்டு அம்சங்களுடன் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைத்து தரப்பினரையும் கவரக்கூடிய படமாக உருவாகியுள்ளது “மரகத மலை.”

அறிமுக இயக்குநர் எஸ். லதா கதை, திரைக்கதை, வசனம், பாடல் எழுதி இயக்கி இருக்கிறார். மேலும், எல்.ஜி மூவிஸ்நிறுவனத்துடன் இணைந்து எஸ். லதா இந்தப் படத்தை தயாரித்தும் இருக்கிறார்.

இதில் நாயகனாக சந்தோஷ் பிரதாப் நடிக்க, நாயகியாக தீப்ஷிகா நடித்திருக்கிறார். இவர்களுடன் தம்பி ராமையா, ஜெகன் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்திருக்கிறார்கள். மேலும், மாஸ்டர் சஷான்ந் முக்கிய கதாபாத்திரத்தின் மூலம் நடிகராக அறிமுகமாகிறார். அவரது நண்பனாக அரிமா வர்மன், குழந்தை நட்சத்திரமான கலைக்கோவர்மன், மகித்ரா உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள்.

மரகதமலை 18 ஆம் நூற்றாண்டில் நடக்கும் கதை. புலி, பாம்பு, யானை, கொரில்லா குரங்கு ஆகிய விலங்குகளின் அனிமேஷன் காட்சிகளும் படத்தில் முக்கிய பங்கு வகித்துள்ளது. மேலும், தமிழ் சினிமாவில் இதுவரை காட்சிப்படுத்தாத டிராகனையும் அனிமேஷனில் தத்ரூபமாக வடிவமைத்திருப்பது இப்படத்தின் சிறப்பு அம்சமாகும்.

எல்.வி. முத்து கணேஷ் இசையமைத்திருக்கும் இந்தப் படத்திற்கு பி.ஜி. முத்தையா ஒளிப்பதிவு செய்துள்ளார். பைஜு டான் பாஸ்கோ படத்தொகுப்பு செய்ய, பி. சண்முகம் கலை இயக்குநராக பணியாற்றி இருக்கிறார். டேஞ்சர் மணி சண்டைக்காட்சிகளை வடிவமைக்க, பாப்பி மாஸ்டர் மற்றும் சந்தோஷ் நடன காட்சிகளை வடிவமைத்துள்ளனர்.

இந்தப் படத்திற்கு பா.விஜய், கே.டி. சேஷா பாடல்களை எழுதியுள்ளனர். கே. தண்டபானி நிர்வாக தயாரிப்பாளராக பணியாற்றியிருக்கிறார். இந்த கோடை கொண்டாட்டமாக செவென்த் ஸ்டுடியோ நிறுவனம் சார்பில் கண்ணன் இந்த படத்தை ஏப்ரல் 3-ஆம் தேதி தமிழகமெங்கும் திரையரங்குகளில் வெளியிடுகிறார்.

# ஹேப்பி ராஜ் 2வது சிங்கிள் அப்டேட்



இசையமைப்பாளரும், நடிகருமான ஜி.வி. பிரகாஷ் குமார் நடிப்பில் உருவாகி இருக்கும் திரைப்படம் “ஹேப்பி ராஜ்.” இந்தப் படத்தை அறிமுக இயக்குநரான மரியா ராஜா இளஞ்செழியன் இயக்குகிறார். அவர் பிரதீப் ரங்கநாதனின் ‘லவ் டுடே’ படத்தில் உதவி இயக்குநராக பணியாற்றியவர்.

இந்தப் படத்தில் ஜி.வி. பிரகாஷ்-க்கு ஜோடியாக ஸ்ரீ கௌரி பிரியா நடிக்கிறார். மேலும், இந்தப் படத்தின் மூலம் 11 வருடங்களுக்குப் பிறகு தமிழ் சினிமாவிற்கு அப்பாஸ் கம்பேக் கொடுக்கிறார். இந்தப் படத்திற்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைக்கிறார். ஹேப்பி ராஜ் படத்தின் முதல் பாடலான “ஆடினே இருப்பேன்” சமீபத்தில் வெளியாகி பெரும் வரவேற்பை பெற்றது. இந்தப் பாடலில் அஜித் குமார் ரேசிங், பென்குயின் என சமீபத்திய டிரெண்டிங் சம்பவங்களின் காட்சிகள் சேர்க்கப்பட்டன. ஜஸ்டின் பிராபகரன் இசையில் துல்லலான பாடலாக “ஆடினே இருப்பேன்” அமைந்தது. முதல் பாடல் நல்ல வரவேற்பை பெற்ற நிலையில், ஹேப்பி ராஜ் திரைப்படத்தின் இரண்டாவது பாடல் குறித்த அப்டேட் வெளியாகி உள்ளது.

அதன்படி ஹேப்பி ராஜ் திரைப்படத்தின் இரண்டாவது சிங்கிள் ‘துரு துரு’ நாளை மாலை 5.00 மணிக்கு வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இந்தப் பாடலை விவேக் எழுத, கங்கை அமரன் பாடியுள்ளார். முதல் பாடலை போன்றே இரண்டாவது பாடலும் பெரும் வரவேற்பை பெறும் என்று தெரிகிறது.






## மாற்றத்தை வரவேற்போம்

பெண்ணாய் பிறந்தால்
கள்ளிப்பால் ஊத்தியே//

அப்பிஞ்சின் மூச்சை
நிறுத்தியது உண்டு//

வயிற்றில் உதித்தது
பெண்ணென்றால்
கருவிலேயே//

உருத்தெரிந்து விடாமல்
கல்நெஞ்சுடன்
அழித்ததுண்டு//

தன்னினத்தின் பெருமை
புரியாமல் அழித்தவர்க்கு//

பாடம் புகட்டிடவே துனிந்தனர்
பெண்கள்//

சட்டங்கள் கடுமையாகி
தண்டனைகள் வழங்கியதும்//

பெண் குழந்தைகளுக்கு தனி
சலுகைகள்//

அரசே வழங்கி ஒதுக்கப்பட்ட
குழந்தைகளை//

தொட்டில் திட்டத்தில்
காப்பாற்றி திருமணத்துக்கு//

தங்கத்தில்
தாலியும் சீர்
வரிசைகளுமளித்திடவே//

மாற்றங்கள்
வந்தது மக்களிடம்
மெல்லமாகவே//

சாதிக்க பிறந்தவர்கள்
பெண்களென உணர்த்தியே//

கல்வியிலும்
வேலைவாய்ப்பிலும்
போட்டியிட்டு முன்னேறியே//

தன் குடும்பம் தலைநிமிர
தானே//

உழைத்து பொருள் சேர்த்து
நரகத்திலிருந்து//

மீண்டே ஜெயித்து அத்தனை
துறையிலும்//

தானும் ஜொலித்து
மற்றவர்களையும்
கைத்தூக்கி//

கல்வியின் முக்கியம் புரிந்து
குழந்தை திருமணங்களை//

எதிர்த்து நின்று சட்டமாக்கியே
தலைநிமிர்ந்தனரே//

இக்காலப்பெண்கள்
மட்டுமின்றி வயதில்
மூத்தவர்களும்//

பெண்ணென
இப்பூமியில் ஜனித்திட
பெருமைகொள்வோம்//



மாதர்தம் பெருமைதனை
அனைவருக்கும்
புரியவைப்போம்//

**உமாதேவி சேகர்**
பியூட்டிஷியன், தஞ்சை



## தித்திக்கும் சுதந்திரம்

முப்பதுகோடி
முகமுடையாளே!
கால வெள்ளத்தில்
எதிர்நீச்சலிட்டு நூறுகோடி
முகங்களைத்தந்தாய்
முக்கால்பங்கு வேடிக்கை
முகங்களாய்த்தந்துவிட்டாயே!

பாரதத்தாயே!
மகிழ்ச்சி மலரின்
மகரந்தத்தை உன்னிடம்
யாசித்தோம் முட்களின்
வித்துக்களை ஏன்
பரிசளித்தாய்?

வயல்வெளியில்
வறட்சியென்றாலும்
நீதி மன்றங்களில்
வழக்குகளுக்கு மட்டும்
பஞ்சம் வருவதில்லை!

இங்கே விடுதலை மறவர்கள்
சாதனைக்கடலில்
மூழ்கிப்பொதுநல
முத்தெடுத்தார்கள்
அதைச்சுயநல நரம்புகளில்
தொடுப்பது முறையோ?

ஆலமரத்தின் அம்சமாய்
ஆற்றலாய் அவதரித்தவளே!
முருங்கை மரமாய் உன்னை
முடக்கியவர் யார்?

இராணுவம்
வளர்ந்துவிட்டதை
எண்ணி புளகாங்கிதம்
அடைந்தாலும்
தீவிரவாதிகளின்
ஊடுருவல் உள்ளத்தை
உலுக்குகிறது!

சோம்பேறிகளின்
சொப்பனத்தில்
வசந்தத்தின் வாயில்
திறக்காது!
இலட்சிய எலும்பைக்கவ்வ
வெறிகொண்டு எழுக!
வெறிக்கு நடுவில்தான்
வெற்றி என்னும்
வல்லினம் ஒளிந்திருக்கிறது!

பாரதத்தாயே!
உன் தேகமாம் தேசமெங்கிலும்
மாற்றுத்திறனாளிகளின்
தன்னம்பிக்கை ஆறுதல்
அளிக்கிறது
ஏமாற்றுத்திறனாளிகளின்
மோசடிகள் அச்சம்
தருகின்றன!

சுதந்திரம் என்பது
முழு நெல்லிக்கனி
கட்டுப்பாடுகளாய்
முதலில் கசக்கும்
நன்னெறிகளை வளர்த்து
பின்னர் இனிக்கும்
தித்திக்கும் சுதந்திரம்
திகட்டாத சுதந்திரம்
கட்டுப்பாட்டில் தான்
கருக்கொண்டிருக்கிறது!

சுதந்திரத்திருநாள்
அடிமைவிலங்குகள்
ஒடிந்த நினைவு நாளல்ல
சாதனை வில்லை வளைத்து
நாணேற்றும் நன்னாள்!
வெற்றிக்கணைகளைத்
தொடுத்திடும் பொன்னாள்!

பூசல்கள் புழுதியைக்
கிளப்பினாலும்
சமத்துவ வானத்திற்கு
அரணாகும் அகிம்சை
ஓசோன் மாசடையலாகாது



ஏனென்றால் சுதந்திரம்
மூச்சுத்திணற வைக்கும்
சூறாவளியன்று
சுவாசிக்கும் தென்றல்!

**கவிஞர்**
**த.அனந்தராமன்**
துறையூர்

## ரகசியம்

ஜெயிப்பதல்ல,
வாழ்க்கையோடு
போராடுவதே வாழ்க்கை



என்றறிந்தபின்
வாழ்க்கையோடு
போராடுவது
எத்தனை
எளிதாக!

**கே. பி.**
**ஜனார்த்தனன்**



## ஹைக்கூ

உழைத்தக்கூலிதான்
சங்கடத்தோடு பெறுகிறான்
மயானத்தொழிலாளி

ஆடை கழற்ற வெட்கப்பட்டு
புதரில் மறைகிறது
நாகப்பாம்பு

எட்டுமணிநேர வேலை
எட்டாகனியாகவே உள்ளது
திருப்பூர்வாசிகளுக்கு

அவ்வப்போது இளசுகளுக்கு
அழகை சரிசெய்ய பயன்படும்
அலைபேசி சுயமி

குட்டி போடாதுயென
தெரிந்தும் திறந்துப்பார்க்கத்
தோனுகிறது
புத்தகத்தில் மயிலிறகு

வனத்துறை மரங்கள்
சொந்தம் கொண்டாட
முடியல எச்சமிட்ட பறவைகள்

ஏமாந்துப்போகும் எறும்புகள்
பாவத்தை சம்பாதிக்கிறார்கள்
கோலமிடும் பெண்கள்

கோடை விடுமுறை
கொண்டாட முடியவில்லை
ஏழை விவசாயி மகன்

ஊருக்குப்போனாள்



மனைவி
தூங்கவைக்க
துணையானது
மனைவியின்
பழைய சேலை

**நாகை**
**ஆசைத்தம்பி**
கோவை



## பட்டாசு சத்தம் !

பட்டாசு சத்தம் கேட்கும் போதெல்லாம்
பரவவில்லை மகிழ்ச்சி என்றும் எனக்கு !

பட்டாசு சத்தம் கேட்கும் போதெல்லாம்
படரும் கொடிய தீயே நினைவில் வருகிறது !

பட்டாசு விபத்தால் உயிரிழந்த பல
பரிதாபங்கள் நினைவில் வருகின்றன !

பட்டாசுப் பட்டு பாவம் சிறிய
பிஞ்சுகள் கூட கருகியதுண்டு !

கோயில் விழாவில் பட்டாசு வெடித்த
கொடூரங்கள் நினைவில் வருகின்றன !

தீபாவளியன்றே பட்டாசு விபத்தால்
தீயுக்கு இரையான நிகழ்வு நினைவுக்கு வந்தது !

தீபாவளியன்றே குடியிருந்த கூரையில்
தீப்பிடித்து குடிசை இழந்தோர் உண்டு !

பட்டாசு செய்யும் தொழிலுக்கு வந்து
படிப்பை விட்டோர் நினைவுக்கு வருகின்றனர் !

பட்டாசு தொழிற்சாலை விபத்தில்
பலியான தொழிலாளர்கள் நினைவு வந்தது !.



ஏழைக்குழந்தை பட்டாசு கிடைக்காமல்
ஏங்கிய நிலைகளும் நினைவிற்கு வந்தது !

பட்டாசு விபத்தால் ஆதரவற்றோர் ஆன
பல குடும்பங்கள் நினைவில் வந்தன !

கரி காசாகுது நெய்வேலியில்
காசு கரியாகுது தீபாவளியில் நினைவிற்கு வந்தது !

பட்டாசுக்கு வீணாய் செலவிடும் பணத்தை
பண்போடு ஆதரவற்றோர் விடுதிக்கு வழங்கலாம் !

பட்டாசுக்கு வீணாய் செலவிடும் பணத்தை
பயன் தரும் நூல்கள் வாங்கி மகிழலாம் !

**கவிஞர் இரா .இரவி !**



## நேர்த்திக்கடன் !

முன்பெல்லாம் நல்ல
விசயங்கள் நடக்க
ஆடு, கோழியை வெட்டி
நேர்த்திக்கடன் செலுத்திய
காலம் மாறித்தான் போனது...
இப்போதெல்லாம்
வெட்டிய வழக்கிலிருந்து



தப்பிக்க
செலுத்துகிறார்கள்
நேர்த்திக்
கடன்களை

**எம்.பி.**
**தினேஷ்.**
கோவை



## மங்கையர் தினக்கவிதை

வெளியே கிளம்ப
காலடி வைக்கும் முன்..

எங்கே போகிறாய்?
எதற்காக போகிறாய்?
என்ன செய்ய போகிறாய்?

கேள்விகளுக்கு பதிலாக,
பதிவாக; உறுதியாக
சொல்லட்டும்:

என் முடிவு ; இது
நானே முடிவு செய்கிறேன்:

எங்கே செல்லவேண்டும்;
எதற்காக செயலாற்ற



வேண்டும்
என்ன செய்ய
வேண்டும்?

என் விடிவு;
என்
முடிவிலேயே
இருக்கட்டும்

**சசிகலா விஸ்வநாதன்**




## பட்டினத்தார்.

பட்டினத்தாரே..
பட்டினத்தாரே..
பட்டதைப் பாடினீரே.!
கட்டிக் கரும்பைக்
கரங்களில் ஏந்தி..
காசினை வீசினீரே.!
சட்டிச் சுட்டிட..
சத்திய வாழ்வின்
சாரம் உரைத்தவரே!
வட்டியும் முதலுமாய்
வரவினை செலவினை
வாஞ்சையாய் பகர்ந்தவரே.!

காதற்ற ஊசியும்..
வாராது என்பதை
கனிவாகச் சொன்னவரே
யாதுமே ஈசனாய்
யாவரும் உறவாய்
யாவையும் துறந்தவரே!
வீதிவரை உறவென
வெந்திடும் வாழ்வை
விபரமாய்ச் மொழிந்தவரே
வேதமாய் உரைத்து
வீதியிலே நின்று
நீதியாய் நிலைத்தவரே!

பட்டினத்துச் சாமியே
பாசத்தைத் துறந்தவரே
வொற்றியூர் மறைந்தவரே..
செட்டியாரு குலத்திலே
சீமானாய் பிறந்துமே
செல்வத்தை துறந்தவரே.!
கொட்டிவைத்தத் முத்தினை
குபேர வாழ்வினை
தட்டிவிட்டு வந்தவரே!
விட்டுவிடு ஆசையை
வெளிவேச உலகத்தை
விட்டு வந்த பட்டினத்தாரே!

**வே.கல்யாண்குமார்.**



## காதலில்

எங்கோ பார்த்த முகம்
என்னை மட்டும்
தேடுகின்றது .. தேடல்களில்
ஒரு புது சுகம் தான்..
கண்களை மூடினாலும்
கனவிலும் உன் முகம் தான்..
உறக்கமறந்து
நிமிடங்களிலும் ஓயாது உன்
முகம் தான்... எத்தனை
எத்தனை எண்ணங்கள்
அத்தனையும் உன்
எண்ணங்கள்...
பாடல் கேட்கும் போதெல்லாம்
பரிதவிக்கின்றது மனது..
உன்னை பார்க்க வேண்டும்
என்று நினைக்கும் போது
எல்லாம் என் உறக்கம்
மறந்து போகின்றது..
ஒரு நிமிடமாவது உன்னை
சுவாசிக்க நினைக்கின்றேன்..
என் இதயத்தின் துடிப்பில்
உன் நினைவுகள் கலக்க...
என் தேடல்கள் புதிதுதான்
என் தேவையும் பெரிது
தான்... உயிர் இருந்த
போதும் உன் அன்பில்
மட்டும் நான் பழையவள்
ஆனேன்.. என்றோ
இந்தப் பழமையும் புதுமை
தோற்றுத்துடன் போன்..
முன்னே தொலைந்த காதலி
தேடி கானகம் சென்ற
ராமனும் தொலைந்த கனவை
தேடி உறக்கத்தில் அமர்ந்த
கும்பகர்ணனும்.
தூக்கம் வரவில்லை
ஒருகணம் என்
ஏகத்தை மறந்து.. உன்
நினைவுகளுடன் நீ என்னை



தேடுவாய்
என்ற
எண்ணத்துடன்..
அழகிய..
அமுத
வரிகளுடன்
என்
ஆற்றாமை..
படுகையில் கிடக்கின்றது ...

**கவிஞர் முனைவர்**
**நா.மோகன செல்வி**
**மனோகரன்**
கோபிசெட்டிபாளையம்



## அமைதிப் புறா பறக்கட்டும்!

அமைதிப் புறாவை
அழகாக வீசிக்கமழும்
சமாதானம் காண்போம்...
அமைந்திட்ட போரில்
அழியும் பொலிவாய்
உயிர்களைச்சீருடன்
காப்பதே சீர்!

மூன்றாம் உலகப்போர்
மூண்டிடுமோ என்றபயம்
ஆன்ற வகையில்
அழகாகத்.. தோன்றிடும்!
வேண்டாமே போர்தானே
வெற்றியும் தோல்வியும்
யாண்டுமே காண்டல் இனிது!

## சோர்விலாள் பெண்!

(நிலைமண்டில ஆசிரியப்பா)

பெண்ணின் அருமையைப்
புகலவும் கூடுமோ
கண்ணின் அருமையைக்
காணவும் கூடுமோ!

பெண்ணே பெரியவள்
பேசும் தெய்வமே
விண்ணின் புகழே
வீறுடைச் சக்தி!

மண்ணின் மாண்பு
மகத்துவப் பக்தி
ஒண்மைச் சிறப்பு
ஒற்றுமைச் சின்னம்!

உலகின் பிரம்மா
உன்னத வரமே
கலைகளின் நாயகி
கருத்தின் காதலி!

இல்லத் தரசி இனிமை
பொங்கும் நல்லத் துணைவி
நானிலம் போற்றும்

வண்ணத் தலைவி
வளமார் கலையின் எண்ணத்
தரசி ஏற்ற பாவையே!


அம்மா அக்கா
அழகுத் தங்கை
இம்மண் போற்றும்
எழிலுறு பாட்டி

எல்லா உறவும்



ஏற்றம் பெறவே
சொல்லும் பெண்ணே
சோர்விலாக் கண்ணே!

**முனைவர்**
**இராம.வேதநாயகம்**
திருவண்ணாமலை.



## ஹைக்கூ !

கவலை இல்லை
பாராட்டைப் பற்றி குயில் !

வருத்தமில்லை
கருமை பற்றி காகம் !

கர்வம் இல்லை
வெண்மை பற்றி புறா !

விடிந்து வெகுநேரமாகி
கூவியது
சோம்பேறி சேவல் !

வானில் வட்டமிடும்
பருந்து பயத்தில் குஞ்சுகள் !

வெட்ட வெட்ட
உயர்ந்தது தென்னை !

அறிந்ததில்லை இளநீரின்
சுவை தென்னை !

இரண்டையும் காணலாம்
என்றாவது ஒருநாள்
சூரியன் சந்திரன் !

மீண்டும் துளிர்த்தது
பட்டமரம் மழை !

வகைகள் எத்தனை
வரையறுக்க முடியாது
மலர்கள் !

ரொட்டி யார் போட்டாலும்
வாலாட்டும் நாய் !

குறைக்கும் நாய்
கடிக்காது பொய்
கடிக்கும் !

திரைகடல் ஓடி
திரவியம் தேடினால்
சுடுகிறான் சிங்களன் !

வேற்றுமையில் ஒற்றுமை
இந்தியா மட்டுமல்ல
இணைகளும்தான் !

உள்ளே அனுமதி இல்லை
மதிப்பு உண்டு காலணி !

வேண்டாம் சூடம்
சுற்றுச்சூழல் மாசு !

பெயருக்கு இல்லாமல்
காரணப் பெயராகட்டும்
அறங்காவலர் !

அறம் செய்ய விரும்பினால்
போதாது செய்க அறம் !

சொல் செயல் சிந்தனை
அறம் இருந்தால்
சிறக்கும் வாழ்க்கை !

குப்பை கூட நிலத்திற்கு
உரமாகும் மனிதன் ?

மக்காத மக்கும் குப்பை
வேறுபாடு தெரியாத
மக்காக மக்கள் !

நோயின்றி நலமாக வாழ
நடைப்பயிற்சி !

உலகில் யாருமில்லை
எல்லாம் பொருந்திய இணை !

சாதியில் இல்லை
எண்ணத்தில் உள்ளது
உயர்வு தாழ்வு !

விட்டுக்கொடுங்கள்
ஒழியும் வன்முறை
நிலவும் அமைதி !

உடைத்தே போடுகின்றனர்
நடுத்தர மக்கள் முந்திரி !

கடைசித் திருமணம்
உணர்த்தியது
கடலைமிட்டாய் !

உடைந்து இருந்தால் கோபம்
உடைத்து உண்ணும்
அப்பளம் !




பெண்ணிற்கு மட்டும்
கற்பிக்கப்பட்ட கற்பனை
கற்பு!

**கவிஞர் இரா .இரவி !**

## வாழ்க்கை...

மனிதப் பிறப்பே ஒரு நீண்ட பாதை, உழைப்பே அதன் ஒளி
புன்னகையும் விழிகளில் வரும் நீருமே நமக்கு கொடுத்த கடவுள்
வரம் எத்தனை தடைகள் வந்தாலும் மீட்டெடுத்து
கரடு முரடான வாழ்க்கை பாதையில் நடப்பதே வெற்றி ...
வாழ்க்கையில் முன்னேற முன்னேற நம்பிக்கை தானே பிறக்கும்..
சிறிய கனவுகள் பெரிய நினைவாகி வெற்றியைத்தரும் எத்தனை



சோதனை வந்தாலும் அத்தனையும் மீறி சாதனை
புரியலாம்.. நேற்று நடந்ததை மறந்து
இன்று நடப்பதை நினைத்து நாளை வருவது
நல்லது என்று எண்ணி எதிர்காலத்தை
நோக்குவதே சிறந்த வாழ்க்கை பாதை...
புன்னகையுடன் ஒவ்வொரு புதிய நாளையும்
வரவேற்று வெற்றிவாகை சூடுவோம்

**உஷா முத்துராமன்**






## அட திருடி....

உன்னை ஒருமுகப்படுத்தி
எல்லாவற்றையும்
ஒன்றுக்கு இரண்டு முறை
நினைவிலாடவிட்டு
இப்போது சொல்
நீ சொன்னது
உண்மைதானா...?

எப்படிப்பார்த்தாலும்
அதற்கு வாய்ப்பில்லை
என் நிழலாகிப்போன நீ
எப்படி கூறியிருப்பாய்
அப்படி ஒரு வார்த்தையை
சொல் அது
உண்மைதானா...?

கவிதை எழுதினாலும் நீ
புத்தகங்கள் படித்தாலும் நீ
அன்று கணக்கு
வாத்தியிடம் அடி
வாங்கி அழுத போதும்
என் தோள்களை
தொட்டு கண்ணீர்
துடைத்ததும் நீ...

நீ அப்படி சொன்னதை
இன்னமும் நம்ப
முடியவில்லை
என்னதான் இருந்தாலும்
நீ அப்படி சொல்லி
இருக்க கூடாது அட
சொல்லிவிட்டாய்
ஆனாலும் நம்ப
முடியவில்லை...

எல்லாவற்றையும் மறந்த
என் உறக்கத்தில் கூட நீ
பழமைகளை சுட்டிக்காட்டி
சொல்லிக் கொண்டே
இருக்கிறாய் என் தூக்கம்
தொலைத்த இரவுகளை
திருடிக் கொண்டவள் நீ...

கல்யாணம் காட்சிகளென
குழந்தை குட்டிகளென
ஆகித்தொலைத்த பிறகும்
இன்னமும் நம்ப
முடியவில்லை நீ
அன்று சொன்னதால்
வந்தவைகள்
இத்தனையையும்...



**முத்தையா மோகன்**
கோவை

---

நகரும் மேகங்களென்று
தெரியாமல் மழை வரும்
கப்பல் விடுவோம்
குடத்தை ஓட்டினோரம்
எடுத்த வைப்போம்
குடை வாங்குவோம்



என்றெல்லாம்
திட்டமிட்டுயிருக்
கிறேனே
என்ன செய்ய.

**துங்கன்**
கோயம்புத்தூர்

---



இப்படி பார்க்க உன்னால்
எப்படி முடிகிறது
சத்தியமாக சொல்கிறேன்
உன்னை ஒரு நொடி
பார்த்தால் கூட
காதலிக்காமல் இருக்க
முடியுமா என்ன?!

தரையில் விழுந்தால் கூட
எளிதில் எழுந்து விடலாம்
உன் விழி திரையில்
விழுந்தால் எழுவது
சாத்தியமா என்ன?!

உன் முத்தங்கள் வாங்கும்
என் கவிதை தான்
என்னுடைய ஆகச்சிறந்த
எழுத்து !

வெற்றிடமாய் இருந்த
மனதில் ஆற்று நீராய்
உனது நினைவுகள்!

பூமி தொடும்
மலர்கள் எல்லாம்
உனக்காகவே உதிர்கின்றன
என்பதை எப்போது
உணரப்போகியாய்?!

இன்னமும் ஆறாமல்
இதயத்தில் இனித்து
கொண்டிருக்கிறது
இனியவள் கொடுத்த
ஆறு எச்சில் முத்தங்கள்!

இதுவரை என் வாழ்வில்
எத்தனையோ தடவை
எதை,எதையோ தவற
விட்டிருக்கிறேன்
இப்போது வைராக்கியம்
கொள்கிறேன் உன்னை
மட்டும் மிஸ் செய்யாமல்
மிஸ்ஸஸ் ஆக்க
வேண்டுமென்று!

உன் சிரிப்பே
எனை காக்கும் மருந்து!



**லி.நௌஷாத் கான்**

---



## தெருவிளக்கு.!

மண்விளக்கு மனஇருளை
நீக்கும்! விண்விளக்கு
வீதியில் பால்வார்க்கும்!
கண்விளக்கு மழையாகப்
பொழியும்..! என்பெயரோ..
இவ்வுலகில் தெருவிளக்காம்.!

மழையினிலே
இருளினிலே ஒளிதரவே
தழைத்துவரும் நிலமெங்கும்
வழிதரவே இழைந்தோடும்
இறையன்பே என்பிறப்பு!
அழைக்கின்றார்..
என்பெயரோ தெருவிளக்கு!

பொதுவுடமை என்பிறப்பின்
அர்த்தமாகும்.! எளியதொரு
ஈசல்என்னை வட்டமிடும்!
எதுவரினும் எனதுபணி
வெளிச்சமாகும்..புதுஉலகே..
அழைக்கின்றேன்
தெருவினக்கு.!

ஒண்டஒரு குடிசையில்லா
ஏழையர்க்கு.. ஒதுக்கப்பட்டு
தெருவோரம் கிடப்பவர்க்கு..
அது இது என்றே
எவ்வுயிர்களுக்கு..
ஆண்டவனேஏற்றிவைத்தான்
தெருவிளக்கு!

பொதுவழியை
காட்டவந்தேன் இங்கே..
பொதுமகளீர்
நிலைகாண செய்தேன்
பொதுத்தொண்டின்
புகழ் விளக்காவேன்!
புதுயுகமே என்பெயர்தான்
தெருவிளக்கு!

கவிஞர்கள் அறிஞர்கள்
கலைவளத்தார்..!
காவியத்தில் கவிதைகளால்
பாடிவைத்தார்!
புவியெங்கும்
ஒளிபெறவே
அறம்வளர்த்தார்..!
புவியதனின்
பாதைகளில்
தவமிருக்கும்
தெருவிளக்கு!



**வே.கல்யாண்குமார்.**

---

## நோய்

உயிர் வாழ உடல் தந்து
உடல் வளர உணவு
தந்து உணவே மருந்தாக
உபாயமும் தந்து உலகில்
நலமாக வாழ வரம் தந்தால்
திருந்தாத மனிதன்
பொருந்தாத உணவை
விருந்தாக உண்டு உருவான
நோயில் இரும்பான யாக்கை
துரும்பாகிப் போமே

உண்பதற்காக வாழாதே
வாழ்வதற்காக உண்
உண்ட உணவு உள்ளழிந்து
போகுமுன் கண்ட
உணவையும்
விண்டு
விழுங்கினால்
காலன்
கடவுச்சீட்டு
வாங்கி
காலத்தே
வந்திடுவான்.



**மீனாட்சி பாண்டியன்**
திருவண்ணாமலை

---



தந்தாய் உயருயிர்
கருவில் உணவீந்தாய்
உள்ளத்தில் முதலுறவீந்தாய்
பெற்றெடுத்தபின் தயவீந்தாய்
அன்பீந்தாய் எனக்கென
ஆதரவுடன் துணையீந்தாய்
அளவிலா பொருளீந்தாய்
அழகிய நாட்களீந்தாய் அதில்
அனுபவங்கள் பல ஈந்தாய்
சிறப்பீந்தாய் சீரும் சிந்தைக்க
சில
படிப்பினை
யீந்தாய்
அன்னையே
அறமே
மூச்சுமுதல்
முகமுகமாய்
அனைத்தையு
மீந்தது நீ தானே தாயே



**ஜவஹர் பிரேம்குமார்**
பெரியகுளம்

---



சுயநினைவோடுதான்
இருந்தேன் உன் மயக்கும்
குரலிசை கேட்கும் வரை...

நான் கலைகளின்
ரசிகனாகத்தான்
இருந்தேன் உன் மேனியின்
அழகோவியத்தைக் காணும்
வரை...

உன்னைச் சந்திக்கும்
வரை....

நான் நலமாகத்தான்
இருந்தேன் உன்னைச்
சந்திக்கும்வரை...

நான்
நான் நானாகத்தான்
இருந்தேன் என்
அன்புக்கு நீ
அடிபணியும் வரை...



**எஸ் சந்திரசேகரன்**
**அமுதா**
செஞ்சி கோட்டை

---

## எல்லோரும் ஓட்டு போடுவோம்.!

எல்லோரும் ஓட்டுப்
போடுவோம்! இன்று
எல்லோரும் ஓட்டுப்
போடுவோம்! நல்லேர்கள்
வாழ்வு வேண்டி.. நம்நாடு
வளர வேண்டி..(எல்லோரும்...)

செல்லாத ஓட்டுப் போல
கிடப்பதில் லாபமில்லே!
வெள்ளனவே எழுந்து நின்று
வரிசையில் நில்லு புள்ளே.!
நல்லோரைத் தேர்ந்தெடுப்பாய்
நமக்கிது கடமை புள்ளே!
நம்வாழ்வு நமது கையில்
ஓட்டினைப் போடு புள்ளே!
(எல்லோரும் ஓட்டு..)

தேசத்தை மனதில் வைத்து
வாக்குகள் போட்டு
வைப்போம்! காசுக்கு
மயங்காமலே கடமையை
ஆற்றுகின்றோம்!
ஆசைக்கு அடிபணியோம்!
அன்புக்கு நமைதருவோம்!
அனைவரும் முதலில் வந்து
வாக்கினை செலுத்த
வந்தோம்! (எல்லோரும்
ஓட்டு..)

கருப்பில்லே வெளுப்புமில்லே
காசுக்கு ஓட்டு இல்லே!
கண்ணியம் தவறாதவர்க்கு
போடுவோம் ஓட்டு புள்ளே!
சிறப்புடன் வாழ்வதற்கு
சிந்தித்துப் போடு புள்ளே!
பொறுப்புள்ள குடிமகனாய்..
போடுவோம் ஓட்டு புள்ளே!
(எல்லோரும் ஓட்டு..)

இருப்பவன் தேர்தல் நின்றான்!
இல்லாதவன் தெருவில்
நின்றான்! இனம் மதம் சாதி
சொல்லி குழப்பிட முயற்சி
செய்வான்! நெருப்பென
நீயிருந்து.. நேர்மைக்கு ஓட்டுப்
போடு.! நெஞ்சிலே துணிவு
கொண்டு தவறாது வந்து
போடு! (எல்லோரும் ஓட்டு..)

**வே.கல்யாண்குமார்.**

---



## பெண்ணே சிறகை விரி

விடியலின் வெய்யோனாய்
வளர்ச்சியின் வனப்பாய்

எண்ணத்தின் எழுதுகோலாய்
திறனின் திறவுகோலாய்

கணினியறிவே
ஊன்றுகோலாய்
ஆறறிவே அளவுகோலாய்

கலையறிவில் காந்தமாய்
பகுத்தறிவில் படிமமாய்

நைந்திடா நம்பிக்கையாய்
வளைந்திட வைராக்கியமாய்

முடிவில்லா முயற்சியாய்
பழுதில்லா பயிற்சியாய்

அவனியின் ஆளுமையாய்
தார்மீக
தாரகையாய்

சினத்தை
சிதைத்து
சிறகை விரி
பெண்ணே...



**பழனிசெம்மொழி**
ஆசிரியர் , அரூர்

---

முன்னாள் காதலி
என் மீது உனக்கு
அன்பில்லையா ?
பாசம் இல்லையா ?
நேசம் இல்லையா என
அடுக்கடுக்கான
கேள்விகளை புது மனைவி
முன் வைக்கிறாள்
எப்படி சொல்வேன் ?
அவளை போல்
இன்னொருத்தியை
அப்படியெல்லாம்
காதல் செய்ய
தெரியவில்லையென்று !

**லி.நௌஷாத் கான்**

---



## தமிழ் அரசி

ஊரெல்லாம் மமிதா
பைஜுவைப் பற்றிப்
பேசுகிறார்கள்!
நல்ல வேளை நீ
திரையில் நடிக்காததால்
(தான்) நான் நினைத்த
போதெல்லாம் உன்னை
மு த் த மி ட முடிகிறது!
நான் மட்டும்
உன்னைப் பற்றிய
காதல் கவிதைகளை
வெளியிட்டால் அந்தப்
புத்தகத்திற்குத்
*தமிழ் அரசி என்றே
தலைப்பிடுவேன்!
பாருக்குள்ளே போதையைத்
தேடுகிறார்கள்
எண்ணற்றோர்!
ஆனால் எனக்கோ உன்
பார்வையாலேயே போதை
நிரம்பி வழிகிறது!
மதுப் பழக்கம் மட்டுமல்ல
மாதுப் பழக்க(மு)ம் கூட
எத்தனை எத்தனை
ஆபத்தானதென்று நீ
கீழே தள்ளும் போதெல்லாம்
உணர்ந்தாலும்(கூட)
நீயே என்னைத்
தூக்கி விடுவதால்
உன்னைக் காதலித்துத்
தொலைப்பது என்ற
சூழ்நிலைக்கு
ஆட்பட்டு
விட்டேன்!
செய்வன
திருந்தச் செய்
என்பதும் என்
கொள்கையில்
ஒன்று தான்!



**முத்து ஆனந்த்** வேலூர்

---



## மூத்தோர் சொல் கேள்!

முன்னேற்ற பாதையிலே நாமும் செல்ல
மூத்தோரின் வார்த்தைகளைக் கேட்டல் நன்றாம்
நன்மைகளை நமக்குத்தான் உரைக்கும் நல்லோர்
நலம்நாடும் நல்மனத்தார் மூத்தோர் தாமே
பின்னாளில் வருவதைத்தான் முன்னே சொல்வார்
பின்தங்க விட்டிடாமல் முன்னேர் ஆவார்
சொன்னாலே மூத்தோர்தாம் திசையின் காட்டி
சொல்லாலே ஈர்க்கின்ற சொல்லின் செல்வர்!

வாழ்ந்திட்ட வாழ்க்கையின் சாட்சி யாக
வரமாக நமக்கெல்லாம் நன்மை செய்வார்
தாழ்ந்திடவே விடாமல்நல் லூக்கம் தன்னை
தரமாக வழங்குவதில் அறிஞர் போன்றோர்
வீழ்ந்திடவா வாழ்க்கையென்று எழுச்சி கூட்டி
வீரத்தை உசுப்புகின்ற விந்தை உள்ளம்
ஆழ்ந்திட்ட சிந்தனைகள் உதிக்கும் மூளை
அறநெறிகள் கற்பிக்கும் ஆசான் அன்றோ!



சோகத்தால் சோம்பித்தான் இருக்கை யில்நாம்
சொற்களாலே ஆறுதலை சொல்லும் சொந்தம்
வேகத்தைக் கூட்டுகின்ற வேக மானி
வெளிச்சத்தைக் காட்டுகின்ற அறிவின் ஞானி
தாகத்தைத் தணிக்கின்ற தண்ணீர் மூத்தோர்
தலைமுறைகள் தழைத்திடவே விதைகள் மூத்தோர்
நோகடிக்கும் செயலைத்தான் நிறுத்தி விட்டு
நொடியாமல் நம்மைத்தான் தேற்றும் மாந்தர்

சிக்கலான சூழலைத்தான் தெளிவாய் தீர்க்க
சிறப்பான பண்புகளைப் பகரும் வல்லோர்
தக்கவழி ஆய்ந்துசொல்லும் மேன்மை கொண்டோர்
தலைமகுடம் நமக்களித்து மகிழ்ச்சி காண்போர்
இக்கால சூழலிலே அவரே மூலம்
இனிமையாக உணர்த்துவதில் மூத்தோர் பாலம்
முக்காலம் போற்றிடுவோம் மூத்தோர் சொல்லை
முற்போக்குச் சிந்தனைகள் வகுக்கும் எல்லை!

**கவிஞர் மு.வா.பாலாஜி, ஒசூர்**

---



## நீதியின் பாதையில்

அறம் பிறழாத நேர்மை
வழியில் திறம் கொண்டு
நடப்பதே நீதி!

அருளைக் காக்கும்
அரணாக காலம் கடந்து
நிலைத்து நிற்கும் !

வாழும் உயிர்களின்
உயிர் துடிப்பு !

ஓர் ஊரின் செய்தியை
உலகறியச் செய்யும்!

ஒளித்திரையில் விரியும்
விந்தையுலகு! கண் முன்னே
தோன்றும் கலைகளின்
சங்கமம்!

அறிவை வளர்க்கும்
அற்புத கருவி!

காலத்தின் மாற்றத்தை
வீட்டிற்குள் கொண்டு வந்து
கவலைகள் மறக்க செய்யும்
கலைத்தாய்!

பொய்கள் சூழ்ந்த
அடர்வனத்தில் மெய்யைத்
தேடும் நேர்மை பாதை!

வலியில் சிக்கும்
பெரியவருக்கு வழிகாட்டி
நிற்கும் அறத்தின் தீபம்!

தராசு கோலாய் சமநிலை
காத்து தரணி ஆளும்
தர்மத்தின் வேர்!

இருள் சூழ்ந்த உலகின்
நேர்மை ஒளி தர்மம்
காக்கும் உயரிய வழி!

சுயநலம் துறந்து சமநிலை
பேன வாழ்வின் நிமிர்வை
வரமாய் நல்கும்!

உண்மை பேசி அறம்
வளர்ப்போம்!
நீதியின்பாதையில் நித்தம்
நடப்போம்!

வளைந்த பாதைகள் பல
இருக்க நேர்க்கோடு
கிழிக்கும் நீதியின் வழி!

அச்சம் கலந்த ஆணிவேர்
அறமே அதன் முதல் சீர்!

தர்மம் காக்கும்
ஒருவனின் தடம்!

காலம் போற்றும்
காவிய பாடம்!

பதவிக்கு அஞ்சாத
பரிசுத்தம் தடம்!

பழிக்கு அஞ்சும் பண்புள்ள
இதயம்!

எளியவர் கண்ணீரைத்
துடைக்கும் கரம்!

அதுவே நீதியின் அழியாத
அறம்!

மறையும் கதிரவன் போல்
சிலநேரம் மறைந்தாலும் !

மறுபடி உதிக்கும் மறையாத
உண்மை!

நிழல் தரும் மரமும்
நிறைந்த நதியும் வேறுபாடு
பார்ப்பது இல்லை!
நீதி என்பது
எல்லோருக்கும்
சமமே!



**பெ.திருமுகம்**
ஆசிரியர்
மணமேல்குடி


FREE MARRIAGE
INFORMATION CENTER :
இலவச திருமண
தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வாங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


ADIYOGI
REAL ESTATE
WHOLESALE
VADACHENNAI CALL DRIVER
ஆதியோகி
ரியல் எஸ்டேட்
CMDA DTCP அப்ரூவல்
வீட்டுமனைகள் விற்பனை
_CONTACT_
8939228901


Vilambaram
We
provide
Targeted Leads
to grow your
buisness
Boost
your
business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Call :7871617005


SEVEN STARS
LOGISTICS PVT.LTD.
we simplify shipping for your business
Our Services are ...
Freight Forwarding, International Courier,
Customs Clearance, Cargo Movement by Air,
Sea and Road, Door to Door Service.
# 2, 2nd floor, Krishnan Koil Street, George Town,
Chennai - 600 001. INDIA.
+91 44 43570909 +91 96770 88843
info@sevenstarslogistics.com www.sevenstarslogistics.com


SADHANA DEVI.K
CAR WASH
SUPREME
Car Wash
& Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான
ஆன்மீக செய்திகள்,
பரிகாரங்கள்,
ஸ்தல வரலாறு மற்றும்
சுவாரஸ்யமான
தகவல்கள் மாதம்
இருமுறை படித்து
ஆன்மீகத்தை
அறியுங்கள்..


LOW COST
MATRIMONY
WEBSITE
CALL: 7789951009


MLMPERFECT.COM
Start Any MLM
Software @
Rs.499/Month
+ EMI Available
EMI
Trusted by
1000+
satisfied clients
Binary Plan
Matrix Plan
Level Plan
Generation Plan
Cryptocurrency MLM
9853719337/7436914247


WANTED
EXPERIENCED
SOCIAL MEDIA
CONTENT CREATORS
94386 10756


We Are Urgently Hiring!
Marketing Manager
Ad Sales (Print Media)
Company : PADMA DIGITAL BROADCAST PRIVATE LTD
Location : Chennai
Padma Digital a leading name in print media, is looking for a Marketing Manager – Ad Sales to join our dynamic team.
Key responsibilities for Marketing Manager
• Minimum 5 years of experience in print media ad sales
• Proven experience in space selling
• Strong background in field sales and client acquisition
• Excellent communication and negotiation skills
• If you're a results-driven professional with a passion for media sales, we want to hear from you
If you are interested
Do send your resume and portfolio to
padmamediapublications@gmail.com
Call: 9337501889
Package
Rs. 4.8 LPA
பாஸ்கர்
பேப்பர்பாய்
தெய்வம்
தமிழ்நாடு இபேப்பர்.காம்







# WANTED

Needed female staff
to look after
children, patients.

Contact

9150989424




# WANTED

Retd, VRS, Home Makers,
NRIs, Business Person

Contact

8248951872













தனியார் வாகன உதிரிபாகங்கள்
உற்பத்தி செய்யும் நிறுவனத்தில்
பணிபுரிய ஆட்கள் தேவை.

**Quality Line Inspector**
Fresher/Exp Male Only
Qualification - ITI/Diploma/B.E


**Final Quality Inspector**
Fresher / Exp - Male/Female
Qualification: 10th/ 12th/ ITI

**VMC Machine operator**
Fresher/ EXP Male only
Qualif: 10th/12th/ITI/Diploma

Mr Prakesh : 8939 940 090
Mr.Neelavanan : 9884 001 253
SALARY BASED ON EXPERIENCE






# WANTED

M/F லோடுமேன்,பிக்கர், ஹெல்பர்,
வர/மாத சம்பளம்: 450-700. உணவு
இடம் free day/N8 shift

**7540003588**


























Get Free Jobs Alert on Your
**WhatsApp**
Register Yourself on our
**8122664699**
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs















# பல்சுவை களஞ்சியம்




## போதுஅறிவு பூங்கா....

1: 1857ஆம் ஆண்டு சென்னைப் பல்கலைக்கழகம் கழகம் ஆரம்பிக்கப் பட்டது.

2:நாண யங்களைப் பற்றிய படிப்பு நூமிஸ் மாடிக்ஸ்என்பதாகும்.

3: மனித உடலிலுள்ள சின்னஞ் சிறு எலும்பு நடுச் செவி எலும்பு.


4: தேசிய கீதத்திற்கு இசைமைத்தவர் கேப்டன் ராம்சிங் தாக்கூர்.

5: 19.4.1975 அன்று ஆரியப்பட்டா செயற்கைக் கோளை இந்தியா விண்ணில் ஏவியது.

6: "லிவிங் ஹிஸ்டரி" என்னும் சுயசரிதை நூலை எழுதியவர் ஹிலாரி கிலிங்டன்.

# ...ஸ்ரீ ரமணவழி...

எல்லாத்தையும் ஒரு சக்தி நடத்தறது அதாலேயே எப்போதும் நடத்தப்படறது அதுக்குத் தெரியும் என்ன செய்யணும் எப்படிச் செய்யணும்னு அதை நம்புங்கோ ...
ஸ்ரீ ரமணவழி ...
ஸ்ரீ பகவான் ...



வாழ்கையின் முதல் படி துறவு
பகவான் ரமணமகரிஷி.
ஒரு சமயம் பகவான் ரமணர் முன்னிலையில் துறவு வாழ்க்கையின் முதல்படி எது என்று பலரும் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்தைச் சொல்லி, அதுதான் சரி என்று சொல்லிக் கொண்டிருந்தனர். அப்போது பகவான், அவர்களைப் பார்த்துப் பேசத் தொடங்கினார். நான் விருபாட்சா குகையில் தங்கி இருந்தபோது ஊருக்குள் சென்று பிட்சை எடுத்து வருவதே எங்களுக்கு உணவு! பெரும்பாலும் வெறும் அன்னம்தான் கிடைக்கும். அதுவும் எல்லோருக்கும் போதாது. எனவே நிறைய நீர் விட்டுக் கரைத்து, கஞ்சியாக ஆக்கி அனைவரும் பகிர்ந்து கொள்வோம்! அதில் சிறிது உப்புச் சேர்த்தால் சுவையாக இருக்குமே என்று தோன்றும். ஆனால், அதன் விருப்பத்தை ஒருபோதும் சட்டை செய்தது கிடையாது. ஏனென்றால் நாக்கு, கிடைத்ததைக் கொண்டு திருப்தி அடையாது. இன்றைக்கு உப்பு வேண்டும் என்று கேட்டுக் கிடைத்துவிட்டால், நாளைக்கு பருப்பு, காய்கறி என்று கேட்கவைக்கும். இப்படியாகத்தான் ஆசை ஆரம்பிக்கும். பிறகு மனதை ஆட்டிவைக்கும், நமது தேவைகளுக்கும் ஆசைகளுக்கும் ஒரு முடிவே இல்லாமல் போய் விடும். அதனை உணர்ந்து ஆசைகளுக்கு உடனுக்குடன் முடிவு கட்டிவிட வேண்டும். அலைவதும் நிலையற்றதுமான இம்மனது எதன் வசம் திரிகிறதோ அதனிடமிருந்து மனதை மீட்டு ஆன்மாவின் கட்டிற்குள் கொண்டு வரவேண்டும். மனம் அடக்குதல் தான், துறவு வாழ்க்கைக்கு முதற்படி! என்றார்.

# மீம்ஸ்







# வாக்கு மறதி..

கடுங் குளிர் நிறைந்த ஒரு இரவில் ஒரு மன்னன் தன் அரண்மனைக்கு வந்தான்.. அரண்மனைவாசலில் மெல்லிய ஆடையுடன் வயது முதிர்ந்த காவலாளியைப் பார்த்தான்.. குளிர் கடுமையாக இருக்கிறதே.. அதை நீ உணரவில்லையா..? என்று கேட்டான்..
ஆம்.. உணர்கிறேன் மன்னா.. ஆனால், குளிரை தடுக்கும் ஆடை என்னிடம் இல்லையே..! என்றான் காவலாளி..

அதற்கு மன்னன், கவலைப்படாதே, நான் அரண்மனை சென்று குளிரை தாங்கும் கம்பளி ஆடையை உனக்கு அனுப்புகிறேன்.. என்று கூறி அரண்மனைக்குள் சென்றான்..

மன்னரின் வார்த்தையை கேட்டு அந்த காவலாளி அகமகிழ்ந்தான்..

அரண்மனைக்கு சென்ற மன்னன் தான் வாக்களித்தை மறந்தே போனான்..

மனிதனின் எத்தனையோ பலவீனங்களில் பாழாய்ப்போன மறதியும் மிக மோசமான ஒன்று..



காலையில் பார்த்தால் அந்த காவலாளி இறந்து கிடந்தான்.. அவனருகே ஒரு கடிதம் இருந்தது.. அந்த கடிதத்தில் இவ்வாறு எழுதப் பட்டிருந்தது.. மன்னா..!! இவ்வளவு நாட்களாக கடும் குளிரை தாங்கி கொண்டிருந்தேன்.. ஆனால், குளிரை தாங்கும் ஆடை கிடைக்கும் என்ற என் எதிர்பார்ப்பு இதுவரை இருந்த என்னுடைய மன உறுதியை குலைத்து என்னை கொன்று கொண்டிருக்கிறது.. வாக்குறுதிய கொடுத்தால் அதனை எப்பாடுபட்டேனும் உறுதியாக காப்பாற்றிட வேண்டும்.. அது வெறும் வெற்று வார்த்தைகளில்லை..



காற்றில் கரையும் வார்த்தை என்றாலும் மற்றவருகளுக்கோ அது 'உயிராகக்கூட' இருக்கலாம்..

*ஆம்..! நீங்கள் கொடுக்கும் வாக்குறுதி, மற்றவரிடம் நீங்கள் எண்ணி பார்க்காத அளவு நம்பிக்கையை ஏற்படுத்தலாம்.. எனவே, அந்த வாக்குறுதிக்கு முன் சற்று யோசியுங்கள்..
வணக்கம்
வாழ்க வளமுடன்.



## விடுகதை

| | |
|---|---|
| பறவைகள் எங்கிருந்து வருகின்றன? | முட்டையிலிருந்து. |
| எல்லா பிரியாணிக்கும் டெஸ்ட் வச்சா எந்த பிரியாணி பெயில் ஆகும்? | முட்டை பிரியாணி. |
| அண்ணனுக்கும் தம்பிக்கும் என்ன வித்தியாசம்? | வயசு வித்தியாசம். |
| ஒருத்தர் கல்யாணம் பண்றது விவசாய கடன் கேட்டார் ஏன்? | ஏன்னா அது ஆயிரம் காலத்துப் பயிர்ல. |
| எறும்பு பெருசா யானை பெருசா? | அப்படியெல்லாம் சொல்ல முடியாது மேடம் பிறந்த தேதி வேணும். |
| டாக்டர் என்ன நாய் கடித்து விட்டது எந்த இடத்தில? | பெருமாள் கோவில் சந்துல. |



# ஜோக்ஸ்


No - 2 வீட்டில்நடந்தது.. எங்கள் பையன் சிறுவயதில் சாப்பிட்டு கொண்டு இருந்தான்.
அப்போது சாப்பாட்டு தட்டில் அவர்கள் அப்பா முடி எடுக்க யார் முடி என்று கேட்க எல்லாரும் ஒவ்வொருத்தரைச் சொல்ல அவன் முடிவெள்ளையாக இருப்பதைப் பார்த்து வயசான முடி என்று சொல்ல அவன் சொல்லிய விதம் அனைவருக்கும் சிரிப்பு. என் அத்தையும் (மாமியார்) சேர்ந்து சிரித்தார்கள்.

*********************

ஆசிரியர்: தைக்கும் சித்திரைக்கும் என்ன வித்தியாசம்?
மாணவன்: தை மாசம் நாம சூரியனுக்கு பொங்கல் வைப்போம்.. சித்திரை மாசம் சூரியன் நம்மள பொங்கல் வைக்கும்
ஆசிரியர்: ???
கணவன் மனைவி
கடி ஜோக்ஸ்: எப்படி மாட்டியிருக்கேன் பார்த்தியாப்பா?

*********************

ஒருத்தன் இந்தாடா.. பொங்கல் சாப்பிடுனு ஒரு பாக்ஸை கொடுத்தான்.
திறந்து பார்த்தா பாக்ஸ் காலியா இருந்துச்சு.. என்னடா பொங்கலை காணோம்னு கேட்டேன்..
அதுக்கு அவன் சொல்றான்.. இதுதான் டா காணும் பொங்கல்னு சொல்லிட்டு போறான்..



**************

கணவன்: பக்கத்து வீட்டுக்காரன் சரியான பைத்தியமா இருப்பான் போல!

மனைவி: ஏன் என்னாச்சு?

கணவன்: நான் ஹேப்பி பொங்கல்னு சொல்றேன்.. அவன் ஹேப்பி இட்லினுட்டு போறான்.

***********

பேனை தொடைச்சி பரண்ல இருந்த சாமானை எல்லாம் இறக்கி, ஏத்தி, சுண்ணாம்பு அடிச்சு.. வீட்டைக் கழுவி.. ஒரு வாய் பொங்கல் சாப்பிடுறதுக்கு இந்த வீட்ல என்னவெல்லாம் பண்ண வேண்டியிருக்கு?
நல்ல இடமா பார்த்து கட்டி வைக்கணும் - அந்த ஒரு வார்த்தையை நம்பி ஏமாந்த 90ஸ் கிட்!

# சமையல் அறை ஸ்பெஷல்





## ஓட்டல் சாப்பாடு ருசிப்பது ஏன்?



'அம்மா சாப்பாடு நல்லாதான் இருக்கு... ஆனா ஓட்டல் மாதிரி இல்ல!' – இந்தக் குரல் இன்று பல வீடுகளில் அடிக்கடி ஒலிக்கிறது. வீட்டை விட, ஓட்டலில் சாப்பிட அனேகம் பேருக்கு பிடிக்கிறது, ருசியாக இருப்பதாக தோன்றுகிறது. இது ஏன்?

இதற்கு காரணம், 'சுவை' என்பது நாக்கில் மட்டும் இல்லை.
அது மணம், தோற்றம், சூழல், மனநிலை, எதிர்பார்ப்பு ஆகிய அனைத்தின் கூட்டுத்தொகை.
வீட்டில் தினமும் அதே சமையலறை, அதே பாத்திரம், அதே நபர் சமைக்கும் உணவு நமக்கு 'பழக்கம்' ஆகிவிடுகிறது. பழக்கம் வந்த இடத்தில் புதுமை குறையும்; புதுமை குறைந்த இடத்தில் சுவை மங்குவது போல தோன்றும்.
ஆனால் உணவகங்களில்? புதுமை. புதிய இடம். வேறு கைகள். வேறு வாசனை. வேறு பரிமாறும் முறை.
இதுவே உணவின் சுவையை இரட்டிப்பாக்குகிறது.
பொதுவாக, உணவகங்களில் சமைக்கப்படும் உணவுகளில், வீட்டைவிட அதிக அளவில் உப்பு, எண்ணெய், வெண்ணெய், நெய், சர்க்கரை பயன்படுத்தப்படுகிறது.
காரணம் ஒன்றுதான், வாடிக்கையாளரின் நாக்கை வசப்படுத்த வேண்டும்.
வீட்டில் சமைப்பவர், 'உடம்புக்கு நல்லது' என்று நினைப்பார். ஓட்டலில் சமைப்பவர், 'மீண்டும் வர வைக்க வேண்டும்' என்று நினைப்பார்.
இந்த இரண்டு எண்ணங்களின் இடைவெளிதான், சுவையின் இடைவெளியாக நமக்கு தெரிகிறது.
வீட்டில் சாப்பிடும்போது, வேலைப்பளு, குடும்பப் பிரச்சனை, பணச்சுமை, நாளைய பொறுப்புகள் எல்லாமே நம்முடன் மேசைக்கு வந்து உட்காரும்.
உணவகத்திலோ, 'இன்று சாப்பிட வந்திருக்கோம்' என்ற மனநிலை.
சமைக்கவில்லை. பாத்திரம் கழுவ வேண்டாம். யாருக்கும் பரிமாற வேண்டாம். இந்த மனஅழுத்தமற்ற நிலை, உணவின் சுவையை கூடுதலாக்குகிறது.
வீட்டில் சமைக்கப்படும் உணவின் பின்னால் இருக்கும் உழைப்பு பெரும்பாலும் கவனிக்கப்படுவதில்லை.
தினமும் சமைக்கும் கைகளின் மதிப்பு, அன்றாடமாகி விட்டதால் சாதாரணமாகிவிடுகிறது.
ஆனால் ஓட்டலில் பணம் கொடுத்து வாங்கும் உணவு, 'விலை' காரணமாகவே நமக்கு உயர்ந்ததாக தோன்றுகிறது.
பணம் கொடுத்தால் சுவை கூடும் என்ற மனநிலை, அறியாமலே நம்முள் உருவாகிவிட்டது.
அழகான தட்டு, கவரும் உள்அலங்காரம், சூடான பரிமாற்றம், உணவுகளுக்கு கவர்ச்சியான பெயர்கள் இவை அனைத்தும் உணவின் சுவைக்கு முன் நம் மனதை தயார் செய்கின்றன.
வீட்டில்?
'சாப்பாடு ரெடி... வாங்க!' அவ்வளவுதான்.
அன்பு இருந்தாலும், அங்கு ஒரு 'நிகழ்வு' இல்லை. நிகழ்வு இல்லாத இடத்தில் சுவை நினைவாக மாறுவதில்லை.
இன்றைய தலைமுறை, வெளியே சாப்பிடுவதை ஒரு அனுபவமாக பார்க்கிறது.
செல்பி, சமூக ஊடகப் பதிவு, நண்பர்கள், சிரிப்பு இவை அனைத்தும் உணவுடன் சேர்ந்து ஒரு நினைவாக உருவாகின்றன. வீட்டுச் சாப்பாடு அந்தப் போட்டியில் பின்னடைகிறது.
உணவக சுவை நாக்குக்கு இனிமை.வீட்டுச் சாப்பாடு உடலுக்கு நன்மை.
வீட்டுச் சாப்பாடு சுவையில்லை என்று நாம் சொல்வது, உணவின் குறை அல்ல; நமது பார்வையின் குறை. அதை தினசரி என்று எடுத்துக்கொள்ளாமல், அன்பின் வெளிப்பாடாக பார்த்தால், அதில் இருக்கும் சுவையும் நமக்குத் தெரியும்.

## பயனுள்ள டிப்ஸ் உங்களுக்காக..

பழங்களை வெட்டியதும் அதன் மீது சிறிது எலுமிச்சை சாறு பிழிந்து விடவும்.
உணவை சமைத்து முடித்ததும் வெப்பமாக இருக்கும் இடத்தில் சேமித்துவைக்கக்கூடாது.

* காய்கறிகளை வெறுமனே வதக்காமல் கொஞ்சம் நீர், சிறிது சோம்பு தூள் சேர்த்து வதக்கவும். இதனால் காய்கறியின் நிறம் பிரகாசமாகவும், சுவையாகவும் இருக்கும்.

* மூன்று மடங்கு அரிசி, போதுமான அளவு தண்ணீர், சிறிது பால் சேர்த்து சாதம் வேக வைக்கவும். அப்படி செய்தால் சாதம் மென்மையாகவும், சுவையாகவும் இருக்கும்.

* குழம்பில் சுவையை அதிகரிக்க செய்ய இறுதியில் சிறிது நெய், மசாலா வதக்கி சேர்க்கவும். வழக்கத்தை விட வாசனை இரு மடங்கு அதிகரிக்கும்.

* பருப்பு வகைகளை வேக வைக்கும் முன்பு சிறிது இஞ்சி, உப்பு சேர்த்து ஊற வைக்கவும். அப்படி செய்தால் பருப்பு வேகவைக்கும் நேரம் குறையும். பருப்பு மென்மையாகவும் இருக்கும்.

* குழம்பு நிறம் பிரகாசமாக மாற தக்காளி சேர்க்கும் முன்பு நெல்லிக்காய் சாறு சேர்க்கலாம். குழம்பு நிறம் மாறுவதுடன் சுவை இனிமையாகும்.

* பழங்களை வெட்டியதும் அதன் மீது சிறிது எலுமிச்சை சாறு பிழிந்து விடவும். பழங்கள் பழுப்பு நிறத்துக்கு மாறாமல் இருக்கும்.

* உணவை சமைத்து முடித்ததும் வெப்பமாக இருக்கும் இடத்தில் சேமித்துவைக்கக்கூடாது. மிதமான வெப்பமான இடத்திலோ, சற்று குளிர்ந்த இடத்திலோ மூடி வைக்கவும். வாசனை, சுவை குறையாது.

* வறுத்த உணவு வகைகளில் எண்ணெய் குறைவாக இருக்க காய்கறிகளை தண்ணீரில் வதக்கி சேர்க்கவும். சுவை குறையாது, கொழுப்பு குறையும்.

* கொத்தமல்லி, கறிவேப்பிலையை இறுதியில் சேர்க்கும் போது எண்ணெய்யில் கொஞ்சம் வதக்கி சேர்க்க வாசனை அதிகமாக இருக்கும்.



## அடுப்பு தேவையில்லை, எரிபொருள் தேவையில்லை: மேஜிக் அரிசி பற்றித் தெரியுமா?



அரிசியை ஊறவைத்து சமைத்து சாப்பிடுவதுதான் வழக்கம். ஆனால் சமைக்காமல் சாப்பிடக்கூடிய அரிசி அசாமில் விளைவிக்கப்படுகிறது. அதன் பெயர் 'கோமல் சவுல்'. மந்திர அரிசி என அழைக்கப்படும் இதை தண்ணீரில் 15 முதல் 20 நிமிடங்கள் வரை ஊற வைத்தால் போதும். சாதம் பதத்துக்கு மாறி சாப்பிட தயாராகிவிடும்.

இந்த அரிசி வழக்கமான அரிசியை போல் இல்லாமல் தனித்துவமான ஸ்டார்ச் அமைப்பை கொண்டுள்ளது. அது ஊற வைக்கும்போது மென்மையாக மாற வழிவகை செய்கிறது. அப்படி மாறிய சாதத்துடன் வெல்லம், தயிர், பால் அல்லது வாழைப்பழம் சேர்த்து சாப்பிடுவார்கள்.

பண்டைய காலத்தில் வயல் வேலைக்கு செல்லும் விவசாயிகள், நீண்ட தூர பயணம் மேற்கொள்பவர்கள் இந்த அரிசியை உடன் எடுத்து சென்றார்கள். சமைக்க வேண்டிய அவசியமில்லாமல் தண்ணீரில் ஊற வைத்தால் போதும். உடனே சாப்பிட்டு விடலாம் என்பதால் இந்த அரிசிக்கு அந்த காலத்தில் மிகுந்த வரவேற்பு இருந்தது. எடுத்து செல்வதற்கும் எளிதானது, உணவு தயாரிக்க சுலபமானது மட்டுமின்றி பசி உணர்வை போக்கி நிறைவாக சாப்பிட்ட உணர்வையும் தரக்கூடியது. திருவிழாக்கள் மற்றும் குடும்பத்தினர் ஒன்றாக பங்கேற்கும் நிகழ்வுகளில் இந்த அரிசி பயன்படுத்தப்பட்டது.

இந்த அரிசியின் ஊட்டச்சத்து மதிப்புக்கும் குறைவில்லை. இதிலிருக்கும் கார்போஹைட்ரேட் உடலுக்கு விரைவான ஆற்றலை அளிக்கக்கூடியது. அதேவேளையில் மெதுவாக வெளியிடும் ஸ்டார்ச்சை கொண்டிருப்பதால் சோம்பலாக உணர வைக்காமல் உற்சாக நிலையை தக்கவைக்கும். இதில் நார்ச்சத்து அதிகமாக உள்ளதால் செரிமானத்தை ஊக்குவிக்கும். ரத்த சர்க்கரை அளவைக் கட்டுப்படுத்த உதவிடும். பிரீரேடிக்கல்களால் ஏற்படும் சேதத்தில் இருந்து உடலைப் பாதுகாக்கும். உடலுக்கு தேவையான இரும்பு சத்தையும் அளிக்கும். உணவில் இருந்து அத்தியாவசிய தாதுப்பொருளை போதுமான அளவு பெற முயற்சிப்பவர்களுக்கு இந்த அரிசி சிறந்த தேர்வாக அமையும். பால் அல்லது தயிர் சேர்த்து சாப்பிடுவதன் மூலம் புரதம், கால்சியம் கொண்ட சமச்சீர் உணவாக மாறும். வெல்லம், வாழைப்பழம் சேர்ப்பதன் மூலம் இரும்புச்சத்து, நார்ச்சத்து உடலுக்கு கிடைக்கும்.

அசாமின் பாரம்பரிய அரிசியாக இருந்த கோமல் சவுலை விவசாயிகள் வருடத்திற்கு ஒருமுறை பயிரிட்டு வந்தனர். காலப்போக்கில் இந்த அரிசியின் பயன்பாடு குறைந்து போனது. தற்போது மீண்டும் இந்த அரிசி ரகத்துக்கு மவுசு கூடியுள்ளது. அசாம் மாநிலத்தை கடந்து மற்ற பகுதியில் வசிப்பவர்கள் மத்தியிலும் இந்த அரிசிக்கு வரவேற்பு கிடைத்துள்ளது. ஆன்லைன் தளங்களிலும் இந்த மந்திர அரிசி விற்பனை செய்யப்படுகிறது.

## இரவில் சாப்பிடக்கூடாத உணவுகள்...



இரவு நேரத்தில் மிக எளிதில் ஜீரணிக்கும் உணவைச் சாப்பிட்டால்தான் நமது ஜீரண உறுப்புக்கள் ஆரோக்கியமாகச் செயல்பட்டு அஜீரணக்கோளாறு, அசிடிட்டி, மலச்சிக்கல் உள்ளிட்ட பிரச்சனைகளில் இருந்து நம்மைக் காக்கும்.

பகல் நேரத்தில் நாம் எப்படிச் சாப்பிட்டாலும் நாம் செய்யும் வேலைக்கு அவை ஜீரணித்துவிடும். ஆனால், இரவு நேரத்தில் நாம் சாப்பிடும் உணவுகள் ஜீரணிக்க நீண்ட நேரம் எடுக்கும்.

இரவில் சாப்பிடக்கூடாத சில உணவுகள் இருக்கின்றன. கீரை, நெல்லிக்காய், கட்டித்தயிர், கஞ்சி, பாகற்காய், இஞ்சி ஆகியவற்றை இரவில் தவிர்த்து விடுவது நல்லது. அதையும் மீறி சாப்பிட்டால், அந்த வீட்டில் மகாலட்சுமி தாயார் வாசம் செய்ய மாட்டார், செல்வம் தங்காது என்பது ஐதீகம். இரவில் பால் சோறு சாப்பிடலாம். இதனால் செல்வம் பெருகும்.

தக்காளியில் அசிடிட்டியை ஏற்படுத்தக்கூடிய அமிலங்கள் அதிகமாக இருப்பதால், இவற்றை இரவில் தவிர்ப்பது நல்லது. நடு ராத்திரியில் ஐஸ்கிரீம் உட்கொள்வது மன அழுத்த ஹார்மோன்களை அதிகரிக்கும். இதனால், இரவில் தூங்குவதற்கு சிரமம் ஏற்படும்.

கிரீன் டீயில் காபி மற்றும் டீயை விட அதிக அமிலம் உள்ளது. இதை, இரவில் குடிக்கும் போது அதிக இதயத் துடிப்பு, பதட்டம் மற்றும் கவலை ஆகியவை ஏற்படலாம். எனவே, கிரீன் டீயை பகல் நேரத்தில் குடிப்பது நல்லது. ஆரஞ்சு மற்றும் திராட்சைப்பழம் போன்ற சிட்ரஸ் நிறைந்த பழங்கள் நெஞ்செரிச்சலை அதிகரிக்கும். எனவே, இரவு நேரத்தில் சிட்ரஸ் நிறைந்த பழங்களை தவிர்ப்பது நல்லது.

வெங்காயத்தில் அதிக ஆரோக்கிய நன்மைகள் இருந்தாலும், அவற்றை இரவில் சாப்பிடுவது நல்லதல்ல. இரவு நேரத்தில் வெங்காயம் சேர்த்த சாலட் சாப்பிடுவதால் வயிற்றில் வாயு உருவாகும். இதனால், உங்கள் தொண்டை பகுதியில் ரிப்ளக்ஸ் அமிலம் சுரக்கப்படும்.

இரவில் நீங்கள் பருகும் ஒரு கப் காபி மற்றும் டீயின் விளைவு 8 முதல் 14 மணி நேரம் வரை நீடிக்கலாம். அதுமட்டும் அல்ல, இது உங்கள் தூக்கத்தை கட்டுப்படுத்தும். எனவே, இவற்றை காலையில் பருகுவது நல்லது. காரமான பொருட்களை சாப்பிடுவது நெஞ்சு எரிச்சலை ஏற்படுத்தும். அல்லது அஜீரண கோளாறுகளை ஏற்படுத்தும். இதனால், தூக்கம் பாதிக்கப்படும். அதேபோல, கொழுப்பு சத்துக்கள் நிறைந்த பீட்சா, பர்க்கர், எண்ணெயில் பொறிக்கப்பட்ட ஸ்னாக்ஸ்கள் ஆகியவற்றை சாப்பிடக்கூடாது. இந்த உணவுகள் அசவுகரியத்தை ஏற்படுத்துவதோடு, நெஞ்சு எரிச்சல், வயிற்று வலியை ஏற்படுத்தக்கூடும்.

இந்த பகுதியில் உங்கள் படைப்புக்கள் வரவேற்கிறோம்



whatsapp No
8122664699

## சங்கடஹர சதுர்த்தி சிறப்பு வழிபாடு



**முசிறி, மார்ச் 10:**
ஸ்ரீவாசவி கன்யகா பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் அமைந்திருக்கும் விநாயகப் பெருமானுக்கு சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு சிறப்பு அபிஷேகங்கள் பால், தயிர்,பன்னீர், இளநீர்,தேன், பஞ்சாமிர்தம் வாசனை திரவியங்களால் அபிஷேகங்கள் வண்ணமலர் மாலைகளால் அலங்காரங்கள், அருகம்புல் மாலைகளால் அலங்கரித்து, பிரசாதம், நெய்வேத்தியங்களுடன், பாட்டுக்கள் பாடி, வேத மந்திரங்கள் ஒலிக்க, மகா தீபாராதனையும் நடைபெற்றது. விநாயகப் பெருமானை வேண்டி அருள் பெற்றனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## காட்பாடி ஸ்ரீ வரசித்தி விநாயகர் கோவிலில் சங்கடஹர சதுர்த்தி விழா!



**வேலூர், மார்ச் 10:**
வேலூர் மாவட்டம் , காட்பாடி வள்ளிமலை கூட்டுரோடு அருகில் உள்ளஸ்ரீ வரசித்தி விநாயகர் கோயிலில் மார்ச் மாத சங்கடஹர சதுர்த்தி விழா நடந்தது.

இதையொட்டி ஸ்ரீவரசித்தி விநாயகருக்கு பல்வேறு வகையான திரவியங்கள் கொண்டு சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது. இதை தொடர்ந்து மலர் மாலை, வெட்டிவேர் மாலை, அருகம்புல் மாலை, பட்டுவஸ்திரம் அணிவித்து மகா தீபாரதனை காண்பிக்கப்பட்டது. அதையடுத்து சுவாமிக்கு தங்கக்கவசம் அணிவிக்கப்பட்டது. திரளான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு பக்தர்களுக்கு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது. பூஜைகளை பிரம்மபுரம் ஸ்ரீஜெயக்குமார் அர்ச்சகர் விமரிசையாக செய்திருந்தார்.

## கழிஞ்சூர் ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலயத்தில் சங்கட சதுர்த்தி விழா!



**வேலூர், மார்ச் 10:**
வேலூர் மாவட்டம், காட்பாடி வட்டம், கழிஞ்சூர் ஸ்ரீசெல்வ விநாயகர் ஆலயத்தில் சங்கடஹர சதுர்த்தி விழா சிறப்பாக நடைபெற்றது. சங்கட சதுர்த்தி விழாவை முன்னிட்டு மாலை 4 மணிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள், தீப தூப ஆராதனை நடந்தது. இதை யடுத்து மலர்களால் அலங்கரிக்கப்பட்ட ஸ்ரீசெல்வ விநாயகருக்கு சிறப்பு பூஜைகள் நடந்தது. இதைதொடர்ந்து பக்தர்கள் திரளாக கலந்து கொண்டுஸ்ரீ செல்வ விநாயகரை வழிபட்டனர். பூஜைக்கான ஏற்பாடுகளை ஸ்ரீமணிகண்டன் அர்ச்சகர் வெகு விமரிசையாக செய்திருந்தார். பூஜையில் கலந்து கொண்ட பக்தர்களுக்கு ஸ்ரீ சங்கடஹர சதுர்த்தியை முன்னிட்டு பிரசாதங்கள் விநியோகம் செய்யப்பட்டது.

## 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் வாக்குறுதி அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கும் நிகழ்ச்சி



**திருவண்ணா மலை, மார்ச் 10:**
திருவண்ணா மலை மாவட்டம் போளூர் போளூர் சட்டமன்ற உறுப்பினர் உயர்திரு. அக்ரி எஸ். எஸ். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் போளூர் வடக்குஒன்றியத்தை சேர்ந்த படவேடு ஊராட்சி கேசவபுரம், பங்களா ரோடு ஆகிய பகுதிகளில் வீடு வீடாக நேரடியாக சென்று 2026 -ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தல் வாக்குறுதி அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கினார். உடன் கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## மகளிர் உரிமை தொகையை யாராலும் நிறுத்த முடியாது



மகளிர் உரிமை தொகையை யாராலும் நிறுத்த முடியாது; அப்படி யாராவது நினைத்தால் அவர்கள் வீட்டு பெண்களே அவர்களுக்கு ஓட்டு போட மாட்டார்கள் எனவும், திமுக அரசின் திட்டப் பயனாளிகள் வாக்களித்தாலே போதும், நமக்கு முழு வெற்றி கிடைக்கும்; அதை உறுதி செய்வதுதான் உங்கள் பணி என திருச்சி திமுக மாநில மாநாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியுள்ளார்.



மத்திய அரசின் ஒரே நாடு, ஒரே தேர்தல் திட்டம், நாட்டின் கூட்டாட்சி தத்துவம், மக்களாட்சி நெறிமுறைகள், வாக்காளர்களின் தீர்ப்பு ஆகியவற்றை கடுமையாக சிதைக்கும் என்றுள்ள முதலமைச்சர், மசோதாவை மத்திய அரசு உடனடியாகத் திரும்பப் பெற வலியுறுத்தி உள்ளார்.



தமிழகத்தில் இன்றும் நாளையும் லேசான மழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.



பாமக கட்சி, சின்னத்திற்கு உரிமை கோரி வழக்கு தொடர ராமதாஸுக்கு உரிமை இல்லை என அன்புமணி தரப்பில் சென்னை உரிமையியல் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



எல்பிஜி பதுக்கலைத் தடுக்க, மத்திய அரசு முன்பதிவு காலத்தை 21-லிருந்து 25 நாட்களாக நீட்டித்துள்ளது. விலை அதிகரிக்கும் என்ற அச்சத்தில் மக்கள் முன்பதிவை விரைவாக செய்து வருகின்றனர்.

## சிவப்பு குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பத் தலைவிகளுக்கு ரூ.5,000 உதவித்தொகை



சிவப்பு குடும்ப அட்டை வைத்துள்ள குடும்பத் தலைவிகளுக்கு ரூ.5,000 உதவித்தொகை வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் சுமார் 63 ஆயிரம் பேருக்கு மொத்தம் ரூ.31.50 கோடி நிதி வழங்கப்பட உள்ளது.

## யானை தாக்கியதில் இருவர் உயிரிழப்பு



நீலகிரி மாவட்டம் கூடலூர் வட்டம் தேவர்சோலை அருகே உள்ள கரைக்குன்னு பகுதியில் நேற்று இரவு யானை தாக்கியதில் இருவர் உயிரிழந்ததாக முதற்கட்ட தகவல் வெளியாகியுள்ளது.

## பேராசிரியர் அன்பழகனின் 6ம் ஆண்டு நினைவேந்தல் அனுசரிப்பு!



**வேலூர், மார்ச் 10:**
வேலூர் தெற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் வேலூர் தெற்கு மாவட்ட திமுக சார்பில் மறைந்த முன்னாள் கழக பொதுச்செயலாளர் இனமான பேராசியர் அன்பழகனின் 6 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்துக்கு மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமது சகி மலர் மாலை அணிவித்தும், மலர் தூவியும் மரியாதை செலுத்தினர். இதில் திமுக நிர்வாகிகள், தோழர்கள் பலர் கலந்து கொண்டு பேராசிரியருக்கு மரியாதை செலுத்தினர்.

## தமிழ்நாட்டை பாஜகவால் ஆள முடியாது



திருச்சியில் நடைபெற்ற திமுகவின் மாநில மாநாட்டில் பேசிய முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், “தன் சுய நலனுக்காக அதிமுகவை அடமானம் வைத்துவிட்டார் எடப்பாடி பழனிசாமி. நானும், திமுகவும் இருக்கும் வரை தமிழ்நாட்டை பாஜகவால் ஆள முடியாது” எனத் தெரிவித்துள்ளார்.

## தவெக உத்தேசப்பட்டியல்



தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் தவெக தரப்பில் எந்தத் தொகுதிக்கு யார் வேட்பாளராக அறிவிக்க வாய்ப்புள்ளது எனும் உத்தேசப்பட்டியல் வெளியாகியுள்ளது.

## 3000 ஆண்டுகள் பழமையான இரும்புக்கால மற்றும் சங்ககாலத்தைச் சேர்ந்த குடியிருப்பு தடயங்கள்



திருப்பூர் மாவட்டம், ஊத்துக்குளி வட்டத்தில் அமைந்துள்ள குமரிக்கல்பாளையம், தமிழ்நாட்டின் முக்கியமான தொல்லியல் தளங்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. சுமார் 3000 ஆண்டுகள் பழமையான இரும்புக்கால மற்றும் சங்ககாலத்தைச் சேர்ந்த ஈமச்சின்னங்கள், குடியிருப்பு தடயங்கள் மற்றும் பழங்கால வாழ்வியல் சான்றுகள் இப்பகுதியில் கண்டறியப்பட்டுள்ளன.

## சிவகார்த்திகேயன் கோயிலில் சாமி தரிசனம்



திருநள்ளாறு சனி பெயர்ச்சியை முன்னிட்டு நடிகர் சிவகார்த்திகேயன் கோயிலில் சாமி தரிசனம் செய்தார். அவரை காண ரசிகர்கள் திரண்டதால் பரபரப்பு ஏற்பட்டதுடன், பலர் அவருடன் புகைப்படம் எடுக்க முயன்றனர்.

## செல்போன் கொண்டு செல்ல தடை



கோவை மருதமலை அருள்மிகு சுப்பிரமணியசாமி திருக்கோவிலில் (10.03.2026) முதல் கோவில் வளாகத்திற்குள் செல்போன் கொண்டு செல்ல தடை விதிக்கப்பட்டுள்ளதாக கோவில் நிர்வாகம் அறிவித்துள்ளது.

## இராமநாதபுரம் கடற்கரை பகுதிகளில் ப்ளூ ஃபிளாக்



திருமண வீட்டினரால் செய்யப்பட வேண்டும். கோவளம், மெரினா, நாகப்பட்டினம் மற்றும் இராமநாதபுரம் கடற்கரை பகுதிகளில் ப்ளூ ஃபிளாக் தரம் மேம்படுத்தப்படும்.




## பேராசிரியர் K. அன்பழகன் அவர்களின் ஆறாம் ஆண்டு நினைவு நாள்



**திருவண்ணா மலை, மார்ச் 10:**
திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையம் ஒன்றியத்தைச் சேர்ந்த மேல் நாச்சிபட்டு ஊராட்சியில் பேராசிரியர் K.அன்பழகன் அவர்களின் 6-ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப்படத்திற்கு கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு.தி. சரவணன் அவர்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் புதுப்பாளையம் ஒன்றிய கழகச் செயலாளர் சுந்தரபாண்டியன் அவர்கள், ஆறுமுகம் அவர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் கலந்து கொண்டார்கள். தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை

## தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை துறை ஆய்வாளர் மன்ற புதிய நிர்வாகிகள் தேர்வு!



**வேலூர், மார்ச் 10:**
தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை துறை ஆய்வாளர் மன்ற புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை துறை ஆய்வாளர் மன்றத்தின் பொதுக்குழு கூட்டம் 07.03.2026 அன்று ஏலகிரியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநிலத் தலைவர் மோகன சுந்தரமூர்த்தி தலைமை தாங்கினார். பொதுக்குழுவில் தேர்தல் நடத்தப்பட்டு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். பா.ஐயப்பன், மாநில தலைவர், இ.பிரகாஷ், மாநில பொதுச் செயலாளர், த.ஞானவேல், மாநிலத் துணைத் தலைவர், உள்ளாட்சி நிதி தணிக்கை, ப.பெருமாள், மாநிலத் துணைத் தலைவர், அரசுத் துறை தணிக்கை, பொருளாளர் தாமரைச்செல்வன், சதீஷ்குமார், உதவி செயலாளர் ஆகியோர் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டனர். கூட்டத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலர் மன்ற தலைவர் மாரிமுத்து, தமிழ்நாடு உள்ளாட்சி தணிக்கை ஊழியர் சங்க தலைவர் பாபு மற்றும் நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

# சுற்றுலா: தர்மஸ்தலாவில் பார்க்க வேண்டிய இடங்கள்



தர்மஸ்தலாவில் உள்ள மஞ்சுநாதா கோவில் சுமார் 800 ஆண்டுகள் பழமையான கோவிலாகும். மஞ்சுநாதா சிவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட கோவிலாகும். கர்நாடக மாநிலம் தெற்கு கன்னடாவில் தர்மஸ்தலா என்ற இடத்தில் அமைந்துள்ளது. மேலும் இந்த இடம் சுற்றுலாவுக்கு ஏற்ற இடம் ஆக உள்ளது. இந்த கோவிலில் மூலவர் மஞ்சுநாதர் மற்றும் எட்டாவது தீர்த்தங்கரர் சந்திர பிரபாவும், கோவிலின் காவல் தெய்வமாக குமாரசாமி மற்றும் கன்னியாகுமரி என்ற யட்சிணியும் உள்ளார்கள்.

தர்மஸ்தலா கோவில் நிர்வாகத்தை சமண சமய வீர மன்னா பெர்கடே குடும்பத்தினர் நிர்வகித்து வருகிறார்கள். கோவில் பூஜையை வைண அந்தணர்கள் செய்து வருகின்றனர். ஜைனமத குடும்பத்தார்கள் தற்போது நிர்வாகம் செய்துவருகிறார்கள். மேற்கு தொடர்ச்சி மலை அடிவாரத்தில் நேத்ராவதி நதிக்கரையில் அமைந்துள்ளது. பதினாறாம் நூற்றாண்டில் வைணவத் துறவியால் புதுப்பிக்கப்பட்டது.

இதன் ஒரு பகுதி இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள 'தலாய்லாமா மடம்' என சொல்லப்படுகிறது. இங்கு மஞ்சுநாதா என்ற சிவனும் மற்றும் 39 அடி உயரமுள்ள பாகுபலி சிலை, மஞ்சுஷா அருங்காட்சியகம், நேத்ராவதி நதி ராம் மந்திர், சந்தரநாத் சாமி கோவில் போன்றவை முக்கிய இடங்களாகும். மத நல்லிணக்கத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. நவம்பர், டிசம்பர் மாதத்தில் விளக்கு திருவிழா வெகு சிறப்பாக நடைபெறும். மங்களூரில் இருந்து 70 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இங்கு பார்க்க வேண்டிய இடங்களைப் பற்றி பார்க்கலாம்.

1. 1. அன்னபூர்ணா சத்திரம்

இந்த அன்னபூர்ணா சத்திரத்தில் தினசரி விதவிதமான உணவுகள் வழங்கப்படுகிறது. இது மிகவும் சுவையாகவும், வாய்க்கு ருசியாகவும் உள்ள உணவுகள் இங்கு தயார் செய்து வழங்கப்படுகிறது. இந்த இடத்தில் நீச்சல் குளம் ஸ்பா போன்ற வசதிகள் உள்ளன.

2. 2. மஞ்சுஷா அருங்காட்சியகம்

இங்கு பல வகையான கார்களை காணலாம். பதினெட்டாம் நூற்றாண்டைச் சார்ந்த பலவகையான கார்கள் அணிவகுத்து நிற்கின்றன. இங்கு இல்லாத கார்களே இல்லை எனலாம். தினசரி காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை பார்வையிட அனுமதிக்கப்பட்டுள்ளது.

3. 3. பாகுபலி மலை

இது தர்மஸ்தலாவுக்கு முன்பு உள்ளது. பாகுபலி மலை உச்சியில் ஏறுவது புதிய அனுபவமாக இருக்கும். பிரார்த்தனை தியானம் செய்வதற்கு ஏற்ற இடமாக உள்ளது. இங்கிருந்து பார்த்தால் இயற்கை காட்சிகளை காணலாம். கண்கொள்ளா காட்சியாக இருக்கும். இதன் அருகில் உள்ள ஏரியில் நீராடி மகிழலாம். உடலுக்கு புத்துணர்ச்சி தருகிறது.

4. 4. தேவி அன்னபூர்ணா கோவில்

தர்மஸ்தலாவுக்கு அருகில் உள்ளது. சிறந்த சுற்றுலா தலமாக விளங்குகிறது.

5. 5. கன்னியாடி ராம் மந்திர் கோவில்

இந்தப் பகுதி ராமருக்காக அர்ப்பணிக்கப்பட்ட கோவிலாகும். 927 ஆம் ஆண்டு ராஜராஜ சோழனால் கட்டப்பட்டது. இந்த கோவில் குளத்தால் சூழப்பட்டது. இங்கிருந்து மூணு கிலோ மீட்டர் தொலைவில் மஞ்சுநாதா கோவில் உள்ளது.

6. 6. சூரிய கோவில்

தர்மஸ்தலாவுக்கு மிக அருகில் உள்ளது. சூரிய தேவனுக்கு அர்ப்பணிக்கப்பட்ட கோவில் ஆகும். இந்தக் கோவில் வளாகம் மிகப் பெரிய அளவில் இருக்கும். இங்கு தேர் திருவிழா மிகச் சிறப்பாக நடைபெறுகிறது. ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் தேர்த்திருவிழா நடைபெற்று வருகிறது.

7. 7. நேத்ராவதி ஆறு

தர்மஸ்தலாவில் உள்ள மிகப்பெரிய ஆறு எனலாம். இந்த ஆற்றில் படகு சவாரி செய்வது புதிய அனுபவமாக இருக்கும். ஆற்றின் கரையில் ஏராளமான கோவில்கள் உள்ளன. இந்த இடத்தில் ஏராளமான இயற்கை காட்சிகளை கண்டு ரசிக்கலாம். இந்த இடத்தில் மீன் பிடித்தல் காண்பது மிகவும் சிறப்பாக இருக்கும்.

8. 8. சிருங்கேரி சாரதா பீடம்

சிக்மகளூர் மாவட்டத்தில் உள்ள ஒரு மலை நகரமாகும். சரஸ்வதி தேவி அவதாரமாக சாரதாம்பாள் கோவில் உள்ளது. 13ம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. வித்யாரன்னியம் சுவாமியால் கட்டப்பட்ட கோவிலாகும்.

9. 9. கருஞ்சேஸ்வரா மலை கோவில்

இதுவும் தர்மஸ்தலாவில் உள்ள ஒரு கோவில் ஆகும். சிறந்த சுற்றுலா ஸ்தலமாக கருதப்படுகிறது. இங்கு ஏராளமான சிற்பங்கள் ஓவியங்கள் காணப்படுகிறது. இங்குள்ள தோட்டம் கண்ணைக் கவரும் விதத்தில் உள்ளது சுற்றுலா பயணிகளுக்கு விருந்தளிக்கும் விதத்தில் இந்த இடம் அமைந்துள்ளது.

10. 10. உஜிரே நீர்வீழ்ச்சி

இதுவும் தர்மசாலாவில் அமைந்துள்ள ஒரு நீர்வீழ்ச்சி ஆகும். சுற்றுலா பயணிகளுக்கு ஏற்ற இடம் ஆகும். தர்மசாலாவில் இருந்து அரை மணி நேரத்தில் இந்த இடத்திற்கு செல்லலாம். இந்த இடத்தில் இரண்டு அழகியத் தேர்கள் மிகுந்த வேலைபாடுகளுடன் செய்யப்பட்ட நிலையில் உள்ளது. நீர்வீழ்ச்சியில் குளித்து மகிழ்வது சிறந்த அனுபவமாக இருக்கும்.

11. 11. சவுக்கா விநாயகர் கோவில்

இந்தக் கோவிலில் பெரிய அளவில் விநாயகர் சிலை உள்ளது. மகா கணபதி என அழைக்கப்படுகிறார். திறந்தவெளியில் விநாயகர் காட்சி தருகிறார் . இந்த இடம் புனித யாத்திரை ஸ்தலமாகும். பெலா தங்கடி தாலுகாவில் உள்ளது.

தர்மஸ்தலா சுற்றுலாவில் மேற்கண்ட அனைத்து இடங்களையும் சுற்றிப் பார்த்துவிட்டு வரலாம். சுற்றிலும் எங்கு பார்த்தாலும் இயற்கை காட்சிகளும் பறவைகளின் ரிங்காரமும் ஒலித்துக் கொண்டு இருக்கும். இங்கு சென்று வருவது ஒரு புதுமையான அனுபவமாக இருக்கும்.

## வேலைவாய்ப்பு கார்னர்

### திருச்சி என்ஐடியில் டெக்னிக்கல் பணி: உடனே விண்ணப்பிக்கவும்!




திருச்சி தேசிய தொழில்நுட்ப நிறுவனத்தில் (என்ஐடி) நிரப்பபப்பட உள்ள டெக்னிக்கல் உதவியாளர் மற்றும் இளநிலை பொறியாளர், நூலகம் மற்றும் தகவல் உதவியாளர் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இதற்கு தகுதியானவர்களிடம் இருந்து மார்ச் 25 ஆம் தேதிக்குள் ஆன்லைன் மூலம் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன..

தகுதி: பொறியியல் துறையில் சம்மந்தப்பட்ட பிரிவில் முதல் வகுப்பில் பிஇ., பி.டெக் அல்லது எம்சிஏ அல்லது டிப்ளமோ முடித்திருப்பவர்கள், கலை, அறிவியல், வணிகம், நூலக அறிவியல் பிரிவில் முதல் வகுப்பில் இளங்கலைப் பட்டம் பெற்றிருப்பவர்கள், சம்மந்தப்பட்ட பிரிவில் ஐடிஐ முடித்திருப்பவர்கள் சம்மந்தப்பட்ட பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க தகுதியானவர்கள்.

வயதுவரம்பு: 25.3.2026 தேதியின்படி டெக்னீசியன் பணிக்கு 27 வயதிற்குள்ளும், டெக்னிக்கல் உதவியாளர், இளநிலை பொறியாளர் பணிக்கு 30-க்குள்ளும், முதுநிலை டெக்னீசியன் பணிக்கு 33 வயதிற்குள்ளும் இருக்க வேண்டும். அரசு விதிகளின்படி வயதுவரம்பில் தளர்வு வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முறை: என்ற அதிகாரப்பூர்வ https://www.nitt.edu இணையதளத்தின் மூலம் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். பின்னர் அதனை பிரிண்ட் அவுட் எடுத்து அதனுடன் சுய சான்று செய்யப்பட்ட புகைப்படம், தேவையான நகல் சான்றிதழ்களை இணைத்து "The Registrar, National Institute of Technology Tiruchirappalli, Tiruchirappalli-620015, Tamil Nadu" என்ற அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப உறையின் மீது நீங்கள் விண்ணப்பிக்கும் பணியின் பெயரை தெளிவாக பெரிய எழுத்துக்களில் குறிப்பிடவும்.

ஆன்லைனில் விண்ணப்பிப்பதற்கான கடைசி நாள்: 25.3.2026

## 10-ஆம் வகுப்பு முடித்தவர்களுக்கு மாதம் ரூ.1,500 உதவித்தொகை: மம்தா பானர்ஜி அதிரடி அறிவிப்பு

**கொல்கத்தா, மார்ச் 10:**



*10-ஆம் வகுப்பு முடித்தவர்களுக்கு மாதம் ரூ.1,500 உதவித்தொகை வழங்கப்படும் என்று மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.*

மேற்கு வங்கத்தில் விரைவில் சட்டமன்றத் தேர்தல் நெருங்கும் சூழலில் மம்தா பானர்ஜி தலைமையிலான ஆளும் திரிணாமுல் காங்கிரஸ் கட்சிக்கும், பாஜகவுக்கும் இடையில் நேரடி போட்டி நிலவி வருகிறது.

இந்த நிலையில் மேற்கு வங்கத்தில் பத்தாம் வகுப்பு முடித்த இளைஞர்களுக்கு மாதம் ரூ.1,500 நிதியுதவி வழங்கும் யுவசக்தி திட்டத்தை மம்தா பானர்ஜி அறிவித்தார். 10-ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்று வேலையில்லாமல் இருக்கும் 21 வயது முதல் 40 வயது வரை உள்ள ஆண், பெண் இருபாலரும் மாதந்தோறும் 1,500 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும் என அவர் அறிவித்துள்ளார். நேற்று முதலே இது உடனடியாக அமலுக்கு வருவதாக மம்தா பானர்ஜி அறிவித்துள்ளார்.

தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியலில் இருந்து பெருமளவிலான பெயர்களை நீக்கியுள்ளதைக் கண்டித்து நடைபெற்ற போராட்டத்தின் போது மம்தா இந்த அறிவிப்பை வெளியிட்டார். இது வெறும் தேர்தல் காலத்து இலவச அறிவிப்பு என்று பாஜக விமர்சித்துள்ளது.

இந்நிகழ்ச்சியில் மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், நிலைக்குழுத் தலைவர் கோ. சாந்தகுமாரி, கண்காணிப்பு பொறியாளர் பாலமுரளி மற்றும் அலுவலர்கள், தூய்மைப் பணியாளர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையை விஜய் காப்பியடித்தாரா? சேலத்தில் எடப்பாடி பழனிசாமி பேட்டி

**சேலம், மார்ச் 10:**



சேலம் புறநகர் மற்றும் மாநகர் மாவட்ட மகளிர் அணி சார்பில் சேலத்தில் இன்று நடைபெற்ற மகளிர் தின சிறப்பு விழாவில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்துகொண்டு 40 கிலோவில் செய்யப்பட்டிருந்த கேக் வெட்டி கொண்டாடினார். சேலம் புறநகர் மாவட்டச் செயலாளர் இளங்கோவன், ஏற்காடு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சித்ரா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மனோன்மணி, அதிமுக மகளிரணிச் செயலாளர் லலிதா சரவணன் உள்ளிட்ட பலர் இந்த விழாவில் பங்கேற்றனர்.

இதையடுத்து செய்தியாளர்களுக்கு எடப்பாடி பழனிசாமி பேட்டியளித்தார்.

கேள்வி : விஜய் முழுக்கவே அதிமுகவின் தேர்தல் அறிக்கையை காப்பியடித்து சொல்லியிருப்பதுபோல் இருக்கிறதே?

எடப்பாடி : என்னிடம் இதை கேட்டால் எப்படி...? நீங்கள் இந்த கேள்வியை அவரிடம்தான் கேட்க வேண்டும்.

கேள்வி : இலவசம் அறிவிக்கமாட்டேன்னு சொல்லி, அவரே அறிவித்திருக்கிறாரே?

எடப்பாடி : ஒவ்வொரு கட்சியும் அந்த கட்சியின் நிலைப்பாட்டைக் கருதி தேர்தல் அறிக்கை வெளியிடுவார்கள். நான் மகளிர் உரிமைத் தொகை 2,000 ரூபாய் அறிவித்தபிறகு, திமுக தலைவர் ஸ்டாலினும் அறிவித்திருக்கிறார்.

கேள்வி : மகளிர் தினத்துக்கு அதிமுக சார்பாக அறிவிப்பு இல்லையா?


எடப்பாடி: நிறைய அறிவிப்புகள் கொடுத்திருக்கிறோம். பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் காலத்திலும் கொடுத்தோம். புரட்சித்தலைவி அம்மா காலத்திலும் கொடுத்தோம். இன்று எக்ஸ் தளத்தில், என்னவெல்லாம் செய்திருக்கிறோம் என்று போட்டிருக்கிறோம். இவற்றை எல்லாம் மக்களிடம் கொண்டுபோய் சேருங்கள்.

கேள்வி : மகளிருக்கு நீங்க 2,000 ரூபாய் கொடுப்பதாகச் சொன்னீர்கள். ஆனால் விஜய் 2,500 ரூபாய் என்று சொல்லி இருக்கிறாரே?

எடப்பாடி: அம்மா இருசக்கர வாகனம் திட்டத்தை அம்மா அறிவித்தார். திமுக ஆட்சியில் அது நிறுத்தப்பட்டது. மீண்டும் அதிமுக ஆட்சிக்கு வந்தவுடன் இருசக்கர வாகனம் வாங்கும் மகளிருக்கு 25,000 ரூபாய் மானியம் வழங்கப்படும். 5 லட்சம் பேருக்கு கொடுக்கப்படும். இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

## ரூ.3 கோடியில் புதியதாக கட்டப்பட்ட எம்.ஜி.ஆர். கோயில்

**வேலூர், மார்ச் 10:**



வேலூர் அருகே கரசமங்கலம் பகுதியில் உள்ள ரகுபதி நகரில் புதியதாக கட்டப்பட்ட எம்.ஜி.ஆர். கோயில் நிறுவனர் டி.ஆர் முரளி தலைமையில் உதயமானது. இந்த கோயிலின் மஹா கும்பாபிஷேகம் சி.கே. ரவி ஐயர், எஸ்.பாலாஜி ஐயர் ஆகியோரால் நடத்தப்பட்டது. இதில் பல்லாயிரக்கணக்கான எம்.ஜி.ஆர் பக்தர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வேலூர் மாவட்டம் காட்பாடி அடுத்த கரசமங்கலம் பகுதியில் அமைந்துள்ள ரகுபதி நகரில், முன்னால் சட்டமன்ற உறுப்பினர் ஜி.ரகுபதியின் மகனும் எம்.ஜி.ஆர் பக்தருமான டி.ஆர்.முரளி முயற்சியில் ஸ்ரீ ராமசந்திரசேரூரி டபுள் டிரஸ்ட் ஏற்படுத்தி 3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு அதன் கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது.

இந்த விழாவிற்கு சைதை துரைசாமி முன்னிலை வகித்தார். இந்த நிகழ்ச்சி மேளதாளங்களுடன் தொடங்கப்பட்டு, சி.கே ரவி ஐயர், எஸ்.பாலாஜி ஐயர் ஆகியோர் கும்பாபிஷேக பூஜைகளை தொடக்கி செய்தனர். தொடர்ச்சியாக ஐம்பொன் எம்.ஜி.ஆர் சிலையை பிரதிஷ்டை செய்தனர். பிறகு மஹா கும்பாபிஷேகம் கலச கும்ப தீர்த்தம் எடுத்துப் சென்று கலசங்களின் மீது தீர்த்தத்தை ஊற்றி நடத்தினர். தொடர்ந்து தீபாராதனை செய்யப்பட்டது.

இதை முன்னிட்டு நேற்று முதற்கால பூஜையாக விக்னேஸ்வர பூஜை நடத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக வருண பகவான் பூஜை, வாங்கு சாந்தி கலச ஸ்தாபம், கணபதி ஹோமம், பூர்ணாஹீதி செய்யப்பட்டது. இந்த சிறப்புமிகு கும்பாபிஷேகத்தில் தமிழகம் முழுவதும் உள்ள எம்.ஜி.ஆர் பக்தர்கள் வந்து கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொழில் அதிபரும் திருப்பதி திருமலை தேவஸ்தான முக்கிய பிரமுகருமான சேகர் ரெட்டி, வி.ஐ.டி துணைத் தலைவர் ஜி.வி. செல்வம், தொழில் அதிபர் சேம்பள்ளி நாகராஜ், துர்கா பவன் நிறுவனர் கே.எஸ்.உதயசங்கர் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## பள்ளி விடுதியில் இரும்புக் கம்பியால் தாக்கிய மாணவர்: ஒரு மாணவர் பலி, 7 பேர் காயம்

**பெல்லாரி, மார்ச் 10:**

பள்ளி விடுதியில் மாணவர் ஒருவர் இரும்புக் கம்பியால் சக மாணவர்களை தாக்கி ஒரு மாணவர் உயிரிழந்ததுடன், 7 பேர் காயமடைந்துள்ளனர்.

கர்நாடக மாநிலம் பெல்லாரி மாவட்டத்தில் உள்ள பள்ளி விடுதியில் மாணவர்கள் இரவு உணவு சாப்பிட்டுவிட்டு தூங்கிக் கொண்டிருந்தபோது, மாணவர் ஒருவர் இரும்புக் கம்பியால் திடீரென தாக்குதல் நடத்தியுள்ளார். இந்த சம்பவத்தில் பலத்த காயமடைந்த மாணவர் ஒருவர் உயிரிழந்தார். உயிரிழந்த மாணவர் கர்னூல் மாவட்டத்தைச் சேர்ந்தவர் என கூறப்படுகிறது. காயமடைந்த 7 மாணவர்கள் அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். தாக்குதல் நடத்திய மாணவர் சம்பவத்திற்குப் பிறகு தப்பியோடிய நிலையில், அவரை போலீசார் தேடி வருகின்றனர். சம்பவம் குறித்து தகவல் அறிந்த மாவட்ட காவல் கண்காணிப்பாளர் டி. சுமன் பென்னேகர் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு விசாரணை மேற்கொண்டார். விசாரணைக்கு பின் இதற்கான காரணம் வெளிப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மகளிருக்கு சம அந்தஸ்து வழங்கும் ராமச்சந்திரா மருத்துவமனை

**சென்னை, மார்ச் 10:**

ராமச்சந்திரா உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் சர்வதேச மகளிர் தினத்தை "உரிமைகள், நீதி மற்றும் செயல்" என்ற கருப்பொருளில் கொண்டாடியது. சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி பிரபா ஸ்ரீதேவன் தலைமை விருந்தினராக கலந்து கொண்டார். ஸ்ரீ ராமச்சந்திரா கல்வி மற்றும் சுகாதார அறக்கட்டளையின் அறங்காவலர் சம்யுக்தா வெங்கடாச்சலம், சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நிறுவனத்தின் அனைத்து பெண்களுக்கும் வாழ்த்து தெரிவித்தார்.

கூட்டத்தில் உரையாற்றிய பிரபா ஸ்ரீதேவன், சமத்துவமும் நீதியும் முதலில் வீட்டிலேயே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இது ஆண்களையும் பெண்களையும் சமமாக நடத்தும் ஒரு தலைமுறையை வளர்க்க உதவும் என்றும் கூறினார். சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு சமத்துவத்தின் முக்கியத்துவத்தை கற்பிக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். பாலினத்தைப் பொருட்படுத்தாமல் தங்கள் நண்பர்களை சமமாக நடத்தவும், அவர்களின் தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வாழ்க்கையில் அன்பு மற்றும் மரியாதையின் மதிப்புகளை நிலைநிறுத்தவும் மாணவர்களை அவர் வலியுறுத்தினார். பெண்கள் நேர்மையுடன் பணியாற்ற வேண்டும் என்று அவர் அறிவுறுத்தினார், வெற்றி இயற்கையாகவே பின்பற்றப்படும். அவரைப் பொறுத்தவரை, வெற்றியை பணத்தால் அளவிடக்கூடாது, ஆனால் சிகிச்சை அளிப்பவரின் திருப்தியால் அளவிடப்பட வேண்டும். தனிநபர்கள் தங்களுக்கும் சமூகத்திற்கும் நேர்மையாக இருக்க வேண்டும் என்றும், தங்கள் பெற்றோருக்குக் கடன்பட்டிருப்பதை நினைவில் கொள்ள வேண்டும் என்றும் அவர் மேலும் கூறினார். குற்ற உணர்ச்சியின்றி தொழில்முறை மற்றும் தனிப்பட்ட வாழ்க்கையை சமநிலைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார், பெண்கள் இரண்டிலும் தங்களால் முடிந்ததைச் செய்ய ஊக்குவித்தார்.

தமிழ்நாடு இ பேப்பர்.காம்
www.tamilnaduepaper.com
இ பேப்பரை தினமும் இலவசமாக பெற விரும்புபவர்கள்.
"welcome Tamilnadu" என்று கீழ் உள்ள வாட்ஸ்ஆப் எண்ணிற்கு அனுப்பி வையுங்கள். தங்களின் அமைப்பு செய்திகள் தங்கள் பகுதியில் நடைபெறும் நிகழ்ச்சிகளை வெளியிட செய்தி மற்றும் புகைப்படத்தை கீழ்உள்ள வாட்ஸ்ஆப்பிற்கு அனுப்புங்கள்
94452 65389

# மடப்புரம் காவலாளி அஜித்குமார் மீது நிகிதா அளித்த நகை திருட்டு புகார் முடித்து வைப்பு



**சிவகங்கை, மார்ச் 10:**

சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் மடப்புரம் பத்ரகாளி அம்மன் கோவில் காவலாளியாக பணிபுரிந்த அஜித்குமார் மீது கடந்த ஆண்டு ஜூன் 27-ம் தேதி நிகிதா என்பவர் நகை திருட்டு புகார் அளித்தார். இப்புகாரின் பேரில் காவலாளி அஜித்குமாரை அழைத்து வந்து தனிப்படை காவலர்கள் விசாரணை நடத்தினர். மேலும், போலீசார் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார்.

இச்சம்பவம் அதிர்வலைகளை ஏற்படுத்திய நிலையில், காவல் மரண வழக்கு பதிவு செய்த சிபிஐ, வழக்கில் சம்மந்தப்பட்ட தனிப்படை காவலர்களான கண்ணன், ராஜா, ஆனந்த், பிரபு, சங்கர மணிகண்டன், ஓட்டுநர் ராமச்சந்திரன் ஆகியோரை கைது செய்தது.

மேலும், சிபிஐ தாக்கல் செய்த கூடுதல் குற்றப் பத்திரிக்கையில் அஜித்குமார் கொலை சம்பவத்தன்று பணியில் இருந்த மானாமதுரை சரக டிஎஸ்பி சண்முக சுந்தரம் மற்றும் திருப்புவனம் காவல் நிலைய ஆய்வாளர் ரமேஷ் குமார் மற்றும் சார்பு ஆய்வாளர் சிவக்குமார், தலைமை காவலர் இளைய ராஜா ஆகிய 4 பேரின் பெயர்கள் சேர்க்கப்பட்டது.

தொடர்ந்து, இந்த வழக்கில் நகை திருட்டு புகார் அளித்த நிகிதாவை விசாரிக்க சிபிஐ தரப்பில் மதுரை தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

அதன்படி, நீதிமன்றத்தில் ஆஜரான நிகிதாவிடம், நகை திருட்டு புகாரை சிபிஐ முடிக்க முடிவு செய்திருப்பது குறித்து கருத்து கேட்கப்பட்டது. அதற்கு நிகிதா ஆட்சேபம் தெரிவிக்கவில்லை. அது தொடர்பாக எழுத்துப் பூர்வமாக மனு தாக்கல் செய்ய நிகிதாவுக்கு உத்தரவிடப்பட்டது. இந்த வழக்கு மதுரை தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் இன்று விசாரணைக்கு வந்தது. அப்போது, நிகிதா நேரில் ஆஜராகி எழுத்து பூர்வ மனு தாக்கல் செய்தார்.

திருடு போனதாக கூறப்படும் நகைகளை கண்டுபிடிக்க முடியவில்லை, எனவே நகை திருட்டு வழக்கை முடித்து வைக்கிறோம் என சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. மேலும், இதற்கு நிகிதா சம்மதம் தெரிவித்ததன் பேரில் நகை திருட்டு புகாரை நீதிமன்றம் முடித்து வைத்தது.

## க்ரைம் கார்னர்

### கஞ்சா விற்பனை செய்த 5 வாலிபர்கள் குண்டர் சட்டத்தில் கைது

**திருநெல்வேலி, மார்ச் 10:**

திருநெல்வேலி மாநகரம், பாளையங்கோட்டை, வி.எம். சத்திரத்தை சேர்ந்த மதிவாணன் மகன் பாலசுப்பிரமணியன் (வயது 27), சுப்பிரமணியன் மகன் அருண்குமார்(25), அந்தோனி செலஸ்டின் செட்டி மகன் திமோராஜ்குட்டி(28), இசக்கிபாண்டி மகன் இசக்கிமுத்து(27), முருகன் மகன் முத்துக்குமார்(எ)ரீகன்(24) ஆகிய 5 பேரும் நெல்லை மாநகர பகுதியில் கஞ்சா போதை பொருள் விற்பனை செய்து எதிர்மறை கண்காணிப்பிற்கு வந்து, பொது ஒழுங்கு மற்றும் பொது சுகாதார பராமரிப்பிற்கு குந்தகம் விளைவித்து வந்த "மருந்து சரக்கு குற்றவாளிகள்" ஆவர்.

மேற்சொன்ன 5 பேரும் திருநெல்வேலி மாநகர போலீஸ் கமிஷனர் உத்தரவுப்படி இன்று குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் பாளையங்கோட்டை மத்திய சிறையில் தடுப்புக்காவலில் அடைக்கப்பட்டனர்.

### ஆன்லைன் சூதாட்டத்தில் ரூ.15 லட்சத்தை இழந்த தொழிலாளி தற்கொலை

**சேலம், மார்ச் 10:**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் அருகே கருக்கல்வாடி சஞ்சீவிராயன்கோவில் பகுதியை சேர்ந்தவர் பிரகாஷ்ராஜ் (வயது 28). கூலித்தொழிலாளி. இவரது மனைவி சுகன்யா. கடந்த 1½ ஆண்டுகளுக்கு முன்பு இருவருக்கும் திருமணம் நடந்தது. இதனிடையே, திருமணத்திற்கு முன்பே பிரகாஷ்ராஜிக்கு ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபடும் பழக்கம் இருந்து வந்துள்ளது.

இதனால் அவர் இதுவரை ரூ.15 லட்சம் வரை ஆன்லைன் சூதாட்டத்தில் இழந்துள்ளதாக கூறப்படுகிறது. இதுபற்றி அறிந்த சுகன்யா, கணவரிடம் ஆன்லைன் சூதாட்டத்தை கைவிடுமாறும், ஏற்கனவே ரூ.15 லட்சம் வரை நாம் இழந்துவிட்டதால் எதற்காக இப்படி பண்ணுகிறாய்? என்று கேட்டு கண்டித்துள்ளார். ஆனால் மனைவியின் பேச்சை கேட்காத பிரகாஷ்ராஜ், வேலைக்கு சரிவர செல்லாமல் ஆன்லைன் சூதாட்டத்தில் தொடர்ந்து ஈடுபட்டு வந்துள்ளதாக தெரிகிறது. இந்நிலையில், சம்பவத்தன்று இரவு கணவன்-மனைவிக்கு இடையே மீண்டும் தகராறு ஏற்பட்டது. இதனால் மனமுடைந்த பிரகாஷ்ராஜ் திடீரென வீட்டிற்குள் உள்ள ஒரு அறைக்கு சென்று கதவை உள்பக்கமாக பூட்டிக்கொண்டார். இதையடுத்து சிறிது நேரம் கழித்து மனைவி சுகன்யா, கதவை திறக்குமாறு கூறியும் அவர் திறக்கவில்லை. இதனால் சந்தேகம் அடைந்த அவர் அக்கம் பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்து உள்ளே சென்றார்.

அப்போது, பிரகாஷ்ராஜ் தூக்கில் தொங்கியதை கண்டு அதிர்ச்சி அடைந்தார். தொடர்ந்து அவரை மீட்டு சிகிச்சைக்காக உடனடியாக சேலம் அரசு ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு டாக்டர்கள் பரிசோதனை செய்தபோது, பிரகாஷ்ராஜ் ஏற்கனவே இறந்துவிட்டது தெரியவந்தது. இது குறித்து தாரமங்கலம் போலீசில் சுகன்யா புகார் செய்தார். அதன்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

### 15 வயது சிறுமியை தாக்கிய 'இன்ஸ்டாகிராம்' பிரபலம் கைது

**சென்னை, மார்ச் 10:**

சென்னை காசிமேடு சிங்காரவேலன் நகர் பகுதியைச் சேர்ந்தவர் கவின் (25 வயது). இவர், காசிமேடு மீனவன் என்ற பெயரில் இன்ஸ்டாகிராமில் பிரபலமாக உள்ளதாக கூறப்படுகிறது. இவர் நேற்று முன்தினம் இரவு பைக்கில் வீட்டுக்கு சென்று கொண்டிருந்தார். அப்போது சாலையில் நின்றுகொண்டிருந்த 15 வயது சிறுமியின் மீது பைக் மோதியது. இதனால் ஆத்திரமடைந்த சிறுமி, வாக்குவாதம் செய்தார். இதில் ஆத்திரம் அடைந்த கவின், 15 வயது சிறுமி என்றுகூட பாராமல் சிறுமியின் வயிற்றில் எட்டி உதைத்துள்ளார். இதனை தட்டிக்கேட்டு வந்த சிறுமியின் தந்தையையும் கவின் தாக்கினார். இதனால் சிறுமியின் உறவினர்களான பெண்கள் பலரும் சேர்ந்து கவினை தாக்கியதாக கூறப்படுகிறது. கவினை தாக்கியதற்காக சிறுமியின் தந்தை மீது வழக்குப்பதிவு செய்தனர். மேலும் சிறுமியை தாக்கியதாக கவின் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்து கைது செய்து சிறையில் அடைத்தனர்.

## விளையாட்டு செய்திகள்

### கோப்பைகளை கொண்டாடுங்கள், தனி நபரின் சாதனையை அல்ல - கவுதம் கம்பீர்

**சென்னை, மார்ச் 10:**

டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி இந்தியா 3-வது முறையாக சாம்பியன் பட்டத்தை கைப்பற்றியது.

இறுதிப்போட்டியில் வெற்றி பெற்றப்பின் செய்தியாளர்களிடம் இந்திய அணியின் பயிற்சியாளர் கவுதம் கம்பீர் பேசினார். அப்போது "கிரிக்கெட்டில் தனி நபரின் சாதனை முக்கியமில்லை" என கூறினார் . அவர் பேசுகையில், "நாம் கோப்பைகளை கொண்டாட வேண்டும், தனி நபர்களின் சாதனையை அல்ல. சஞ்சுவின் கடைசி 3 மேட்ச்களில் அவர் சதத்தை நோக்கி ஆடாமல் இருந்தது ஒரு உதாரணம். கிரிக்கெட் என்பது ஒரு அணியாக விளையாடும் விளையாட்டு, அதில் தனி நபர்களின் சாதனைகள் முக்கியமில்லை" என்றார்.

### டி20 உலகக்கோப்பை தொடர் நாயகன் சஞ்சு சாம்சனை வரவேற்க தயாராகும் கேரள அரசு

**திருவனந்தபுரம், மார்ச் 10:**

டி20 உலகக்கோப்பையின் இறுதிப்போட்டி அகமதாபாத் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி இந்திய அபார வெற்றி பெற்றதுடன், சாம்பியன் பட்டம் வென்று அசத்தியது.

இந்த போட்டியில் சஞ்சு சாம்சன் முக்கிய பங்களிப்பை அளித்தார். அவர் 46 பந்துகளில் 5 பவுண்டரி, 8 சிக்சருடன் 89 ரன்கள் எடுத்தார். நடப்பு உலகக்கோப்பை தொடரில் 5 இன்னிஸ்களில் விளையாடியுள்ள சஞ்சு சாம்சன், 80.25 சராசரியுடன் 321 ரன்கள் எடுத்துள்ளார். 199 ஸ்ட்ரைக் ரேட்டில் அவர் இந்த ரன்களை எடுத்துள்ளார். டி20 உலகக்கோப்பை தொடரின் தொடர் நாயகன் விருது சஞ்சு சாம்சனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், இந்திய அணி கோப்பையை வெல்ல முக்கிய காரணமாக திகழ்ந்த சஞ்சு சாம்சனை வரவேற்க கேரள அரசு முடிவெடுத்துள்ளது. இந்தியாவின் வெற்றிக்குக் காரணமான சஞ்சு சாம்சனுக்கு கேரள அரசு அதிகாரப்பூர்வ வரவேற்பு அளிக்கும் அம்மாநில பொதுக் கல்வி மற்றும் தொழிலாளர் துறை மந்திரி வி. சிவன்குட்டி இன்று தெரிவித்தார். மாநில தலைநகரில் வரவேற்பு நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார். எனினும், வரவேற்பு தேதி குறித்து அவர் எதுவும் தெரிவிக்கவில்லை.

### இந்தியாவின் வரலாற்று வெற்றி: மலிங்காவின் உலக சாதனையை முறியடித்த ஜஸ்பிரித் பும்ரா

டி20 உலகக்கோப்பையின் இறுதிப்போட்டி அகமதாபாத் மைதானத்தில் நேற்று நடைபெற்றது. இதில் நியூசிலாந்து அணியை வீழ்த்தி இந்தியா அபார வெற்றி பெற்றது. பல சாதனைகளையும் தன் வசமாக்கியது.

இப்போட்டியில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரித் பும்ரா வரலாற்றுச் சாதனை படைத்தார். அவர் தனது நான்கு ஓவர்களில் 15 ரன்கள் மட்டுமே விட்டுக்கொடுத்து நான்கு விக்கெட்டுகளை வீழ்த்தினார். இதன் முலம் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய வேகப்பந்து வீச்சாளர் என்ற லாசித் மலிங்காவின் நீண்டகால சாதனையை பும்ரா முறியடித்தார்.

# சிபிஐ சம்மன்: விஜய் இன்று ஆஜராக வாய்ப்பில்லை என தகவல்



**சென்னை, மார்ச் 10:**

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப்.27-ம் தேதி தவெக தலைவர் விஜய் பங்கேற்ற கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இந்த சம்பவம் தொடர்பாக சிபிஐ விசாரணை நடத்தி வருகிறது. ஏற்கனவே 2 முறை சிபிஐ அதிகாரிகள் சம்மன் அனுப்பி இருந்தனர்.

டெல்லி சிபிஐ அலுவலகத்தில் 2 முறை ஆஜராகி சிபிஐ அதிகாரிகளின் கேள்விகளுக்கு விஜல் பதில் அளித்தார். இந்த வழக்கில் தவெக தலைவர் விஜய் நாளை ஆஜராக சிபிஐ சம்மன் அனுப்பி உள்ளது.

இந்தநிலையில் தற்போது பல்வேறு நிகழ்வுகள் இருப்பதால்தான் அந்த தேதியில் பங்கேற்க இயலாது என்றும் அடுத்த 10 நாட்களுக்கு பிறகு சிபிஐ குறிப்பிடும் தேதியில் பங்கேற்க இருப்பதாகவும் சென்னையில் உள்ள சிபிஐ அலுவலகத்தில் ஆஜராக அனுமதிக்க கோரியும் விஜய் தரப்பில் சிபிஐக்கு கடிதம் வழங்கப்பட்டுள்ளது. இதனை சிபிஐ ஏற்குமா? ஏற்காவிட்டால்இன்று விஜய் ஆஜராகி கேள்விகளுக்கு பதில் அளிப்பாரா என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

# வில்லிவாக்கத்தில் அகத்தியர் நகர் விளையாட்டு திடல்: உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்

**சென்னை, மார்ச் 10:**

சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருவல்லிக்கேணி, ஜானி பாட்ஷா தெருவில் 1.87 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகத்தை துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்த நூலகமானது தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் புத்தக அலமாரிகள், 24 இருக்கை வசதிகளுடன் படிக்கும் பகுதி, 45 இருக்கை வசதிகளுடன் முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன கழிப்பறை வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து துறைமுகம் சட்டமன்ற தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் வால்டாக்ஸ் சாலை, திருப்பள்ளி தெரு பகுதியில் 1.28 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 54 பயணிகள் அமரும் வசதி, 6 எண்ணிக்கையிலான குளிர்சாதன இயந்திரங்கள், குடிநீர் வசதி, கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் நவீன கழிப்பறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள "திருப்பள்ளி குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம்", ஏழு கிணறு, வால்டாக்ஸ் சாலை சண்முகம் தெருவில் 2.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள "முதல்வர் படைப்பகம் மற்றும் நவீன நூலகம்" ஆகியவற்றை துணை முதல்-அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மேலும் துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொண்டித் தோப்பு அம்மன் கோவில் தெருவில் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 2.43 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள சென்னை நடுநிலைப் பள்ளிக் கட்டடம், ஏழுகிணறுத் தெருவில் 1.55 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மாநகராட்சி நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய கட்டடம் ஆகியவற்றை துணை முதல்-அமைச்சர் திறந்து வைத்து மருத்துவ சேவை வசதிகளை பார்வையிட்டார்.

பின்னர் ராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கல்மண்டபத்தில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 1.31 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 60 பயணிகள் அமரும் வசதி, குளிர்சாதன இயந்திரங்கள், சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, கண்காணிப்பு கேமராக்கள் மற்றும் நவீன கழிப்பறை வசதியுடன் கட்டப்பட்டுள்ள கல்மண்டபம் குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தத்தை துணை முதல்-அமைச்சர் திறந்து வைத்தார்.

வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதியில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் அகத்தியர் நகரில் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 5.08 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்பட்டுள்ள "அகத்தியர் நகர் விளையாட்டுத் திடலை" திறந்து வைத்து பார்வையிட்டு, விளையாட்டு வீரர், வீராங்கனைகளுடன் கலந்துரையாடினார்.

அகத்தியர் நகர் விளையாட்டு திடலில் 4,500 சதுர அடி பரப்பளவில் இரண்டு தளங்கள் கொண்ட உள்விளையாட்டு அரங்கம் கட்டப்பட்டுள்ளது. தரைத்தளத்தில், பேட்மிண்டன் மைதானமும் மற்றும் முதல் தளத்தில் நவீன உடற்பயிற்சி கூடமும் அமைக்கப்பட்டுள்ளது. இவ்விளையாட்டு திடலில் வாலிபால் மைதானம், குழந்தைகள் விளையாட்டுப் பகுதி, யோகா பகுதி, சறுக்கு வளையம், செயற்கை புல்வெளி மூலம் அமைக்கப்பட்ட கிரிக்கெட் மைதானம், நீண்ட நடைபாதை, 8 வடிவ நடைபயிற்சி, கண்காணிப்பு கேமராக்கள், இருக்கை வசதிகள் மற்றும் நவீன கழிப்பறை வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. வில்லிவாக்கம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட சிட்கோ நகரில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்.ஆர்.இளங்கோ, கே.ஆர்.என். ராஜேஷ்குமார் ஆகியோரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 6.00 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள இனமானப் பேராசிரியர் அன்பழகனார் சமூக நலக்கூடத்தை துணை முதல்-அமைச்சர் திறந்து வைத்து, திருமண மண்டபம், உணவருந்தும் கூடம் உள்ளிட்ட வசதிகளை பார்வையிட்டார்.

## வணிகச் செய்திகள்

### கிரெடிட் கார்டு விதிகளில் ஏப்.1 முதல் வரும் முக்கிய மாற்றங்கள்?

**சென்னை, மார்ச் 10:**

இனி கிரெடிட் கார்டுக்கு விண்ணப்பிக்கும்போது பான் அட்டை கட்டாயம். பான் அட்டை இல்லாமல் வங்கிகள் விண்ணப்பங்களை ஏற்கமாட்டார்கள். இதனால் செலவுகள் வரி அமைப்புடன் இணைக்கப்படும். போலி கணக்குகள் மற்றும் தவறான பயன்பாடு குறையும். மேலும், ஒரு நிதியாண்டில் கிரெடிட் கார்டு மூலம் ரூ.10 லட்சம் அல்லது அதற்கு மேல் ரொக்கமற்ற செலவுகள் செய்தால், அந்த விவரங்களை வங்கி வருமான வரித்துறைக்கு தெரிவிக்க வேண்டும். அதேபோல், ரூ.1 லட்சம் அல்லது அதற்கு மேல் ரொக்கப் பரிவர்த்தனை செய்தாலும் அது கண்காணிக்கப்படும். அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகள் அனைத்தும் பதிவு செய்யப்படும். இனி கிரெடிட் கார்டு மூலம் வருமான வரியும் செலுத்த முடியும். இது வசதியாக இருந்தாலும், செயலாக்கக் கட்டணம் மற்றும் வட்டி விதிக்கப்பட வாய்ப்பு உள்ளது. எனவே கவனமாக பயன்படுத்த வேண்டும். நிறுவனங்கள் ஊழியர்களுக்கு வழங்கும் கிரெடிட் கார்டுகளையும் கவனமாக கையாள வேண்டியிருக்கும். அந்த அட்டை தனிப்பட்ட செலவுக்கு பயன்படுத்தப்பட்டால், அந்த தொகை ஊழியரின் வருமானமாகக் கருதப்படலாம். அதற்கு வரியும் விதிக்கப்படலாம். எனவே, அலுவலக செலவுகள் மற்றும் தனிப்பட்ட செலவுகள் தெளிவாகப் பிரிக்கப்பட்டிருக்க வேண்டும். கடந்த மூன்று மாதங்களுக்குள் வழங்கப்பட்ட கிரெடிட் கார்டு அறிக்கையை பான் கார்டு விண்ணப்பத்திற்கான செல்லுபடியாகும் முகவரிச் சான்றாக வழங்கலாம்.

# தமிழக சட்டசபை தேர்தல் எப்போது? - வரும் 15ந் தேதி அறிவிப்பு வெளியாக வாய்ப்பு

**சென்னை, மார்ச் 10:**

தமிழகத்தில் ஆளும் கட்சியான திமுக அரசின் பதவிக்காலம் மே மாதம் 10-ந் தேதியுடன் நிறைவடைகிறது. இதேபோல், புதுச்சேரி (ஜூன் 15), மேற்கு வங்காளம் (மே 7), அசாம் (மே 20), கேரளா (மே 23) ஆகிய மாநிலங்களின் பதவிக்காலமும் முடிவடைகிறது. எனவே, தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகள் உள்பட 5 மாநிலங்களிலும் மொத்தம் உள்ள 824 சட்டசபை தொகுதிகளுக்கும் தேர்தலை நடத்த இந்திய தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்து வருகிறது.

இது தொடர்பாக, ஒவ்வொரு மாநில தலைமை தேர்தல் அதிகாரிகளுடனும் தேர்தல் ஆணைய அதிகாரிகள் நேரடியாக சென்று ஆலோசனை நடத்தி வருகின்றனர். அந்த வகையில், கடந்த மாதம் இறுதியில் இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் சென்னை வந்து தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் உடன் ஆலோசனை நடத்தினார்.

மேலும், அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி தலைவர்களையும் சந்தித்து பேசினார். இந்த நிலையில், தமிழகம் உள்பட 5 மாநில தேர்தல் தேதி எப்போது? என்ற எதிர்பார்ப்பு நாடு முழுவதும் எழுந்துள்ளது. பிரதமர் நரேந்திரமோடி நாளை மறுநாள் (11-ந் தேதி) திருச்சியில் நடைபெற உள்ள தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் பங்கேற்று பேச இருக்கிறார். அவர், டெல்லி திரும்பிய பிறகு 5 மாநில தேர்தல் தேதிக்கான அறிவிப்பு வெளியாகும் என்று தகவல் வெளியாகியுள்ளது. அந்த வகையில், வரும் 15-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) இந்திய தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார், 5 மாநில தேர்தல் தேதியை அறிவிக்க இருப்பதாக கூறப்படுகிறது.

**வாக்குப்பதிவுக்கு வாய்ப்பு**

தமிழகத்தில் ஏப்ரல் மாதம் 23-ந் தேதி (வியாழக்கிழமை) வாக்குப்பதிவு நடைபெற அதிகம் வாய்ப்பு இருப்பதாக சொல்லப்படுகிறது. தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட உடனேயே தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்துவிடும் என்பது குறிப்பிடத்தக்கது.

# தங்கள் முழு ஆற்றலை பெண்கள் உணர வேண்டும்: குடியரசுத் தலைவர் முர்மு வலியுறுத்தல்

**புதுடெல்லி, மார்ச் 10:**

பெண்களின் வலிமை மற்றும் சாதனைகளைப் பாராட்டிய குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, பெண்கள் தங்கள் முழு ஆற்றலை உணர வேண்டும் என வலியுறுத்தினார்.



சர்வதேசப் பெண்கள் தினத்தை முன்னிட்டு மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் ஏற்பாடு செய்த நிகழ்ச்சியில், குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு பங்கேற்று பேசியதாவது: கல்வி, நிர்வாகம், நீதித்துறை, பாதுகாப்பு, மருத்துவம், அறிவியல், தொழில்நுட்பம், கலைகள், தொழில் முனைவு மற்றும் விளையாட்டு ஆகிய அனைத்துத் துறைகளிலும் பெண்கள் முக்கிய பங்காற்றுகின்றனர்.

சுய உதவிக் குழுக்கள் மூலம் ஊரக பெண்களும், பொருளாதார ரீதியாக தற்சார்பு நிலையை அடைந்து வருகின்றனர். கிராம வளர்ச்சி, வேலை வாய்ப்பு, ஸ்டார்ட்-அப் மற்றும் கார்ப்பரேட் துறையில் பெண்கள் தலைமை தாங்குகின்றனர். பெண்கள் தங்கள் முழு ஆற்றலை உணர வேண்டும். இவ்வாறு முர்மு கூறினார்.

பிரதமர் மோடி நேற்று வெளியிட்ட வாழ்த்து செய்தியில், "சர்வதேச பெண்கள் தினத்தில், நமது பெண்களுக்கு வாழ்த்துகள். அனைத்து துறையிலும், பெண்கள் உறுதியுடனும், படைப்பாற்றலுடனும், ஈடு இணையற்ற ஆர்வத்துடனும் நாட்டை முன்னேற்றம் அடையச் செய்கின்றனர். அவர்களின் சாதனைகள் நமது தேசத்துக்கு ஊக்குவிப்பை அளிக்கின்றன. வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்கும் நமது தீர்மானத்துக்கு வலிமை சேர்க்கின்றன. வளமான தேசத்துக்கு பெண்களின் பங்களிப்பு தொடர்ந்து வழிகாட்டும்" என கூறியுள்ளார்.

## கேரள மாணவர்களுடன் கலந்துரையாடிய ராகுல்



**புதுடெல்லி, மார்ச் 10:**

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு (மார்ச் 8), காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி கேரளா மாணவர்களுடன் கலந்துரையாடிய வீடியோவை நேற்று வெளியிட்டார்.

அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது: "பெண்கள் ஆண்களை விட அதி புத்திசாலிகள். எனது குடும்பத்தில் என் பாட்டிதான் (இந்திரா காந்தி) பாஸ். பெண்கள் தான் குடும்பத்தின் உண்மையான தலைவர்கள் என்பதைப் பார்த்து வளர்ந்தவன் நான். எனது குடும்பத்தில் எப்போதும் பெண்களின் எண்ணிக்கையே அதிகமாக இருக்கும்.

ஆண்களைப் பொருத்தவரையில் எதற்கும் அவசரப்படுபவர்களாகவும், தேவையற்ற விஷயங்களில் கவனத்தைச் சிதறவிடுபவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால், பெண்கள் நேரடி அதிகாரத்தைச் செலுத்தாமல், மறைமுக அதிகாரத்தைப் பயன்படுத்துகிறார்கள். அதுவே மிகவும் பலனளிக்கக் கூடியதாக இருக்கிறது.

பெண்கள் தங்கள் ஆற்றலை உணர்ந்து செயல்பட்டால், சமூகத்தில் மிகப்பெரிய மாற்றத்தைக் கொண்டுவர முடியும். பெண்கள் முன்னேற முழு உரிமை அளிக்கப்பட வேண்டும். இவ்வாறு ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்

## டில்லி-கோவா விமானத்தில் பீடி புகைத்த பயணி மீது வழக்குப் பதிவு

**புதுடெல்லி, மார்ச் 10:**

டில்லியைச் சேர்ந்த ஆஷிஷ் என்பவர் தலைநகர் தில்லியிலிருந்து கோவாவிற்கு ஆகாசா ஏர் விமானத்தில் சனிக்கிழமை பயணித்தபோது இந்த சம்பவம் நடந்ததாக அதிகாரிகள் தெரிவித்தனர். விமான நிறுவனத்தின் புகாரின்படி, பயணி விமானக் கழிப்பறைக்குள் 'பீடி' புகைத்ததாகக் கூறப்படுகிறது. மேலும் அவர் ஒரு லைட்டரை வைத்திருந்ததாகவும், இது விமானம் மற்றும் விமானத்தில் பயணிகளின் பாதுகாப்பிற்கு ஆபத்தை விளைவிக்கும் என்றும் போலீஸ் அதிகாரி கூறினார். கோவா வந்தவுடன் அந்த பயணி உரிய அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டதாக அகாசா ஏர் நிறுவனம் தெரிவித்துள்ளது. அதேசமயம் இந்த விவகாரத்தில் அதிகாரிகளுக்கு முழு ஒத்துழைப்பை வழங்குவதாக விமான நிறுவனம் தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இச்சம்பவம் தொடர்பாக கோவாவில் உள்ள மோபா விமான நிலைய காவல் நிலையத்தில் பயணி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விவகாரத்தில் விசாரணை தொடர்ந்து நடந்து வருவதாகவும் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பஞ்சாபில் அனைத்து பெண்களுக்கும் மாதம் ரூ.1,000 4 ஆண்டுக்குப் பிறகு வாக்குறுதி நிறைவேற்றம்

**சண்டிகர், மார்ச் 10:**

*சண்டிகர்: பஞ்சாபில் உள்ள அனைத்துப் பெண்களுக்கும் மாதம் ரூ.1,000 மற்றும் பட்டியலின சமூகத்தைச் சேர்ந்த பெண்களுக்கு மாதம் ரூ.1,500 வழங்கும் புதிய திட்டத்தை ஆம் ஆத்மி அரசு நேற்று அறிவித்தது.*



*கடந்த 2022-ல் நடைபெற்ற பஞ்சாப் தேர்தலின் போது, தங்கள் கட்சி ஆட்சிக்கு வந்தால் அனைத்து பெண்களுக்கும் மாதம் ரூ.1,000 நிதியுதவி வழங்கப்படும் என ஆம் ஆத்மி கட்சி வாக்குறுதி அளித்தது. தேர்தலில் வெற்றி பெற்ற ஆம் ஆத்மி கட்சி சார்பில் பகவந்த் மான் முதல்வரானார். 4 ஆண்டுகளாகியும் இந்த வாக்குறுதி நிறைவேற்றப் படவில்லை.*

*இந்நிலையில், மகளிர் தினமான நேற்று பஞ்சாப் சட்டப்பேரவையில் நிதியமைச்சர் ஹர்பால் சிங் சீமா 2026- 27 நிதியாண்டுக்கான பட்ஜெட்டை தாக்கல் செய்தார். அப்போது 'முதலமைச்சர் மாவன் தியான் சத்கார் யோஜனா' என்ற திட்டத்தை அறிவித்தார்.*

*இத்திட்டத்தின் கீழ் அனைத்து பெண்களுக்கும் மாதம் ரூ.1,000, பட்டியலின பெண்களுக்கு மாதம் ரூ.1,500 வழங்கப்படும் என அவர் அறிவித்தார். இந்தப் பணம் பயனாளிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும் என்றும் தெரிவித்தார். அமைச்சர் சீமா கூறும்போது, "18 வயதுக்கு மேற்பட்ட அனைத்துப் பெண்களும் இத்திட்டத்தில் பயன் பெறலாம். தற்போதுள்ள அல்லது முன்னாள் நிரந்தர அரசு ஊழியர்கள், எம்.பி./ எம்எல்ஏ.க்கள் மற்றும் வருமான வரி செலுத்துபவர்கள் ஆகிய ஒரு சிலரைத் தவிர மற்ற அனைவரும் இதில் பயன் பெறலாம்.*

*மேலும், முதியோர் ஓய்வூதியம், கணவனை இழந்தவர்கள், ஆதரவற்றோர் ஓய்வூதியம் அல்லது மாற்றுத் திறனாளிகள் ஓய்வூதியம் போன்ற ஏற்கெனவே உள்ள சமூக பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் பயனடைந்து வரும் பெண்களும் இத்திட்டத்துக்குத் தகுதியுடையவர்கள்" என்றார்.*

## கேரளத்தில் 'வந்தே பாரத்' மீது மீண்டும் கல்வீச்சு: ஜன்னல் கண்ணாடிகள் சேதம்; பயணிகள் தப்பினர்

**திருவனந்தபுரம், மார்ச் 10:**

கேரளத்தில் அடையாளம் தெரியாத சமூக விரோதிகள் சிலர் வந்தே பாரத் ரயில் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இதில் ரயில் ஜன்னல் கண்ணாடிகள் சேதமடைந்தன. அதிருஷ்டவசமாக பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.



இது தொடர்பாக ரயில்வே காவல் துறையினர் கூறியதாவது: திருவனந்தபுரம்-மங்களூரு இடையிலான வந்தே பாரத், கேரளத்தின் அலுவா - அங்கமாலி ரயில் நிலையங்களுக்கு இடையிலான பகுதியில் சனிக்கிழமை இரவு 7.15 மணியளவில் சென்று கொண்டிருந்தது.

அப்போது, அடையாளம் தெரியாத சமூக விரோதிகள் சிலர் ரயிலை நோக்கி சரமாரியாக கற்களை வீசினர். இதில் ரயில் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்தன. அதிருஷ்டவசமாக பயணிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

இந்த சம்பவம் தொடர்பாக ரயிலில் உள்ள கண்காணிப்பு கேமராக்கள் பதிவுகளை ஆதாரமாகக் கொண்டு விசாரணை நடைபெறுகிறது.

சம்பவம் நிகழ்ந்த இடத்தின் அருகே வசிக்கும் மக்களிடம் இருந்து தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

மாநில காவல் துறையும் தனியாக விசாரணை நடத்தி வருகிறது என்று தெரிவித்தனர்.

கடந்த மாதம் இதேபோல் வந்தே பாரத் ரயில் மீது கல் வீசியது தொடர்பாக கண்ணூரைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# அமெரிக்க அதிபர் டிரம்ப கூறுவதை மோடி பின்பற்றுகிறார்: கார்கே

**புதுடெல்லி, மார்ச் 10:**

*அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் ஒரு சர்வாதிகாரி, பிரதமர் நரேந்திர மோடி அவருடைய அடிமை என்று காங்கிரஸ் தேசியத் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே விமர்சித்துள்ளார்.*



*கர்நாடகத்தின் கலபுர்கி மாவட்டத்தில் உள்ள சித்தாபூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ரூ.1,069 கோடி மதிப்பிலான வளர்ச்சிப் பணிகளின் தொடக்க நிகழ்ச்சியில் பங்கேற்று மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவர் மல்லிகார்ஜுன கார்கே பேசியதாவது: ஈரான் நாட்டின் உச்ச தலைவர் கொலை செய்யப்பட்டிருக்கிறார். ஒரு நாட்டின் தலைவர் கொலை செய்யப்படும்போது, அந்த நாடும் உலகமும் எவ்வாறு பாதுகாப்பாக இருக்கும்? நாடுகளின் தலைவர்கள் மிரட்டப்படும்போது, உலகில் அமைதி நிலவாது. அமெரிக்கா சர்வதேச சட்டங்களை மீறி வருகிறது.*

*அமெரிக்காவுடனான வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்ள இந்தியா கட்டாயப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியா இறக்குமதி செய்யும் அமெரிக்கப் பொருள்களுக்கு வரி விதிக்கப்படாத நிலையில், இந்தியா ஏற்றுமதி செய்யும் பொருள்களுக்கு அந்நாடு வரி விதிக்கும்.*

*நம் நாட்டில் 65 சதவீத மக்கள் விவசாயத்தைச் சார்ந்துள்ளனர். அமெரிக்காவில் இது 3 சதவீதமாக உள்ளது. டிரம்ப் போன்றவர்களின் நட்பால், நீங்கள் (பிரதமர் மோடி) நம்முடைய நாட்டை அடிமையாக்குகிறீர்கள்; அமெரிக்கா கூறுவதைக் கேட்டு செயல்படுகிறீர்கள்.*

*ரஷியா, ஈரான், வெனிசுலா ஆகிய நாடுகளிலிருந்து இந்தியா கச்சா எண்ணெய்யை இறக்குமதி செய்து வந்தது. எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்ய குறைந்த விலையில் எங்கு கச்சா எண்ணெய் கிடைக்கிறதோ அங்கு இந்தியா கொள்முதல் செய்தது.*

*டிரம்ப்பை பிரதமர் மோடி நண்பர் என்று அழைக்கிறார். இந்தியா ரஷியாவிடமிருந்து கச்சா எண்ணெய்யைக் கொள்முதல் செய்தது. ஆனால், டிரம்ப் கொள்முதல் செய்யக்கூடாது அல்லது வரி விதிப்பேன் என்றார்.*

*இந்திய எண்ணெய் சுத்திகரிப்பு நிறுவனங்கள் ரஷிய கச்சா எண்ணெய்யை கொள்முதல் செய்ய 30 நாள்களுக்கு அமெரிக்கா அனுமதி அளித்துள்ளது. டிரம்ப் ஒரு சர்வாதிகாரி. பிரதமர் மோடி அவருடைய சொல்படி கேட்கிறார்.*

*நாட்டை நிர்வகிக்க மக்கள் உங்களைத் தேர்ந்தெடுத்தனர். அதை விடுத்து, நாடு முழுவதும் பயணிக்கும் பிரதமர், தேர்தல் பிரசாரங்களை மேற்கொண்டு வருகிறார். நீண்ட காலத்துக்கு காங்கிரஸ் ஆட்சியில் இல்லாத சூழலில், அதன் தலைவர்களை குறிவைத்துப் பேசி வருகிறார். நாட்டு மக்களின் கவனத்தை திசைத்திருப்ப அவர் இவ்வாறு செய்கிறார். காங்கிரஸ் கட்டமைத்த நாட்டை, மோடி அழித்து வருகிறார் என்றார் கார்கே.*

## "ராஜினாமா செய்தது எனது மனப்பூர்வமான முடிவு" - முன்னாள் ஆளுநர் ஆனந்தபோஸ் தகவல்

**கொல்கத்தா, மார்ச் 10:**

மேற்கு வங்க ஆளுநராக இருந்த சி.வி.ஆனந்த போஸ், சில நாட்களுக்கு முன்பு ராஜினாமா செய்தார். அவரது ராஜினாமா குறித்து சர்ச்சைகள் எழுந்தன. பல்வேறு நபர்களின் அழுத்தம் காரணமாகவும், குறுக்கீடு காரணமாகவும் சி.வி. ஆனந்த போஸ் ராஜினாமா செய்ததாக மேற்கு வங்க முதல்வர் மம்தா பானர்ஜி குற்றம்சாட்டினார்.

இதைத் தொடர்ந்து அவர் நேற்று கொல்கத்தா விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மேற்கு வங்க ஆளுநராக நான் 1,200 நாட்கள் பதவி வகித்தேன். இது கிரிக்கெட்டில் 12 செஞ்சுரிகள் அடிப்பதற்கு சமம்.

நான் ராஜினாமா செய்தது மனப்பூர்வமாக எடுத்த முடிவு. பல முறை யோசித்த பின்னரே நான் ராஜினாமா செய்தேன். எப்போது ராஜினாமா செய்யவேண்டும் என்பதற்கு எனக்கு அதிக சந்தர்ப்பம் தரப்பட்டது. சரியான நேரம் வந்ததும் ராஜினாமா செய்தேன். இதில் யாருடைய குறுக்கீடும் இல்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

## பஞ்சாப் மாநிலத்தில் ஆயுத விற்பனையில் ஈடுபட்ட 2 பேர் கைது

**சண்டிகர், மார்ச் 10:**

பஞ்சாபில் ஆயுதங்கள் விற்பனையில் ஈடுபட்ட 2 பேரை மாநில போலீஸார் கைது செய்து உள்ளனர்.

இது குறித்து மூத்த போலீஸ் அதிகாரி கவுரவ் டோரா செய்தியாளர்களிடம் கூறுகையில், "கைதான இருவரிடம் இருந்து 5 துப்பாக்கிகளை பறிமுதல் செய்துள்ளோம்.

அவர்களில் ஒருவர் 18 வயதுடையவர். இவர்களுக்கு பிலிப்பைன்ஸ், ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள ஆயுத கடத்தல் கும்பல்களுடன் தொடர்பு உள்ளது. இவர்கள் அண்மையில் மத்திய பிரதேசத்தை சேர்ந்த ஒருவருக்கு ரூ.87,000-க்கு கைத் துப்பாக்கியை விற்பனை செய்துள்ளனர்" என்று தெரிவித்தார்.

## ரூ.1-க்கு காலணி விற்பனை: கூட்டத்தில் கேரள போலீஸார் தடியடி

**கோழிக்கோடு, மார்ச் 10:**

கேரள மாநிலம் கோழிக்கோடு நகரில் உள்ள ஒரு கடை நிர்வாகம், முதலில் வரும் 100 பேருக்கு 1 ரூபாய்க்கு காலணி வழங்கப்படும் என விளம்பரம் செய்தது. இதனால் நூற்றுக்கணக்கான வாடிக்கையாளர்கள், அதிகாலை 2 மணியிலிருந்தே அப்பகுதியில் திரண்டனர். இதனால் அங்கு நெரிசல் ஏற்பட்டு போக்குவரத்து பாதித்தது. நிலைமை கட்டுக்கடங்காமல் போனதால், கூட்டத்தைக் கலைக்க போலீசார் லேசான தடியடி நடத்தினர். இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, அப்பகுதியில் பதற்றத்தை ஏற்படுத்தியதாக கடையின் உரிமையாளர்களை அழைத்துச் சென்ற போலீஸார், அவர்களிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

## கையிருப்பில் 25 கோடி பேரல் பெட்ரோலியப் பொருள்கள்




**புதுடெல்லி, மார்ச் 10:**

இஸ்ரேல் மற்றும் அமெரிக்க படைகள் ஈரானுக்கு எதிராக போரை நடத்தி வரும் நிலையில், உலகளாவிய கச்சா எண்ணெய் சந்தையில் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. குறிப்பாக, ஈரான் 'ஹோர்முஸ் ஜலசந்தியை மூடியுள்ளதால், கச்சா எண்ணெய் வினியோகம் முடங்கியுள்ளது. இதன் நேரடி பாதிப்பு இப்போது இந்தியாவிலும் எதிரொலிக்க தொடங்கியுள்ளது. இந்நிலையில், நாடு முழுவதும் சமையல் கியாஸ் சிலிண்டர் விலை உயர்த்தப்பட்டது. புதிய விலை மாற்றத்தின்படி வீட்டு உபயோகத்திற்கான 14.2 கிலோ சிலிண்டரின் விலை ரூ.60 உயர்த்தப்பட்டது. நாளுக்கு நாள் ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் போர் உக்கரம் அடைந்து வருகின்றன. ஈரானும் பதில் தாக்குதல் நடத்தி வருகிறது. இதன் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளில் பதற்றம் நிலவி வருகிறது. நாளுக்குநாள் இதுகுறித்த நெருக்கடி அதிகரித்து வருவதால் பெட்ரோல், டீசல் விலை உயரும் என்ற அச்சம் நிலவி வருகிறது. மேலும் கியாஸ் சிலிண்டர் தட்டுபாடு ஏற்படும் எனவும் தகவல் பரவியது. இதனால் பொது மக்கள் இடையே அச்சம் ஏற்பட்டது. டி பேரலுக்கும் அதிகமான கச்சா எண்ணெய் மற்றும் பெட்ரோலிய பொருள்கள் கையிருப்பில் உள்ளதாகாவும் அடுத்த 2 மாதங்களுக்கு உள்நாட்டு தேவையை எந்த பிரச்சினையும் இல்லாமல் சமாளிக்க முடியும் என மத்திய அரசு தகவல் தெரிவித்துள்ளது.

## கர்நாடகாவில் ரூ.1,069 கோடி நலத்திட்ட பணிகள்; துவக்கி வைத்த கார்கே

**கலபுரகி, மார்ச் 10:**

கர்நாடகாவின் கலபுரகி மாவட்டத்தில் சித்தப்பூர் நகரில் காங்கிரஸ் கட்சியின் அகில இந்திய தலைவரான கார்கே இன்று ரூ.1,069 கோடி மதிப்பிலான நலத்திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டியும், முடிவுற்ற திட்டங்களை துவக்கியும் வைத்துள்ளார். இதன்பின்னர் திரளாக கூடியிருந்த கூட்டத்தினரின் முன் உரையாற்றிய அவர், 3 சதவீத இந்தியர்களே அமெரிக்காவை சார்ந்துள்ளனர். 65 சதவீத இந்திய விவசாயிகள் வேளாண்மையை சார்ந்தே உள்ளனர் என கூறினார். ரஷியாவிடம் எண்ணெய் வாங்கினால் வரி விதிப்பேன் என அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், இந்தியாவுக்கு எதிராக கூறுகிறார். டிரம்ப்பிடம் ஒவ்வொரு நாளும் நான் பேசுகிறேன் என மோடி கூறுகிறார். வரி விதிப்பது பற்றியா அவரிடம் நீங்கள் பேசி கொண்டிருக்கிறீர்கள்? என கார்கே கேட்டுள்ளார்.

# ஈரான் தாக்குதலில் 190 ஏவுகணைகள், 1,110 டிரோன்கள் இடைமறித்து அழிப்பு

**அபுதாபி, மார்ச் 10:**

அமீரக பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:-


அமீரகத்தின் மீது தொடர்ந்து ஈரானின் தரப்பில் ஏவப்பட்ட 9 பாலிஸ் டிக் ஏவுகணைகள் மற்றும் 109 டிரோன்கள் இடைமறித்து அழிக்கப்பட்டுள் ளது. இந்த நடவடிக்கையை அமீரக வான் பாதுகாப்பு படைகள் வெற்றிகரமாக செய்து முடித்துள்ளன. நேற்று 112 டிரோன்கள் அமீரகத்தை நோக்கி வந்தன. அவற்றில் 109 டிரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன.

இதில் தாக்குதல் தொடங்கியதில் இருந்து மொத்தம் 205 ஏவுகணைகள் நாட்டை நோக்கி வந்தன. அவற்றில் 190 ஏவுகணைகள் வான் பாதுகாப்பு அமைப்புகள் மூலம் சுட்டு வீழ்த்தப்பட்டன. மேலும் 13 ஏவுகணைகள் கடலில் விழுந்தன. ஒரு ஏவுகணை அமீரகத்தின் நிலப்பரப்பில் விழுந்தது. அதேபோல் மொத்தம் 1,184 டிரோன்கள் ஈரானில் இருந்து தாக்க வந்தது. இதில் 1,110 டிரோன்கள் இடைமறித்து அழிக்கப்பட்டன. மீதியுள்ள 74 டிரோன்கள் கடலில் விழுந்துள்ளன.

தொடர்ந்து அமீரகத்தின் பைட்டர் ஜெட் விமானங்கள் மற்றும் வான் பாது காப்பு அமைப்புகள் தொடர் கண்காணிப்பு மற்றும் இடைமறிப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. கூடுதலாக நாட்டை நோக்கி வந்த 8 கடல் சார் ஏவுகணைகள் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளன. இதுவரை இடைமறிப்பு சம்ப வங்களில் 3 பேர் பலியாகி உள்ளனர்.

அதேபோல் இந்தியா, அமீரகம், பாகிஸ்தான், வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், பிலிப்பைன்ஸ் உள்ளிட்ட நாடுகளை சேர்ந்த 112 பேர் காயமடைந்து சிகிச்சை பெற்று வருகின்றனர். தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சகம் சார்பில் நாட்டில் அனைத்து ராணுவ படைகளும் தயார்படுத்தப்பட்டு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# ஈரான் கப்பலை தாக்கும் முன் 2 முறை எச்சரித்த அமெரிக்கா; தந்தையிடம் கப்பல் ஊழியர் பேச்சு



**தெஹ்ரான், மார்ச் 10:**

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. தொடர்ந்து நடந்த தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர்.

ஈரானின் பாதுகாப்பு மந்திரி அமீர் நசீர்ஜடே மற்றும் புரட்சிகர காவல்படை தளபதி முகமது பாக்பூர் ஆகியோர் கொல்லப்பட்டனர். ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி, அவருடைய மனைவி, மகள், மருமகன் உள்ளிட்ட குடும்பத்தினரும் கொல்லப்பட்டு உள்ளனர். இதனை ஈரான் நாடும் உறுதி செய்துள்ளது. இதனால் மத்திய கிழக்கு பகுதியில் கடும் பதற்ற நிலை காணப்படுகிறது. இந்நிலையில், இந்திய பெருங்கடலில் இருந்த ஈரான் போர்க்கப்பலை அமெரிக்காவின் நீர்மூழ்கி கப்பல் ஒன்று கடலுக்கு உள்ளே இருந்து குண்டுவீசி கடுமையாக தாக்கியது. இதில் அந்த கப்பல் பல துண்டுகளாக உடைந்தும், வெடித்து சிதறியும், தீப்பற்றி எரிந்தும் போனது. அந்த கப்பலை, அமெரிக்காவின் நீர்மூழ்கி கப்பல் தாக்கும் காட்சிகள் சமூக ஊடகங்களில் வைரலாகின. இதற்கு ஈரான் கடும் கண்டனம் தெரிவித்தது. ஈரான் வெளியுறவு மந்திரி அராக்சி கூறும்போது, சர்வதேச நீர்வழிகளில் எந்தவித எச்சரிக்கையும் தெரிவிக்காமல் அமெரிக்க படைகள் அராஜகத்துடன் நடந்து கொண்டுள்ளன என கூறினார். இந்த நிலையில், ஈரான் இன்டர்நேசனல் செய்தி நிறுவனம் வெளியிட்ட செய்தியில், ஈரானின் கப்பலில் இருந்த ஊழியர் ஒருவர், அவருடைய தந்தையிடம் இதுபற்றி பேசியுள்ளார். அதில், ஈரான் கப்பலை தாக்கும் முன் அமெரிக்கா 2 முறை எச்சரித்தது என கூறியுள்ளார். கப்பலை விட்டு விட்டு வெளியேறுங்கள் என ஊழியர்களுக்கு அமெரிக்க படைகள் எச்சரித்து உள்ளன என தெரிவித்து உள்ளது. ஆனால், ஈரான் வெளியுறவு மந்திரி அராக்சியோ சர்வதேச நீர்வழிகளில் எந்தவித எச்சரிக்கையும் தெரிவிக்காமல் அமெரிக்க படைகள் நடந்து கொண்டுள்ளன என கூறினார். இந்த சூழலில், ஈரான் செய்திநிறுவனத்தின் தகவல் அதற்கு முரணான விசயங்களை வெளியிட்டு உள்ளது. தொடர்ந்து அந்த செய்தியில், கப்பலை விட்டு ஊழியர்கள் வெளியேற விடாமல் கப்பலின் கேப்டன் மறுத்து இருக்கிறார். உடனடி ஆபத்து நெருங்கிய சூழலில், அவர் இப்படி கூறியது சர்ச்சையானது. இதனால், கப்பல் கேப்டனுக்கும், அவருடைய சக அதிகாரிகளுக்கும் வாக்குவாதம் ஏற்பட்டு உள்ளது. தாக்குதலுக்கு முன்பு இது நடந்துள்ளது என அந்த செய்தி தெரிவிக்கின்றது.

# நேபாள நாடாளுமன்ற தேர்தல்: பெரும்பான்மையுடன் வெற்றிபெற்ற ராஷ்டிரிய சுதந்திர கட்சி

**காத்மாண்டு, மார்ச் 10:**

இந்தியாவின் அண்டை நாடு நேபாளம். இந்நாட்டின் பிரதமராக இருந்த கே.பி. சர்மா ஒலிக்கு எதிராக இளைஞர்கள் போராட்டத்தை ஈடுபட்டனர். போராட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்டோர் உயிரிழந்ததால் நிலைமை கட்டுக்குள் இல்லாமல் சென்றது.

இதையடுத்து நேபாள பிரதமர் பதவியை கே.பி. சர்மா ஒலி ராஜினாமா செய்தார். இதைத்தொடர்ந்து நாட்டை நிர்வகிக்க கடந்த செப்டம்பர் மாதம் இடைக்கால பிரதமராக சுஷிலா கார்கி நியமிக்கப்பட்டார். அவர் கடந்த சில மாதங்களாக



நேபாளத்தின் இடைக்கால பிரதமராக செயல்பட்டு வந்தார். இதனை தொடர்ந்து புதிய அரசை தேர்ந்தெடுக்க நாடாளுமன்ற தேர்தல் கடந்த 5ம் தேதி நடைபெற்றது. தேர்தலில் புதிதாக தொடங்கப்பட்ட ராஷ்டிரிய சுதந்திர கட்சி, நேபாள காங்கிரஸ், நேபாள கம்யூனிஸ்டு உள்பட பல்வேறு கட்சிகள் போட்டியிட்டன. ராஷ்டிரிய சுதந்திர கட்சியின் பிரதமர் வேட்பாளராக ராப் பாடகர் பாலேந்திர ஷா களமிறங்கினார். கே.பி.சர்மா ஒலிக்கு அரசுக்கு எதிரான இளைஞர்கள் போராட்டத்தில் ராஷ்டிரிய சுதந்திர கட்சி முக்கிய பங்காற்றது. நேபாள நாடாளுமன்றத்தின் கீழ்சபையில் மொத்தம் 275 உறுப்பினர்கள் உள்ளனர். அவர்களில் 165 பேர் நேரடியாகவும், 110 பேர் விகிதாச்சார பிரதிநிதித்துவ முறையிலும் தேர்வு செய்யப்படுவர்.

அதன்படி, 165 இடங்களுக்கு தேர்தல் நடைபெற்று வாக்கு எண்ணிக்கை நடைபெற்று வருகிறது. வாக்குச்சீட்டு முறை என்பதால் வாக்கு எண்ணிக்கை கடந்த சில நாட்களாக நடைபெற்று வருகிறது. இதில் 165 இடங்களில் 161 இடங்களுக்கான முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. இதில், 124 இடங்களில் ராஷ்டிரிய சுதந்திர கட்சி வெற்றிபெற்றுள்ளது. ராஷ்டிரிய சுதந்திர கட்சி பெரும்பான்மையுடன் வெற்றிபெற்றுள்ள நிலையில் அந்த கட்சியின் பாலேந்திர ஷா பிரதமராக பொறுப்பேற்க உள்ளார். நேபாள காங்கிரஸ் 17 இடங்களை மட்டுமே கைப்பற்றி படுதோல்வியடைந்தது.

# நல்ல வேலைவாய்ப்புக்காக ஆஸ்திரேலியாவில் குடியேறும் நியூசிலாந்து முன்னாள் பெண் பிரதமர்

**மெல்போர்ன், மார்ச் 10:**

நியூசிலாந்தின் பிரதமராக 5 ஆண்டுகள் பதவி வகித்த ஜெசிந்தா, வீட்டை விற்று விட்டு குடும்பத்துடன் ஆஸ்திரேலியாவில் குடியேறியுள்ளார்.

பின் தங்கிய நாடுகளை சேர்ந்த அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள், பல்வேறு காரணங்களுக்காக, முன்னேறிய நாடுகளில் குடியேறி விடுவது வழக்கமாக நடப்பது தான். ஆனால், வளர்ந்த நாடான நியூசிலாந்தில் இப்போது நடந்திருப்பது பலரும் எதிர்பாராத ஒன்று. அந்த நாட்டின் பிரதமராக, தொழிலாளர் கட்சி சார்பில் ஐந்தாண்டுக்கும் மேல் பதவி வகித்த ஜெசிந்தா ஆதெர்ன் (43). நல்ல வேலைவாய்ப்புக்காக ஆஸ்திரேலியாவில் குடியேறி விட்டார். நியூசிலாந்தில் இருந்த வீட்டை விற்றவர், அந்த தொகையை கொண்டு ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் அதை விட பெரிய வீடு வாங்கி விட்டார். இப்போது கணவர், குழந்தைகளுடன் அங்கு குடியேறியும் விட்டார். நியூசிலாந்து நாட்டினர், பிற



நாடுகளுக்கு குடியேறுவதில் ஆச்சர்யம் எதுவும் இல்லை. கடந்த நான்காண்டுகளில், வெளிநாடுகளுக்கு குடி பெயரும் நியூசிலாந்து நாட்டவர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

2025ல் மட்டும் 1 லட்சத்து 22 ஆயிரம் பேர், பிற நாடுகளில் குடியேறியுள்ளனர். இது, முந்தைய ஆண்டை காட்டிலும் 4 சதவீதம் அதிகம். ஆனால், 5 ஆண்டு பிரதமராகவும், 15 ஆண்டுகள் எம்.பி.,யாகவும் இருந்த ஒருவரே வேலைவாய்ப்பைகருத்தில் கொண்டு இன்னொரு நாட்டுக்கு செல்கிறார் என்பது தான் ஆச்சர்யமாக உள்ளது. ஆஸ்திரேலியாவில் ஜெசிந்தாவின் கணவருக்கும் நியூசிலாந்தை காட்டிலும் 50 சதவீதம் கூடுதல் சம்பளத்தில் வேலை கிடைக்கும் என்பது அவர்களது எதிர்பார்ப்பு. நியூசிலாந்தை காட்டிலும் ஆஸ்திரேலியாவில் குடும்பச் செலவுகளும் குறையும் என்று கணக்கிட்டு ஜெசிந்தா குடும்பத்தினர் குடி பெயர்ந்துள்ளனர்.

நியூசிலாந்து இருந்து பிற நாடுகளுக்கு செல்வோரில், 60 சதவீதம் ஆஸ்திரேலியாவுக்கு செல்கின்றனர். தற்போது ஆஸ்திரேலியாவில் 6 லட்சத்து 70 ஆயிரம் பேர் நியூசிலாந்து நாட்டவர் வசிக்கின்றனர். இது, நியூசிலாந்து நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 12.5 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

# நேபாள ஜென்ஸீ போராட்டம்: அரசிடம் அறிக்கை சமர்ப்பிப்பு

**காத்மாண்டு, மார்ச் 10:**

காத்மாண்டு: நேபாளத்தில் நடைபெற்ற ஜென் இஸட் இளைஞர்கள் போராட்டம் தொடர்பான அறிக்கை, இடைக் கால அரசிடம் சமர்ப்பிக் கப் பட்டுள்ளது.

நேபாளத்தில் அண்மையில் நடைபெற்ற நாடாளு மன்றத் தேர்தலில் அந்நாட்டின் முன் னாள் பிரதமரும், சிபிஎன்-யுஎம் எல் கட்சித் தலைவருமான கே.பி. சர்மா ஒளியை வீழ்த்தி, ராஷ்ட்ரீய சுதந்திர கட்சியின் இளம் தலைவர் பாலேந்திர ஷா பாலன் (35) வரலாற்றுச் சாதனை படைத்துள்ளார்.

கடந்த ஆண்டு ஜென் இஸட் இளைஞர்களின் போராட்டத் தைத் தொடர்ந்து பதவி விலகிய கே.பி.சர்மா ஒளியை எதிர்த்து, ஜாப்பா-5 தொகுதியில் ராஷ்ட் ரீய சுதந்திர கட்சியின் பிரதமர் வேட்பாளர் பாலேந்திர ஷா பாலன் போட்டியிட்டார். 'ராப்' இசைக் கலைஞரான பாலேந் திர ஷா பாலன், காத்மாண்டு நகர மேயராக இளைஞர்களின் நன்மதிப்பை ஏற்கெனவே வென்



றவர். விரைவில் இவர் பிரதமர் பதவியை ஏற்கவுள்ளார்.

நேபாள அரசின் ஊழல் மற்றும் சமூக ஊடக தடைகளுக்கு எதிராக கடந்த ஆண்டு செப்டம் பரில் இளைஞர்கள் (ஜென் இஸட்) போராட் டத்தில் குதித்தனர். இந்த ஜென் இஸட் போராட்டம் நாடு முழுவதும் தீவிரமடைந்து வன்முறை வெடித்தது. அரசு கட்டிடங்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தப்போராட்டத்தின்போது மொத்தம் 76 பேர் உயிரிழந் தனர். இதையடுத்து கே.பி. சர்மா ஒளி பதவி விலகினார். இடைக்கால பிரதமராக சுசீலா கார்கி நியமிக்கப்பட்டார்.

அடுத்த கட்ட நடவடிக்கை இந்தப் போராட்டம் தொடர் பாக உயர்நிலைக் குழு விசா ரணை நடத்த இடைக்கால அரசு உத்தரவிடப்பட்டது. அந்த விசாரணை முடிந்த நிலை யில், நேபாள இடைக் கால அரசிடம் அறிக்கையை விசா ரணை கமிஷன் நேற்று சமர்ப் பித்துள்ளது.

சிங்தர்பார் பகுதியில் அமைந் துள்ள பிரதமர் வீட்டில் இடைக் கால பிரதமர் சுசீலா கார்கி யிடம் இந்த அறிக்கை சமர்ப் பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வந்துள்ளது. இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள பரிந்துரைகளின் அடிப்படையில் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# ஆயுதங்களை ஒப்படைக்க ஹிஸ்புல்லாவுக்கு வலியுறுத்தல்



**பெய்ரூட், மார்ச் 10:**

லெபனான் வெளிவிவகார துறை மந்திரி யூசெப் ரக்கி, அரபு நாடுகள் கவுன்சிலின் வெளியுறவு துறை மந்திரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் பங்கேற்றார். அப்போது, வளைகுடாவிலுள்ள அரபு நாடுகள், ஜோர்டான் மற்றும் ஈராக் மீது ஈரான் நடத்தும் தாக்குதல்களுக்கு லெபனான் சார்பில் கடுமையான கண்டனங்களை பதிவு செய்தேன் என கூறியுள்ளார். இதுபோன்ற பகைமையான செயல்கள் சர்வதேச விதிகள் மற்றும் தரநிலைகளை மீறும் செயலாகும் என்று கூட்டத்தில் வலியுறுத்தினேன் என்றார். இதேபோன்று, ஈரானை பாதுகாக்கும் வேலையில் ஈடுபட்டு லெபனானின் உச்சபட்ச நலன்களை புறக்கணிக்கும் வகையில் மீண்டும் ஹிஸ்புல்லா செயல்பட்டு கொண்டிருக்கிறது. போரில் எந்த பங்கும் இல்லாத லெபனானை போருக்குள் இழுக்கிறது. இது வருத்தத்திற்குரியது. இதனால், இஸ்ரேல் ராணுவ நடவடிக்கைகளை தூண்டி விட்டு, லெபனானின் நகரங்களின் மீது தாக்குதல் நடத்தும் நிலையை உருவாக்கி உள்ளது. அதனால், ஹிஸ்புல்லா அமைப்பு உடனடியாக ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும். இதற்கான முடிவு லெபனான் அரசின் அவசரகால கூட்டத்தில் எடுக்கப்பட்டு உள்ளது என்று அவர் கூறினார்.

ஈரான் நாட்டை அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக இணைந்து வான்வழியாக கடந்த பிப்ரவரி 28-ந்தேதி கடுமையாக தாக்கின. இதில் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஈரானும் பதிலுக்கு இஸ்ரேலை தாக்கி வருகிறது. இந்த சூழலில், ஈரானுக்கு ஆதரவாக லெபனான் நாட்டில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேலுக்கு பதிலடி கொடுத்து வருகிறது. ஈரான் ஆதரவு பெற்ற இதன் தாக்குதலால், லெபனான் மீதும் இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. இதுபற்றி லெபனான் சுகாதார அமைச்சகம் இன்று வெளியிட்ட செய்தியில், நாடு முழுவதும் பல்வேறு இடங்களை இலக்காக கொண்டு இஸ்ரேல் இன்று தாக்குதல் நடத்தியது. இதில், 15 பேர் பலியாகி உள்ளனர். 15 பேர் காயமடைந்தனர். அமெரிக்காவால் பயங்கரவாத அமைப்பு என அறிவிக்கப்பட்ட, ஹிஸ்புல்லா அமைப்பு, இஸ்ரேல் மீது பதிலடி தாக்குதல்களை நடத்துவோம் என அறிவித்து உள்ளது. இதனால், லெபனான் தலைநகர் பெய்ரூட் மற்றும் தெற்கு லெபனான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது..

# ஈரானின் புதிய உச்ச தலைவராக மொஜ்தபா காமேனி அறிவிப்பு



அணுசக்தி ஒப்பந்தத்தில் கையெழுத்திட மறுத்ததால் ஈரான் மீது அமெரிக்கா - இஸ்ரேல் இணைந்து போர் தொடுத்துள்ளன. இந்த தாக்குதலில் ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்லப்பட்டார். மேலும் ராணுவ தளபதிகள் உள்பட உயர் அதிகாரிகளும் உயிரிழந்தனர்.

ஒரு வாரத்துக்கு மேலாக ஈரானில் போரிட்டு வரும் அமெரிக்கா - இஸ்ரேல் படைகள், தலைநகர் டெஹ்ரான் உள்ளிட்ட பல்வேறு நகரங்களை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகின்றன. ஈரான் மீது வலிமையான தாக்குதல் நடத்தப்படும் என்று எச்சரிக்கை விடுத்துள்ள அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு டிரம்ப், ஆயுதங்களை கைவிட்டு சரணடைய வேண்டும் என்று தெரிவித்துள்ளார். இதற்கு பதிலடி கொடுக்கும் விதமாக, அமெரிக்கா, இஸ்ரேலுக்கு எதிராக அடுத்த 6 மாதங்களுக்கு தொடர்ந்து தீவிரமாக போர் புரியும் வலிமை எங்களுக்கு இருக்கிறது என்று ஈரான் தெரிவித்துள்ளது. இதனிடையே ஈரானின் புதிய உச்ச தலைவரை தேர்வு செய்வதற்காக மதகுருமார் கவுன்சில் ஆலோசனை நடத்தியது. இந்த நிலையில், ஈரானின் புதிய உச்ச தலைவராக அயதுல்லா காமேனியின் மகன் மொஜ்தபா காமேனி தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

# லெபனானில் 'வெள்ளை பாஸ்பரஸ்' பயன்படுத்தி இஸ்ரேல் தாக்குதல்: மனித உரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

**பெய்ரூட், மார்ச் 10:**

லெபனான் நாட்டின் தெற்கு பகுதியில் அமைந்துள்ள குடியிருப்புகள் மீது இஸ்ரேல் வெள்ளை பாஸ்பரஸை கொண்டு அண்மையில் தாக்குதல் நடத்தியதாக சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட உலக நாடுகளில் இயங்கி வரும் அமெரிக்காவின் நியூயார்க்கை தலைமையிடமாக கொண்டுள்ள மனித உரிமை கண்காணிப்பகம் குற்றச்சாட்டு (ஹெச்.ஆர். டபிள்யூ) வைத்துள்ளது. அது குறித்து விரிவாக பார்ப்போம்.

கடந்த வாரம் 3-ம் தேதி அன்று இஸ்ரேல் தரப்பு லெபனான் மீது நடத்திய தாக்குதலில் வெடி மருந்துகளில் வெள்ளை பாஸ்பரஸை பயன்படுத்தி இருந்ததாக ஹெச்.ஆர். டபிள்யூ தெரிவித்துள்ளது. இது நச்சுத்தன்மை வாய்ந்தது என்றும், போர் குற்றம் என்றும் குற்றச்சாட்டு வைத்துள்ளது.

இதை புவியியல் சார்ந்த படங்கள் மூலம் சரிபார்த்து உறுதி செய்துள்ளதாக ஹெச். ஆர்.டபிள்யூ தெரிவித்துள்ளது. காற்றில் வெள்ளை பாஸ்பரஸ் படிமங்கள் இருந்ததாகவும் தெரிவித்துள்ளது. இந்த தாக்குதல் லெபனானின் தெற்கு பகுதியில் உள்ள யோஹ்மோர் நகரில் நடந்துள்ளது.

இதில் இரண்டு வீடுகள் மற்றும் ஒரு கார் தீப்பிடித்து எரிந்துள்ளது. அதை அணைக்கும் பணியில் உள்ளாட்சி அமைப்பு பணியாளர்கள் ஈடுபட்டதாகவும் ஹெச்.ஆர்.டபிள்யூ கூறியுள்ளது.

ஆக்ஸிஜனுடன் வெள்ளை பாஸ்பரஸ் தொடர்பு கொள்ளும்போது தீ பற்றும் என தகவல். இது போர் களத்தில் புகைத்திரை மற்றும் இருள் கொண்ட வானை ஒளிரச் செய்யவும் பயன்படுத்தப்படும் என தகவல்.

இதனால் பயங்கரமான தீக்காயங்கள், சுவாசக்கோளாறு, உடல் உறுப்பு செயலிழப்பு மற்றும் மரணத்தை ஏற்படுத்தும் என சொல்லப்படுகிறது. இது நச்சுத்தன்மை மிகுந்தது என தகவல்.

"குடியிருப்பு பகுதிகள் மீது இஸ்ரேல் ராணுவம் வெள்ளை பாஸ்பரஸை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியது சட்ட விரோதமானது. இது பொதுமக்களுக்கு மோசமான விளைவுகளை ஏற்படுத்தும். இந்த வகை தாக்குதலை இஸ்ரேல் உடனடியாக நிறுத்த வேண்டும். மேலும், இஸ்ரேலுக்கு வெள்ளை பாஸ்பரஸ் கலந்த வெடிமருந்து மற்றும் ஆயுதங்களை இஸ்ரேல் ராணுவத்துக்கு விநியோகிக்கும் அரசுகள் அதைக் கைவிட வேண்டும்.

மேலும், குடியிருப்பு பகுதிகளில் இந்த தாக்குதல் கூடாது என இஸ்ரேலுக்கு அழுத்தம் தர வேண்டும்" என்று லெபனானை சேர்ந்த ஹெச். ஆர்.டபிள்யூ ஆய்வாளர் ராம்ஸி கைஸ் கூறியுள்ளார்.



# “இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க பராமரிப்பு சார்ந்த பொருளாதாரம்”

## மாநிலங்களவைத் தேர்தல்: தம்பிதுரை, திருச்சி சிவா உள்பட 6 பேரும் போட்டியின்றித் தேர்வு!



## மேற்காசிய போர்: இந்தியா நிலைப்பாடு என்ன?

## ஈரானின் புதிய உச்ச தலைவராக மொஜ்தபா காமேனி அறிவிப்பு

## மடப்புரம் காவலாளி அஜித்குமார் மீது நிகிதா அளித்த நகை திருட்டு புகார் முடித்து வைப்பு


தமிழ்நாடு இ பேப்பர்.காம்

www. tamilnaduepaper.com

Tamilnaduepaper

சென்னை 10.03.2026 செவ்வாய்க்கிழமை இலவச இ-பேப்பர்